விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-8859)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 11 ஞாயிற்றுக்கிழமை (25.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 188

## பொது பல சேனாவை தள்ளி வையுங்கள்

# அதிகாரப் பகிர்வு அவசியமாகவுள்ளது

### புன்யசார தேரர் வலியுறுத்தல்

(கொழும்பு) நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தின் பின்னர் ஐக்கியத்தை ஏற்படுத்தி அரசியல் அதிகாரத்தை பகிரவேண்டும் என்ற நோக்கிலேயே மக்கள் எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர் என சுட்டிக்காட்டியுள்ள மகாகடவல சாஸ்திரபதி புன்யசாரதேரர், அஸ்கிரியபீடத் தேரர்கள் 'பொது பல சேனா மற்றும் ஞானசார தேரர் ஆகியோருக்காக தெரிவித்த கருத்துக்களை வாபஸ் பெற வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)



### விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வாகனமொன்றை கடந்து செல்ல முற்பட்டபோது விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் யாழ். 15 ☛

### இந்.மீனவர்கள் 14 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறும் இந்திய மீனவரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் கடந்த இரு நாட்களில் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி 15 ☛

### 3 நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி

(கொழும்பு)

உள்ளூர் சந்தையில் அரிசியை நிலையாகவும், தட்டுப்பாடு இன்றியும் வைத்திருப்பதற்காக மூன்று 15 ☛

## தமிழர்கள் ஏற்றுக்கொள்ளும் அதிகாரப் பகிர்வே அவசியம்

### ஜனாதிபதியிடம் இரா.சம்பந்தன் மீள வலியுறுத்து



(கொழும்பு)

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அர்த்தபுஷ்டியான அதிகாரப் பகிர்வே தேவையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் அரசாங்கத்திடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளதுடன். இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான 16 ☛

### மருத்துவர்களின் போராட்டம் வாபஸ்

## 4 விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் இணக்கம்

(கொழும்பு)

நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த அரச மருத்துவர்களின் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் கை விடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் நேற்று ஜனாதிபதியை சந்தித்த பின்னர் அறிவித்துள்ளார்.

இதன்படி நான்கு விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 15 ☛

### பூட்டிய வீட்டில் சடலம் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா குருமன்காட்டிலுள்ள பூட்டிய வீடொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. 15 ☛

### சவால் விட இடமில்லை

(மல்லாகம்)

அடிப்படைவாதம் கொண்ட சிறு பிரிவினர் நாட்டு மக்களைப்பணயக்கைதிகளாக்கி இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ரவி 15 ☛

### நாட்டின் நெருக்கடி நிலைக்கு மக்களே பொறுப்பு - ஜே.வி.பி

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைக்கு மக்கள் பொறுப்புக் கூற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அகில இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கத்தின் 12ஆவது மாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு சோகை நோய் ஏற்பட்டுள்ளது. இந்த நோய் ஏற்பட்டவருக்கு தான் என்ன செய்கிறேன் என்பது புரியாது.

இப்படியான அரசாங்கங்கள் நாட்டை அபிவிருத்தி செய்ததாக உலகில் 04 ☛

## மக்கள் பணியில் ஒருமித்தநிலை

### விக்னேஸ்வரன் - மாவை திடீர் சந்திப்பில் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் மீள் குடியேற்றம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம், அரசியல் கைதிகள் விடுதலை போன்ற விடயங்களில் வட மாகாணசபையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் 15 ☛



### நயினையில் இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் 04 ☛

## நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நபர்கள் தண்டிக்கப்படுவர்!

### நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் பல்வேறு சக்திகள் செயற்படுவதாகவும் டொலர்களை நம்பி வாழும் இவர்கள் நல்லிணக்கத்தை இல்லாமல் செய்து வருவதாகவும் நீதியமைச்சர் விஜயதாஸ 04 ☛

## இன மோதல் வெடிக்கும்

### அரசுக்கு பௌத்த பீடம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் இன மோதல் வெடிக்கும் தறுவாயில் உள்ளது என்பதை வெளிப்படுத்தி வருகின்றன.

எனினும் இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காப்பது மிகவும் பயங்கரமான விடயமாகும் என்று நான்கு பிரதான பௌத்த பீடங்களில் ஒன்றாகிய ராமஞ்ஞ நிகாய பீடம் எச்சரித்துள்ளது.

அரசாங்கம் சரியாக செயற்படாவிடின் பிரதான நான்கு பௌத்த பீடங்களும் இணைந்து நேரடியாக தலையிடவேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அரசாங்கத்திடம் அந்த பீடம் சுட்டிக்காட்டியுள்ளது.

ராமஞ்ஞ நிகாய பௌத்த தேரர்களின் விசேட 15 ☛

## நுளம்புகள் மூலமாக நுளம்புகள் ஒழிப்பு!

### டெங்கை கட்டுப்படுத்த புதிய திட்டம்

(கொழும்பு)

டெங்கு காய்ச்சலை பரப்புகின்ற நுளம்புகளை அழிப்பதற்கு புதிய இரண்டு வகை நுளம்புகளை உருவாக்கியுள்ளதாக அரச மருத்துவ பரிசோதனை நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள இந்த நிலையத்தின் சிறப்பு வைத்திய நிபுணர் சாகரிகா சமரசிங்க, இந்த இரு நுளம்பு வகைகளை தனது நிலையத்திலுள்ள பரிசோதனை கூடத்தில் உருவாக்கியுள் 15 ☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் பணியில்...

பினர்களும் இணைந்து செயற்படுவது தொடர்பில இணக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும், வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் நேற்று மாலை 5 மணிக்கு யாழ்.மாட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் திடீர் சந்திப்பு ஒன்று நடைபெற்றிருந்தது.

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலைக்கு பின்னர் குறித்த விடயம் தொடர்பில் மாவை சேனாதிராசாவுடன் கலந்துரையாடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால் முதலமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இடம்பெற்ற இந்த சந்திப்பிலேயே மேற்படி இணக்கம் காணப்பட்டிருக்கின்றது. சுமார் 1 மணி நேரம் வரை நடைபெற்ற மேற்படி சந்திப்பின் நிறைவில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் இந்த இடத்திற்கு வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சியை தந்துள்ளது. ஏனெனில் வெற்றிக்காக உழைத்த இடத்தில் இன்றைய சந்திப்பு நடைபெற்றுள்ளது. மேலும் வடக்கு மாகாண சபையில் ஏற்பட்ட குழப்பங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எழுத்து மூலமும் தொலைபேசி மூலமும் மேற்கொண்ட தொடர்பாடல்கள் மற்றும் மதத்தலைவர்களான யாழ்.மறை மாவட்ட ஆயர், நல்லை ஆதீன குரு முதல்வர் ஆகியோரது சமரச முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடினோம்.

வடக்கு மாகாண சபை எங்களுக்கு மிகப் பெரிய பலத்தைக் கொண்ட சபையாகும். மாகாண சபை பிளவுபட்டிருப்பது எமது இனத்தின் விடுதலைக்கு எவ்வகையிலும் உதவியாக இருக்கமுடியாது. அமைச்சுப் பதவிகளுக்காக சண்டைபோடுவதில் அர்த்தமில்லை. அப்படி இருக்கவும் கூடாது. சபையில் பிரச்சினைகள் ஏற்பட்டமைக்குக் காரணம் முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் இரு அமைச்சர்களைப் பதவியில் இருந்து நீக்குவதாகவும் ஏனைய இரு அமைச்சர்களை விடுப்பில் செல்லுமாறு கூறியதில் இருந்து ஆரம்பித்த பிரச்சினை தான் முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரை கொண்டு சென்றது. இவை தொடர்பில் விரிவாக ஆராய்ந்தோம்.

தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள சமரசத்திற்கு பின்னரான சூழ்நிலையில் எங்களுடைய இலக்கு மாகாணசபையில் அமைச்சுப் பதவிகளை எதிர்காலத்தில் ஏற்பது அல்ல. போராட்டங்களை நடத்துவது அல்ல. அமைச்சுப் பதவி என்பது ஒரு சிறிய விடயமாகும். எங்களுடைய முக்கிய விடயம் எங்களுடைய இனம் பல இலட்சக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்துள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து வருகின்ற நேரத்தில் பாராளுமன்றத்திலும் இதற்கான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்ற சூழ்நிலையிலும் மேலும் மீள்குடியேற்றம், இராணுவத்தினரால் காணி அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பரிகாரம் போன்ற விடயங்களிற்கு தீர்வு காணவேண்டியுள்ளது. நல்லாட்சி அமைக்கப்பட்டுள்ள போதும் அது மக்களுக்கு முழுமையான பலனை அளிக்காத நிலையில் இவை தொடர்பிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்பது தொடர்பில் இருவரும் கலந்துரையாடினோம். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பது தொடர்பில் வடக்கு மாகாண சபையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்காலத்தில் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதில் இணக்கப்பாட்டைக் கண்டுள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், வடமாகாண முதலமைச்சர், கூட்டமைப்பின் ஏனைய கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பிலும் இத்தகைய பிரச்சினைகள் எழாது செயற்படுவது தொடர்பிலும் இணக்கம் கண்டுள்ளோம். மேலும் தற்போது கிடைத்துள்ள சர்வதேச சந்தர்ப்பத்தை நாங்கள் முறையாக பயன்படுத்தி தமிழ்த்தேசியத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டு இயங்குவதற்கு இணங்கியுள்ளோம். எதிர்காலத்தில் இவ்வாறான சந்திப்புக்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களுடனும் முதலமைச்சருடனும் கலந்துரையாடுவது என்பதில் இணக்கம் கண்டுள்ளோம் எனவும் மாவை எம்.பி குறிப்பிட்டார். (செ-4,9)

## 4 விடயங்கள்...

அந்த நான்கு விடயங்கள் குறித்து குறிப்பிடுகையில்,

1.சைட்டம் நிறுவனத்திற்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல் மற்றும் பட்டமளிப்பை இடைநிறுத்துவதற்கான சட்ட நடவடிக்கையை விரைவில் பூர்த்தி செய்தல்.

2.சைட்டம் நிறுவனம் தொடர்பிலான அரசின் நிலைப்பாட்டை சட்ட மா அதிபர் ஊடாக உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்தல்.

3.இலங்கை மருத்துவப் பேரவையின் தலைவர் அல்லது பேரவையின் சுயாதீனத் தன்மைக்கு குந்தகம் ஏற்படுவதற்கு ஜனாதிபதி என்ற வகையில் இடமளிக்கப் போவதில்லை எனும் வாக்குறுதி.

4.சைட்டம் நெருக்கடிக்குள் ஏற்பட்ட முக்கிய பிரச்சினையால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலான தீர்வை வழங்குவதற்காக புதிய அணுகுமுறையை ஆரம்பித்தல் ஆகிய நான்கு விடயங்களுடன் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## பூட்டிய வீட்டில்...

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வவுனியா குருமன்காடு முதலாம் ஒழுங்கை பகுதியில் வசித்து வந்த நல்லையா சிவராசா (வயது-73) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை பிரஸ்தாப நபரின் மனைவி அவரது சொந்த ஊரான வட்டக்கச்சிக்கு சென்றிருந்த வேளை தனிமையில் வீட்டில் இருந்த பிரஸ்தாப நபர் சுய நினைவை இழந்து வீழ்ந்து இறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

குறித்த வீட்டின் மேல் பகுதியில் குடியிருப்பவர் பிரஸ்தாப நபரின் நடமாட்டங்கள் எவையும் காணப்படவில்லை என பூட்டியிருந்த வீட்டின் யன்னல் வழியாக எட்டிப்பார்த்த சமயத்தில் இவர் இறந்த நிலையில் கிடந்துள்ளார். உடனே கிராம சேவையாளருக்கு தகவல் வழங்கப்பட்டு கிராம சேவையாளர் உடனடியாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

அதேவேளை உயிரிழந்த நபர் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு விரைந்திருந்த வவுனியா பொலிஸார் குற்றவியல் அதிகாரிகளின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)

## சவால் விட...

கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால் ஜனநாயக விழுமியங்களை முழுமையாக மதித்து நடக்கும் தற்போதைய அரசாங்கத்தினால் அடிப்படைவாதிகளின் நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டு மௌனித்து இருக்க முடியாது என்றும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் நிதியமைச்சரான ரொனி டி மெல்லை சந்தித்து அவரது சுக நலன்களை விசாரித்து அறிவதற்காக கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்திற்கு வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று சென்றிருந்தார்.

முன்னாள் நிதியமைச்சரின் சுக நலன்களை விசாரித்தறிந்த அமைச்சர் ரவி கருணாநாயக்க பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, நாட்டில் தற்போது நிலை நாட்டப்பட்டுள்ள ஜனநாயகத்தை அர்த்தமற்ற சுதந்திரமாகப் பாவித்து சட்ட விரோத செயற்பாடுகளில் சிலர் ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டினார்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தை அபகீர்த்திக்கு உள்ளாக்கி நாட்டில் மீண்டும் அராஜக நிலைமையை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான குழுக்கள் செயற்படுவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் கருணாநாயக்க, இவ்வாறான குழுக்களை சட்டத்தின் பிடியில் கொண்டு வருவதற்காக பொலிஸார் மேலும் துரிதமாக செயற்பட்டு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரச மருத்துவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போது [illegible] நிலையிலுள்ள சில அரசியல்வாதிகளின் தூண்டுதல்களால் வீதியில் இறங்கியுள்ள சிறு குழுவினர் நாட்டின் எதிர்காலத்திற்கு சவால் விட இடமளிக்க முடியாது என்றும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## நுளம்புகள் மூல...

ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த புதிய இரு வகை நுளம்புகளை, பொதுவாக நுளம்புகள் பரவுகின்ற இடங்களில் பரப்பி விடுவதன் மூலம் டெங்கு காய்ச்சல் பரப்புகின்ற நுளம்புகளை ஆரம்பக் கட்டத்திலேயே அழித்துவிடலாம் என்று அவர் கூறினார்.

இந்த புதிய இரு நுளம்பு வகைகளை தற்போது மீரிகம, கண்டலம, குண்டசாலை, பேராதெனிய ஆகிய பிரதேசங்களில் பரப்பியுள்ளதாக தெரிவித்த வைத்திய நிபுணர் சமரசிங்க இந்த நடவடிக்கை வெற்றிகரமாக அமைந்துவிட்டதாக தெரிவித்தார்.

இந்த நுளம்புகளை டெங்கு காய்ச்சல் அதிகமாக காணப்படும் நகர் பகுதிகளில் பரப்புவதற்கான திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஆனால், இதன்மூலம் மட்டுமே டெங்கு காய்ச்சலை முழுமையாக கட்டுப்படுத்திவிட முடியாதென்று கூறிய மருத்துவர் சமரசிங்க, மக்களின் ஒத்துழைப்பு இதற்கு மிகவும் அவசியமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.(செ-11)

## தமிழர்கள் ஏற்றுக்...

வித்துவரும் நிலையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு அது சர்வஜன வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுதியான நிலைப்பாடு எனவும் மேற்படி சந்திப்பில் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருந்ததாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## இன மோதல் வெடி...

செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பு ஸ்ரீ போதிராஜ தர்ம நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் ராமஞ்ஞ நிகாய தலைவர் அக்க மஹா பண்டித வினயவிசாரத பூஜபாத நாபான பேம ஸ்ரீ மகாநாயக தேரர் தலைமையில் கலந்து கொண்ட உயர்நிலை பௌத்த தேரர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் கூறியதாவது, நாட்டில் இன்று இடம்பெற்று வரும் நிலைமைகள் மிகவும் மோசமான வகையில் அமைந்துள்ளன.

பௌத்தம் மற்றும் சிங்கள கொள்கைகள் அழிந்து வரும் நிலைமையில் இன்று அரசாங்கத்தின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த நாடு அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்ட காலத்தில் தனி சிங்கள பௌத்த கொள்கையில் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அதன் பின்னரான அரசியல் சூழ்நிலை இந்த நாட்டின் பௌத்த சிங்கள கொள்கையை படிப்படியாக அழித்துக்கொண்டு வருகின்றமையே உண்மையாகும்.

இன்று அரசாங்கம் தனது ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள ஒவ்வொரு அமைப்புகளை வைத்துக் கொண்டு நாட்டில் இனவாதத்தை பரப்பி வருகின்றது.

கடந்த அரசாங்கமும் இந்த அரசாங்கமும் தமது தேவைக்காக சில மத அமைப்புகளை இயக்கி அதன் மூலம் இனவாத அரசியலை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நாட்டில் சட்டம் நீதித்துறை சரியாக செயற்படும் என்றால் இந்த நாட்டில் இனவாதம் ஒருபோதும் தலைதூக்கப்போவதில்லை. எனினும் அரசியல் காரணிகளுக்காக இன்று இனவாதம் பரப்பப்பட்டு வருகின்றது.

கடந்த முப்பது ஆண்டுகளில் இந்த நாட்டில் ஆயுத யுத்தம் ஒன்று இடம்பெற்ற காலத்திலும் கூட இந்த நாட்டில் கிராமங்களில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.

பயங்கரவாதிகள் ஒருபுறம் மோதல்களை மேற்கொண்ட போதிலும் மக்கள் ஒற்றுமையாக செயற்பட்டனர். எனினும் யுத்தம் முடிவுக்கு வந்த இந்த குறிப்பிட்ட சில காலத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனவாதம் தலைதூக்கி நாட்டில் வன்முறைகள் தலைதூக்கியுள்ளன.

இப்போது நாட்டில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் நாட்டில் இன மோதல் ஒன்று வெடிக்கும் தறுவாயில் உள்ளது என்பதை வெளிப்படுத்தி வருகின்றன. இந்த மோதலை உடனடியாக தடுக்க வேண்டும். நாட்டில் எந்த மதமும் பாதிக்கப்படும் வகையில் எந்த சம்பவங்களும் இடம்பெறக் கூடாது.

இந்த நாட்டில் பௌத்தம் பிரதான மதமாக இருந்த போதிலும் நாட்டில் வாழும் சகல மக்களையும் பௌத்தர்கள் ஆகிய நாம் பாதுகாக்க வேண்டும்.

இந்த நாட்டில் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தி அதன் மூலம் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும். உலகில் எந்த நாட்டிலும் இல்லாத ஒரு இன ஒற்றுமை எம்மத்தியில் உள்ளது.

இந்த நாடு சகல மக்களையும் பிரதிபலிக்கும் நாடாகும். ஆகவே இங்கு சமாதானத்தை உறுதிப்படுத்த வேண்டும். எனினும் இந்த அரசாங்கம் மிகவும் மோசமான வகையில் மத விடயங்களில் செயற்பட்டு வருகின்றது.

சட்டம் சரியாக செயற்பட்டால் எந்த மதத்தவரும் குழப்பமடைய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அரசாங்கம் மௌனம் காப்பது மிகவும் பயங்கரமான விடயமாகும்.

நாம் பௌத்த தலைவர்கள் என்ற வகையில் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றோம். இந்த செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் நாம் நேரடியாக தலையிடவேண்டிய நிலைமை ஏற்படும்.

பிரதான நான்கு பௌத்த பீடங்களும் இன்று ஒரே நிலைப்பாட்டில் உள்ள நிலையில் விரைவில் எமது இணைந்த அறிக்கை வெளியிட நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எனினும் நாம் அவ்வாறு செயற்படுவதன் மூலம் அரசாங்கம் பாரிய பின்னடைவை சந்திக்க வேண்டி வரும். இங்கு உள்ள சகல பௌத்த சிங்கள மக்களும் பிரதான நான்கு பீடங்களில் ஏதோ ஒரு பீடத்துடன் இணைந்து வாழ்கின்றனர்.

எனவே நாம் எடுக்கும் முடிவை மக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்வார்கள். அதை அரசாங்கம் மறந்துவிடக் கூடாது என தேரர்கள் தமது கருத்தை தெரிவித்தனர். (செ-11)

## 3 நாடுகளிலிருந்து...

நாடுகளிடம் அரிசியைக் கொள்வனவு செய்வது தொடர்பான உடனடி பேச்சுவார்த்தை ஒன்றை இலங்கை ஆரம்பிக்கவுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட்பதியுதீன் தெரிவித்தார்.

நாட்டரிசி மற்றும் சம்பா ஆகிய அரிசி வகைகளையே அவசரமாக இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். கைத்தொழில் வர்த்தக அமைச்சில், இலங்கைக்கான தாய்லாந்து, பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசிய நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்த போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார். (செ-11)

## இந்.மீனவர்கள்...

யில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் இரு படகில் வந்து அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழகம் நாகை மாவட்டத்தை சேர்ந்த 8 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதே போன்று மன்னார் கடற்பரப்பில் நேற்றைய தினம் ஒரு படகில் சென்று அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மீனவர்கள் 8 பேரும் எதிர்வரும் யூலை மாதம் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதே நேரம் மன்னாரில் கைது செய்யப்பட்டவர்கள் இன்றைய தினம் மன்னார் கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (செ-9)

## விபத்துக்குள்ளான...

போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார் இதில் கொக்குவில் மேற்கை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பூதத்தம்பி சிவதரன் (வயது 38) என்பவரே உயிரிழந்த வராவார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் உணவு வாங்குவதற்காக மோ.சைக்கிளில் கடைக்கு சென்றுள்ளார். அப்போது முன்னே சென்ற முச்சக்கர வண்டி ஒன்றை வேகமாக கடந்து செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த பிக்கப் ரக வாகனத்தின் கண்ணாடிப்பகுதியில் மோதியுள்ளார், அப்போது நிலை தடுமாறி அவர் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோ.சைக்கிளுடன் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இதில் தலையிலும் தோளிலும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட பிரஸ்தாப குடும்பஸ்தர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார், இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் அதிகாலை உயிரிழந்துள்ளார்.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9.30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் பணியகத்தை இலங்கை உடன் ஆரம்பிக்க வேண்டும்

## அனைத்துலக மன்னிப்புச் சபை கோரிக்கை

(லண்டன்)

மிகவும் தாமதிக்கப்பட்டு விட்ட காணாமல் போனோருக்கான பணியகத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் அனைத்துலக மன்னிப்புச்சபை கோரியுள்ளது. அனைத்துலக மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பணிப்பாளர் பிராஜ் பட்நாயக் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கோரியுள்ளார்.

அந்த அறிக்கையில், இலங்கை மக்கள் இன்னும் நீண்ட காலத்துக்கு காத்திருக்க முடியாது. எல்லா சமூகங்களையும் சேர்ந்த பத்தாயிரக்கணக்கான குடும்பங்கள் ஏற்கனவே நீண்ட காலம் காத்திருந்து விட்டன.

கூடிய விரைவில் காணாமல் போனோருக்கான பணியகம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இலங்கையர்களின் காயங்களை நீதியால் மாத்திரமே குணப்படுத்த முடியும்.

பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில், காணாமல் போனோருக்கான பணியகத்தை உருவாக்குவது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும் " என்று மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## அடிப்படைவாத சிங்கள பௌத்தகுழு இன முறுகலை ஏற்படுத்த முயற்சி

### சந்திரிகா கடும் விசனம்



சிறிய அடிப்படைவாத சிங்கள பௌத்த குழுவொன்று இந்த நாட்டில் இன மற்றும் மதங்களுக்கிடையில்மோதலை உருவாக்கப்பாடுபட்டுக் கொண்டிருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

பௌத்த தர்மத்தின் அடிப்படையை சரியாக புரிந்து கொள்ளாத குழுவே இதில் ஈடுபட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (இ-7)

## ஜனாதிபதியின் யோசனையை நிராகரித்த இராணுவத் தளபதி

இராணுவ தளபதி கிரிஷாந்த டி சில்வாவிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த யோசனையை அவர் நிராகரித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வெற்றிடமாகவுள்ள பாதுகாப்பு சபை பிரதானி பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு அவரிடம்ஜனாதிபதி கோரியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு சபை பிரதானியான ஷீப் மார்ஷல் கோலித குணதிலக்க ஜூன் மாதம் 15ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார். இந்நிலையில் அந்த பதவி இன்னும் வெற்றிடமாக உள்ளமைக்கு இராணுவ தளபதியின் நிராகரிப்பே காரணம்என குறிப்பிடப்படுகின்றது.

இதனால் பாதுகாப்பு சபை பிரதானி அலுவலகத்தை மூடிவிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜனாதிபதி வழங்கிய சேவை நீடிப்பினாலே இராணுவதளபதிஇன்னமும்சேவையில்உள்ளார். குறித்த பதவியை நிராகரித்த இராணுவ தளபதி தனக்கு மீண்டும் சேவை நீடிப்பை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

## டெங்கு வைத்தியசாலையாக மாலபே 'சைட்டம்' கல்லூரி

மாலபேயிலுள்ள "சைட்டம்" தனியார் மருத்துவக் கல்லூரியை அரசாங்கம்வைத்தியசாலையாகப் பொறுப்பேற்று, அங்கு டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, அவைத்தலைவரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில், ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவால் கோரப்பட்ட விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே அவைத் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். (இ-7)

## முப்படையினரை அவமானப்படுத்தினால் பொறுக்க முடியாது

### பைசர் முஸ்தபா தெரிவிப்பு

முப்படையினரை அவமானப்படுத்துவதை எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது என அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தற்காலத்தில் எந்த பிரச்சினை ஏற்பட்டாலும் அதற்கு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சு, உள்ளூராட்சி தேர்தலை தொடர்புபடுத்திக் கொள்வதையே சில பின்னடைவான அரசியல் வாதிகள் வழக்கமாக கொண்டுள்ளனர் என்றும் அவர் கடிந்து கொண்டார். (இ-7)

## ஜனநாயகத்துக்கு சவால்விடும் போது மௌனமாக இருக்க முடியாது-அரசு



நாட்டு மக்களைப் பணயம் வைக்கும் வகையில், சிறிய தொரு அடிப்படைவாதக் குழு, ஜனநாயகத்துக்குச் சவால் விடும் போது, மக்களின் அரசாங்கம் ஒன்றினால் மௌனமாக இருக்க முடியாது என்று, வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

"ஜனநாயக உரிமைகள் என்ற போர்வையில், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தால், அவர் யாராக இருந்தாலும் எத்தகைய நிலையில் இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். சமூகத்தில் உறுதியற்ற நிலைமையை ஏற்படுத்தி, அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்த முனையும் தனிநபர்கள் மற்றும் குழுக்களின் மீது பொலிஸார் இன்னும் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## வைத்தியர்களின் வேலைநிறுத்த போராட்டம் மனிதாபிமானமற்றது - இராதாகிருஷ்ணன்

நாடளாவிய ரீதியாக தற்போது டெங்கு நோய் வெகுவாக பரவி வருகின்ற நிலையில், வைத்தியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் மனிதாபிமானமற்ற செயல் என கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத்தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். நுவரெலியா வலப்பனை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையொன்றில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"இன்று இலங்கையின் பல பகுதிகளிலும் டெங்குநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அரசாங்கமும் சுகாதார அமைச்சும் பல முக்கியமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. அதற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டிய வைத்தியர்கள் அதனை செய்யாமல் தாங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது ஒரு மனிதாபிமானமற்றசெயலாகும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## டெங்குநோய் தீவிரம்; சுகாதார அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் சில வைத்தியசாலைகள்

டெங்கு நோயாளர்களின் நலன் கருதி சில வைத்தியசாலைகள் தற்காலிகமாக சுகாதார அமைச்சின் கட்டுப்பாட்டிற்குள்கொண்டுவரப்பட்டுள்ளன.

டெங்கு நோயாளர்களின் சிகிச்சைக்காக பிலியந்தல, வேதர, தலங்கம, மினுவங்கொட, தங்கொட்டுவ உள்ளிட்ட சில பகுதிகளில் அமைந்துள்ள வைத்தியசாலைகளே இவ்வாறு சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. நாட்டில் டெங்கு நோய்ப்பரவல் தீவிரமடைந்துள்ளதால், வைத்தியசாலை இரசாயன சேவையை 24 மணித்தியாலம் முன்னெடுப்பதற்கும் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. (இ-7)

## காணாமற்போனோர் பணியகத்தை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும்

### பிரித்தானியாவும் வலியுறுத்து



(கொழும்பு)

காணாமல் போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்டம், இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதை பிரித்தானியா வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ், தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவு ஒன்றில்,

இலங்கையில் காணாமற் போனோருக்கான பணியக சட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதனைஉடனடியாக நடைமுறைப்படுத்துவது, எல்லா சமூகங்களையும் சேர்ந்த மக்கள் தீர்வு ஒன்றை கண்டறிவதற்கு உதவியாக அமையும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பும் காணாமற் போனோருக்கான பணி[illegible]கம் மிக அவசியமான[illegible]" என்று அண்மையில் [illegible]த்து வெளியிட்டிரு[illegible] என்பது குறிப்பிட[illegible] (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது இருபது - 20 இல் தென்னாபிரிக்கா அணி த்ரில் வெற்றி பெற்றது




இங்கிலாநதுக்கு எதிரான 2ஆவது இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட இருபது - 20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில் 2ஆவது போட்டி நேற்று முன்தினம் டவுண்டன் கவுண்டி மைதானத தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி தென்னாபிரிக்க அணியின் ஸ்மட்ஸ், ஹென்றிக்ஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஹென்றிக்ஸ் 7 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த விக்கெட் காப்பாளர் மொசேலே 15 ஓட்டங்களில் வெளியேறினார். மற்றொரு தொடக்க வீரர் ஸ்மட்ஸ் 45 ஓட்டங்களில் வெளியேறினார்.

அதன்பின் வந்த அணித் தலைவர் டி வில்லியர்ஸ் 20 பந்தில் 4 பவுண்டரி, 3 சிக்சருடன் 46 ஓட்டங்களும், பெஹார்டியன் 21 பந்தில் தலா இரண்ட சிக்ஸ், பவுண்டரிகளுடன 32 ஓட்டங்களும் எடுக்க தென்னாபிரிக்கா 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 174 ஓடடங்கள் குவித்தது.

பின்னர் 175 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களம் இறங்கியது. தொடக்க வீரர்களாக ஜேசன் ரோய், பல்லிங்ஸ் ஆகியோர் களம் இறங்கினார்கள. பில்லிங்ஸ் 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து பேர்ஸ்டோவ் களம இறங்கினார்.

மற்றொரு தொடக்க வீரர் ரோய், பேர்ஸ்டோவ் உடன் இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப் படுத்தினார். இதனால் இங்கிலாந்து அணி வெற்றியை நோக்கி சென்றது. இங்கிலாந்து அணி 13.4 ஓவரில் 125 ஓட்டங்கள் எடுத் திருக்கும்போது பேர்ஸ்டோவ் 37 பந்தில் 8 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 47 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அப்போது இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு 38 பந்தில் 50 ஓட்டங் கள் மட்டுமே தேவைப்பட்டது.

அடுத்து ஜேசன் ரோய் உடன் லிவிங்ஸ் டோன் ஜோடி சேர்ந்தார். 16-வது ஓவரின் முதல் பந்தில் பீல்டர் ஸ்டம்பை நோக்கி பந்து வீசும்போது, ரோய் அதை தடுக்கும் வகையில் ஓடியதால் ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டது. இதற்கு obstructing the field என்று பெயர். ரோய் 45 பந்தில் 9 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 67 ஓட்டங கள் குவித்து சோகத்துடன் வெளியேறினார்.

ரோய் ஆட்டமிழந்தபோது இங்கிலாந்து 15.1 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 133 ஓட்டங கள் எடுத்திருந்தது. இங்கிலாந்து வெற்றிக்கு 29 பந்தில் 42 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

தென்னாபிரிக்காவின் நேர்த்தியான பந்து வீச்சால் பட்லர் (10), மோர்கன் (6) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

லிவிங்ஸ்டோன் 14 ஓட்டங்களுடனும், டாவ்சன் ஒரு ஓட்டங்களுடனும் களத்தில் இருந தனர். பெலுக்வாயோ அந்த ஓவரை வீசினார். முதல் மூன்று பந்திலும் இங்கிலாந்து அணியால் தலா ஒரு ஓட்டம் மட்டுமே எடுக்க முடிந் தது. 4-வது பந்தில் லிவிங்ஸ்டோன் ரன் அவுட் மூலம் ஆட்டம் இழந்தார். இருந்தாலும அந்த பந்தில் ஒரு ஓட்டம் கிடைத்தது.

இதனால் கடைசி இரண்டு பந்தில் 8 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 5-வது பந்தை டவ்சன் பவுண்டரிக்கு விளாசினார். கடைசி பந்தில் நான்கு ஓட்டங்கள் தேவை என்ற



நிலையில், அவரால் ஓட்டம் எதுவும் எடுக்க முடியவில்லை.

இதனால் தென்னாபிரிக்க அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. 4 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தி கிறிஸ் மோரிஸ் ஆட்ட நாயகன தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது.

3-வது மற்றும் கடைசி பேட்டி இன்று கார்டிஃபில் நடக்கிறது. இதில் வெற்றி பெறும் அணி தொடரை கைப்பற்றும்.

# டிப்பர் - மோ.சைக். விபத்து குழந்தை உட்பட மூவர் காயம்

(மல்லாவி)

டிப்பர் வாகனமொன்று மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர்களை மோதித்தள்ளிய விபத்தில் குழந்தை உட்பட மூவர் காயம் அடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் புத்துவெட்டுவான் ஊடாக ஐயங் குளம் செல்லும் மல்லாவி வீதியிலுள்ள மருதங் குளம் சந்தியில் நடைபெற்றுள்ளது.

பழைய முருகண்டியிலிருந்து கொக்காவில் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனம் புத்துவெட்டுவானில் இருந்து தேராங் கண்டல் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரை மோதித்தள்ளியதில் இவ் விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த ஐயங்குளம் வைத்தியசாலை நோயாளர் காவு வண்டி மூலம், காயம் அடைந்தவர்கள் ஏற்றப்பட்டு மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-2)

# செல்ஃபி எடுக்க முயன்ற நபர் பரிதாப மரணம்

(கொழும்பு)

அரநாயக்க தோதல்ஓய, பெரவில பிரதேசத்தில் நீர்வீழ்ச்சி ஒன்றில் இருந்து செல்ஃபி எடுக்க முயற்சித்து தவறி கீழே விழுந்த 34 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறையில் இருந்து உஸ்ஸபிட்டிய அலுபாத பிரதேசத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றிருந்த எம்.கே. சேனக்க மதுரங்க என்பவரே நேற்று மதியம் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஏழு இளைஞர்கள் தோதல்ஓய பிரதேசத்தில் நீர்வீழ்ச்சி ஒன்றை பார்க்க சென்றுள்ளனர்.

இவர்கள் மொரட்டிய பாலத்திற்கு அருகில் செல்ஃபி எடுக்கும் நேரத்தில் இ... இளைஞர் நிலைதடுமாறி கீழே விழுந்து படுகாயமடைந்து உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகள் நடைபெறும் வரை சடலம் அரநாயக்க வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவம் குறித்து அரநாயக்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# நோன்பு நாளை

புனித ரமழான் மாதத்தை மூப்பதாக நிறைவு செய்வதென கொழும்புப் பெரிய பள்ளி வாசலில் நேற்று மாலை கூடிய பிறைக் குழு தீர்மானித்துள்ளது.

நாட்டின் எப்பாகத்திலும் ஷவ்வால் மாதத்துக்கான தலைப்பிறை தென்படாததை உறுதி செய்ததையடுத்து இந்த தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

இதன்படி நாளை திங்கட்கிழமை நோன்புப் பெருநாள் எடுப்பதாகவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளி வாசல் பிறைக்குழு தெரிவித்தது. (செ-11)

## அதிகாரப் பகிர்வு ...

மதங்களின் சுதந்திரத்திற்கான அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட மாகல்கடவல சாத்திரபதி புண்யசார தேரர், அஸ கிரிய பீட தேரர்கள் ஞானசார தொடர்பில் வெளியிட்ட கருத்தினை மீளப்பெற வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் குறிப்பிட்ட அவர், பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரரின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதாக அஸ்கிரிய பீடம் தெரிவித்துள்ளது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பொது பல சேனா அமை ... களுத்தறை பிரதேசத்தில் முஸ்லிம் கடைகளு...ள் உட்புகுந்து தாக்குதல்களில் ஈடுபட்டது. ...த சந்தர்ப்பத்தில் மகாநாயக்கர்கள் அவர்களு... அறிவுரை கூறியிருக்கலாம். அது தொடர்பி... எனினும் அந்த சந்தர்ப்பத்தில் எதுவும் செய்யவில்லை. ஆகவே சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கருத்துக்களை வெளியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. என்றார்.

இங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட தேரர், புதிய யாப்பின் ஊடாக அதிகாரத்தை பகிர்ந்து நாட்டில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென வலியுறுத்தினார்.

நாட்டில் 30 வருடமாக நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஐக்கியத்தை எற்படுத்தி அதிகாரத்தை பகிர வேண்டுமென்ற நோக்கிலேயே இந்த நாட்டு மக்கள் இருக்கின்றனர். அதற்கு இடையூறு விளைவிக்க வேண்டாமென நாம் கேட்டுக்கொள்கின்றோம். இதனால் நாட்டில் மீண்டுமொறு யுத்தம் ஏற்படலாம். அரசியல் கொள்கை ஒருவருக்கு ஒருவர் வேறுபடலாம். யாருக்காவது அடுத்த ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ வருவதற்கு ஆசை இருக்கலாம். ஆகவே யாரோ வழங்கும் அறிவுரைக்கு அமைய செயற்பட ஆரம்பித்தால் மகா சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும். பன்முகத் தன்மையை ஏற்றுக்கொண்டு நாட்டில் அதிகாரம் பகிரப்பட வேண்டும். அதிகாரத்தை பகிர்வதே மனித சமூகத்தின் நிகழ்ச்சி நிரலின் முதலாவது அம்சமென இந்த உலகம் ஏற்றுக்கொண்டுள் ளது. எனவும் குறிப்பிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிட்ட ஹனெட்டியே சமித்தஸ்ரீ சாக்ய புத்த தேரர் பௌத்த பிக்கு ஒருவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென ஒரு வரையறை காணப்படுவதாகவும், எனினும் ஞானசார தேரர் அவ்வாறு நடந்துகொள்வதில்லை எனவும் குற்றம்சாட்டினார்.

பௌத்த தேரர் ஒருவருக்கு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென ஒரு வரையறை இருக்கின்றது. அதற்கேற்ற வகையிலேயே நடந்துகொள்ள வேண்டும். தர்கா நகர், தெமட்டகொட உள்ளிட்ட பல இடங்களில் அத்துமீறி நுழைகின்றனர். பல இலட்சம் பெறுமதியான சொத்துக்களை வீணடித்த திருடனை பிடிக்க இவர்களால் முடியவில்லை. இதனை என்னவென கூறுவது? ஜனாதிபதியும், பிரதமரும் அமைச்சர்களும் இன்னமும் குகைக்குள்ளேயே இருக்கின்றார்கள் என்றார் அவர். (செ-11)

## நாட்டின் நெருக்கடி ...

எங்கு குறிப்பிடப்படவில்லை.

நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடிக்கு மக்கள் பொறுப்புக் கூறவேண்டும். திருடர்கள், ஊழல்வாதிகள் என அறிந்தே மக்கள் அப்படியான நபர்களுக்கு தேர்தலில் வாக்களித்தனர் எனவும் லால்காந்த குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## நயினையில்...

ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த திருவிழாவும் தொடர்ந்து

## நல்லிணக்கத்தை...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்து மாநாயக்க தேரர்களை நேற்று சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

விகாரைகளை பாதுகாப்பது மற்றும் புத்த சாசனத்தின் முன்னேற்றம் குறித்து மாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடினேன். பல்வேறு சக்திகள் உருவாகி மத நல்லிணக்கத்தை சீர்குலைக்க தேவையற்ற பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

இவற்றால் நல்லிணக்கத்திற்கு தடையேற்படும். அத்துடன், தேசிய நல்லிணக்க வேலைத் திட்டம் குறித்து கலந்துரையாடினோம்.

மேலும், தேசிய நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் வகையில் எவராவது பேசினால், நாங்கள் அந்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் எனவும் அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாதேவ ஆச்சிரமம்
# MAHADEVA ASHRAMAM

மகாதேவாய நம

**Regd. No : SVP 104 / 44 of 29.10.1976 T.P : 024 3243443**
ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

**அறிவித்தல் :** 11.06.2017 ஞாயிற்றுக்கிழமை சுவாமிகள் தலைமையின் கீழ் நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஆட்சிக் குழு தெரிவுகள் ஏகமனதாக நடைபெற்றன.

**அறங்காவலர் சபை**
1. ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
2. திரு.ஆ.சிவநாதன்
3. திரு.க.இராசரட்ணம்
4. திரு.சி.சிவமோகன்
5. திரு.ந.நிமலன்
6. திரு.க.விவேகானந்தன்
7. திரு.மு.சிவபாலன்

**நிர்வாக சபை**
1. தலைவர்:- ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
2. உப தலைவர் :- திரு.ஆ.சிவநாதன்
3. பொருளாளர் :- திரு.க.சுகநீதன்
4. செயலாளர் :- திரு.ச.ஸ்ரீமுருகன்
5. உப செயலாளர் :- திரு.கு.வேணுகோபன்

**நிர்வாக உறுப்பினர்கள்**
1. திரு.மா.பேரம்பலம்
2. திரு.பா.குலசிங்கம்
3. திரு. ச.திரவியச்செல்வம்
4. திரு.வி.கிருபானந்தன்
5. திரு.கு.நித்தியானந்தன்
6. திரு.கு.சுமுகலிங்கம்
7. திரு.வ.கனகரத்தினம்
8. திரு.அ.நாகேந்திரன்
9. திரு.இ.அமிர்தலிங்கம்

**கணக்காய்வாளர்**
சி.வெற்றிவேலாயுதம் அன்கோ
(நல்லூர்)

**அன்பே சிவம்**
**ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் குருபீடாதிபதி**

(9559)



# அதிரடி விலையில் டிஷ் டிவி இணைப்புகள்




டிஸ் டிவி ரிசீவர் Rs.2100/-*
டிஷ் ஆண்டெனா Rs.1200/-
LNB Rs.300/-
FULL Set Rs.4200/- (1 month free)

அத்துடன் அனைத்து cable டி.வி உபகரணங்களும் மிக குறைந்த விலையில்

| | |
|---|---|
| Rg 6 cable | Rs.1000/- |
| RG 6 GEL CABLE | Rs.2200/- |
| Ofc 6 Core fiber | Rs.35/- |
| Cable amp | Rs.2200/- |

மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்
* அக்டிவேசன் தனி
Dish tv recharge மிக குறைந்த கட்டணத்தில்.

தொடர்பு கொள்ளவும்:-
0710986228/ 0710986224

(C-8848)



# AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY
## TP : 021 205 7455

- சகல வைபவங்களுக்குமான உயர்தர உணவுகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
- வட மாகாணத்தில் அதிகூடிய உணவு உற்பத்தியாளர்கள்.
- வடக்கு முழுவதற்கும் இலகுவான விநி-யோக முறை.
- மிக மிக சுத்தமான கைதடி உணவுத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.




**ஆச்சி (FOOD FACTORY) ஆச்சி**
**ஹொட் பூட் ரெஸ்ரோரன்ஸ்**

கைதடி கிழக்கு, கைதடி. 147, பலாலி வீதி, திருநெல்வேலி.
**TP:-021 222 5001**

(C-8874)


# இராசி பலன்

25.06.2017
(ஆனி 11, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
பிரதமை காலை 6.57 மணிவரை
துதியை பின்னிரவு 4.48 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 3.11 மணிவரை
சுபநேரம் 8.55 - 10.25 மணிவரை
இராகுகாலம் 4.25 - 5.55 மணிவரை
நயினை அம்பாள் கொடியேற்றம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | சூரி.புத. செவ். சந் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ஆயிலியம்<br>இரவு 9.30 மணிக்கு<br>கட-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**இடபம்:** உறவுகள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், மாற்றினத்தவர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், அம்பிகை வழிபாடு இன்பம் தரும், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கௌரவமான நாள், பயணங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பக்குவமாய் பேசி காரியம் சந்திப்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வரலாம்.

**துலாம்:** தொழில் வளர்ச்சியில் அக்கறை காட்டுவீர்கள், தடைகள் விலகி தனவரவுகள் ஏற்படலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பணப்பற்றாக்குறை ஏற்படலாம், எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மகரம்:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலன் சீராகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்தைத் தவிர்க்க விழிப்புணர்வு நடவடிக்கை



போக்குவரத்து சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று பொலிஸ் போக்குவரத்து பிரிவினரின் ஏற்பாட்டில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. கொழும்பிலிருந்து வருகை தந்த போக்குவரத்துப் பிரிவின் அதிகாரிகளும் யாழ்ப்பாண போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி,காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றஞ்சித் மாசிங்க ,உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த, பருத்தித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் ஜெயலத், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், ஹாட்லிக் கல்லூரி அதிபர் ரி.முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். விழிப்புணர்வு கருத்தரங்கினையடுத்து வீதியில் மாணவர்கள் எவ்வாறு பயணம் செய்வது ,விபத்துக்களை எவ்வாறு தவிர்ப்பது என்ற செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. (இ-60)



கட்டைவேலி கூட்டுறவு சங்கத்தினால் நெல்லியடி வடக்கு கல்வத்தை கிராம பொது மக்களின் நன்மை கருதி அண்மையில் கிளை ஒன்று சங்க உப தலைவர் செ.சபாநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. (படங்கள்:-மகாலிங்கம்)

## ஆன்மீக அருளுரைகள்

கோப்பாய் தெற்கு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு வலி. கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தால் நடத்தப்படும் ஆன்மீக அருளுரைகள் கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளன. இவ் ஆன்மீக அருளுரைகள் தின மும் இரவு 7 மணிமுதல் 8 மணி வரை ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலய மண்டபத்தில் வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளாந்தனால் நிகழ்த்தப்படவுள்ளன. (இ-3)

## சீரற்ற குடிநீர் விநியோகம் கரவெட்டி மக்கள் பாதிப்பு

கரவெட்டி மத்தி, கரவெட்டி கிழக்கு ஆகிய கிராமங்களில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் வழங்கப்பட்டு வரும் பொருத்துக் குழாய் மூலமான நீர் வழங்கல் கடந்த 2 மாதங்களுக்கு மேலாக மக்கள் பாவனைக்கு போதுமானதாக கிடைக்கவில்லை என அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர். இவ்விடயம் குறி த்து மேலும் தெரியவருவதா வது,

குறித்த பிரதேசங்களுக்கான நிர் விநியோகமானது அத்துரு குடிநீர் திட்டத்திலிருந்து காலை, மாலை என இரு வேளைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தற்போது இப்பிரதேசங்களுக்கு பருத்தித் துறை வல்லிபுரம் பகுதியிலிருந்து நீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் இப்பிரதேசங்களிற்கான நீர் விநியோகம் நள்ளிரவு 12 மணி முதல் 2 மணிவரை மட்டுமே கிடைக்கப்பெறுவதாகவும் தினமும் குடிநீர் பெறுவதற்காக ஒரு கிலோமீற்றர் தூரம் வரை செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதிமக்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-10-108)

யாழ்.செய்திகள்

## 4.1 மில்லியன் நிதியில் மீன்பிடி இறங்குதுறை



(யாழ்ப்பாணம்)

பலாலி வடக்கு ஜெ/251 கிராமஅலுவலர்பிரிவில்யுஎன். டி.பி. நிறுவனத்தினால் மீன்பிடி இறங்குதுறை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற் பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பலாலி வடக்கு அன்ரனிபுர மக்கள் இடம்பெயர்ந்து பருத்தித் துறை கற்கோவளம் பிரதேசத்தில் வசித்து வந்தனர். கடந்த வருடம் மீள்குடியேற்றப்பட்டு தமது வாழ்வாதாரமான மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர்.

எனினும் மீன்பிடி இறங்குதுறை அமைக்கப்படாமையால் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். இந் நிலையில் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்க யு.என்.டி.பி. நிறுவனத்தினால் 4.1 மில்லியன் ரூபா செலவில் இறங்குதுறை அமைத்துக்கொடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-10-91)

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம் சரவணை பள்ளம்புலம் சங்குதுறை ஸ்ரீ சிவஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம் பெறவுள்ளன. (இ-3)

## இலட்சார்ச்சனை

சாவகச்சேரி நுணாவில் கந்தசுவாமி கோயில் வைரவர் இலட்சார்ச்சனை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்களும் காலை, மாலைஎன இரு வேளைகளும் இடம்பெறவுள்ளன. (இ-10-10)



நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் சமுர்த்தி பிரிவால் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பிரதேச செயலர் சி.ஜெயகாந் தலைமையில் புகை த்தல் மற்றும் போதைப்பொருள் பாவனை ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை உளநல வைத்தியரும் இறப்பு, பிறப்பு பதிவா ளருமான பிறிற்றோ டக்ளஸால் நடத்தப்பட்டது. இதில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பின் நிர்வாகிகள், சமுர்த்திப் பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-கீயுமன்)



சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் கடந்த புதன்கிழமை மாலை பாடசாலை அதிபர் மகேந்திரன் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பரிசுகளை வழங்கி வைத்ததுடன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.குமரன் நிறுவுநர் நினைவுப்பேருரையாற்றினார். விருந்தி னர்களுடன் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# BRITISH COLLEGE OF ENGLISH



யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

**IELTS** எமது கல்வி நிலையம் British Council இன் அங்கீகாரம் பெற்ற Registration Centre ஆகும்.

எம்மிடம் IELTS கல்வி கற்பவர்களுக்கு நாம் வழங்கும் விசேட சலுகைகள்.

- இலவசமாக 2 நூல்கள் வழங்கப்படும்.
- British Council இன் Library இல் சென்று நூல்களை வாசிக்க அனுமதி அட்டை
- விரும்பிய நேரம் Listening வந்து செய்யக்கூடிய வசதிகள்.
- எமது Advanced Spoken English வகுப்பில் சேர்ந்து படிக்க இலவச அனுமதி.

**OUR TARGET IS BAND : 9**

IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.
**Pearson English Course Level B2**
எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.

வகுப்புக்கள் இப்போது நடைபெறுகின்றன.



எமது கல்வி நிலையம் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சிறந்த நிலையம் என British Council னால் Awards வழங்கி கௌரவிக்கப்பட்ட நிலையமாகும்.

**COURSE SCHEDULE** Mon, Tues, Wed, Thus 60 Hours 8.30 - 11.30, 5.00 - 7.00
Saturday & Sunday 60 Hours Time: 8.30 - 12.00

**IELTS LIFE SKILLS A1, B1**

IELTS - LIFE SKILLS வகுப்பில் சேர்ந்து கற்பவர்களுக்கு எமது Advanced Spoken English வகுப்பில் இலவசமாகக் கற்கும் வசதி செய்யப்படும்.

**IELTS Registration Centre for British Council**

**BRITISH COLLEGE OF ENGLISH**
Palaly Road, Urumpirai, Jaffna. (உரும்பிராய் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக)
Tel : 021 222 0384 , 077 880 3887

சி-8860


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:24 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:கனடா PR<br>தொ.இ: B/5293 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 29 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/3232 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 24 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/5294 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 44<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/3233 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 19 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/5295 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 40<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:DIPLOMA/ஆசிரியர்<br>தொ.இ: G/3235 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 49<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BA/தனியார் தொழில்<br>தொ.இ: B/5297 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 27<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்:BSC/அரசதொழில்<br>தொ.இ: G/3241 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லக்ஸ்மி மருத்துவ ஆய்வுகூடம் -யாழ். வீதி மானிப்பாய்

(மானிப்பாய் அந்தோனியார் கோவில் அருகாமை மக்கள் வங்கி முன்பாக)
July 31 வரை எமது ஆய்வு கூடத்தில் பின்வரும் பரிசோதனைகள் கீழ் வரும் கட்டணத்துடன் செய்வித்து தரப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| Lipidprofile -650/= | TSH- 650/= | Bloodurea 325 /= | Serum Creatinine 325/= | SGOT 325/= |
| SGPT 325/= | CRP 325/= | HIV/AIDS 1100/= | ECG 200/= | Blood Grouping 325/= |

லக்ஸ்மி மெடிக்கெயாரின் "ஆரோக்கியமான ஆற்றல் மிகு சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்பும் செயற்திட்டத்தில்" பெருகிவரும் மக்கள் கூட்டத்தில் நீங்களும் ஒரு அங்கத்தவராக இணைந்து பயனடையுங்கள்.

❖குறைந்த கட்டணம் ❖விரைவான சேவை ❖துல்லியமான ஆய்வுகள் ❖முன்நிலையில் நின்று ஆய்வுகளை மேற் கொள்வதும் ❖இடைவிடாத தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியுடையதுமான ஆய்வகம்.

10/04/2016 தொடக்கம் எமது ஆய்வு கூடத்தில் உயர் நவீன தொழில் நுட்பத்தின் கூடிய துல்லியமான ஆய்வறிக்கையை தரக் கூடியதுமான புதிய இயந்திரங்கள் மூலம் டிஜிற்றல் தொழில் நுட்பத்தில் ஆய்வுகள் மேற்க் கொள்ளப்படுகின்றன.

உணவகங்கள், விடுதிகள், திருமண மண்டபங்கள், வெதுப்பகங்கள் போன்றவற்றில் கடமை புரியும் அலுவலர்களுக்கான பரிசோதனை அறிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

❖வாரர்ந்தம் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் Dr. சுகந்தன் நோயாளர்களை பார்வையிடுகின்றார்.

(பின்வரும் தொகுதிப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன) Package Test
Diabetic Package, Kidney Function Test, Liver Function Test, Thyroid Function Test, T.B Package, STD Package, Leprosy Package, Fever Package

ஆய்வு கூடத்திற்கு வர முடியாத நோயாளர்களுக்கு விசேட ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மானிப்பாய் நவாலி தவிர்ந்த ஏனைய பிரதேச மக்கள் எம்மிடம் ஆய்வுகளை மேற்க் கொள்ளும் சிகிச்சை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு இதே கட்டணத்தில் ஆய்வுகளை மேற்க் கொள்ளலாம்.

இது வரை எம்முடன் தொடர்பில் இல்லாத சிகிச்சை நிலையங்கள் எம்மிடம் தொடர்பு கொண்டு எமது சேவையை பெற்றுக் கொள்ளலாம்.

"உங்களின் புன்னகையே எங்களின் மகிழ்ச்சி"

தொடர்புகளுக்கு 021 790 4444
காலை 6.30 தொடக்கம் மாலை 9.30 வரை தொடர்பு கொள்ளலாம்.

(கி-9564)

## ஷஷ்டியப்த சாந்தி வைபவ விழா

(60 வயது நிறைவு)

**சிவஸ்ரீ யோக கேதீஸ்வரசர்மா**
**தனலட்சுமி அம்மா** தம்பதியினரின் 60 வயது நிறைவை முன்னிட்டு வாழ்த்தி வழங்கும் வாழ்த்து



அறவிலே வள்ளுவன் போல
ஆற்றலிலே அகத்தியர் போல
இளமையிலே என்றும் மார்க்கண்டேயர் போல
ஈவதிலே நிகர் கர்ணனைப் போல
உண்மையிலே என்றும் அரிச்சந்திரன் போல
ஊடலிலே நல்ல காதலர்களாக
என்றுமே கோபம் அறியாதவராய்
ஏழ்மையிலும் குசேலரைப் போல்
ஐயமில்லா வாழ்வு பெற்று
ஒற்றுமையில் நிகர் காக்கையைப் போல்
ஓதலிலே நல் ஆசானைப் போல்
ஔவையின் வயதைத் தாண்டி
ஆனந்த பெருவாழ்வு வாழ வாழ்த்தி
வணங்குகிறோம்.

**வாழ்த்துவோர் :**
**மருமகன் ச.சாந்தரூபசர்மா**
**மகள் : சா.சுவஸ்த்திகா**
**மற்றும் பேரப்பிள்ளைகள்**
**சா. ஸ்மிருதிகா, சா.ரித்விகா**

(C-8879)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
02. பெறுகையானது பொது நிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 27:06.2017 தொடக்கம் 17.07.2017 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000 /- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
05. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து 18.07.2017 ஆம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 05.07.2017 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்
07. கேள்விப் பிணை வைப்புத் தொர்கையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT , Tar நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | சங்குவேலி வீதி, உடுவில் | 4.74 | 02 மாதம் | C8 | 48000.00 |
| 2 | புட்டிஒல்லை வீதி, உடுவில் | 2.30 | 02 மாதம் | C8 | 23000.00 |
| 3 | பத்தானை 3ம் வீதி. தாவடி | 2.48 | 02 மாதம் | C8 | 25000.00 |
| 4 | அரசடி குறுக்கு வீதி, உடுவில் | 1.13 | 1½ மாதம் | C9 | 12000.00 |
| 5 | காளி வீதி, இணுவில் | 1.10 | 1½ மாதம் | C9 | 11000.00 |
| 6 | துல்மினியத்தோட்ட 3ம் வீதி, சங்குவேலி | 1.05 | 1½ மாதம் | C9 | 11000.00 |
| 7 | பேச்சிஅம்மன் வீதி, உடுவில் | 0.64 | 1½ மாதம் | C9 | 7000.00 |
| 8 | மல்வம் இடுகாடு சுற்றுமதில் அமைத்தல் | 0.69 | 1½ மாதம் | C9 | 7000.00 |
| 9 | நீர்தாங்கி அமைத்தல், கொல்களம் | 0.45 | 02 மாதம் | C9 | 5000.00 |

தவிசாளர்,
பிரதேசசபை பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(கி-8827)

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் பயங்கரவாதிகளாக செயற்படுகின்றனர்

# அமைச்சர் ராஜித சாடல்



எக்காரணம் கொண்டும் இல வசக் கல்வியைச் சீரழிக் கமாட்டோம் என சபையில் உறுதிபடத் தெரிவித்த சுகா தார் அமைச்சர் ராஜித சேனா ரத்ன, சைட்டம் குறித்த விசேட அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்தவாரம் சமர்ப்பிக்க வுள்ளதாகவும் குறிப்பிட் டார். தற்போது முழு நாட்டிற்கும் அரச வைத்தியர்கள் சங்கத் தினர் பயங்கர வாதிகளாக மாறியுள்ளதாக சாடிய அமைச்சர் ராஜித, பிறந்த குழந்தையை குளிப்பாட்டி விட்டு வீசுமாறு கோரியே போராட்டங்கள் நடை பெறு வதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக மாணவர் கள் மீதான தாக்குதல், வைத்தியர் களின் பணிப் புறக்கணிப்பு தொடர்பில் கூட்டு எதிர்க் கட்சி யினால் சமர்ப்பிக்கப்பட்ட சபை ஒத் திவைப்பு வேளை பிரேர ணைக்கு பதிலளித்து உரை யாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் மட்டும் பயங்கர வாதமாக விடுதலை புலிகள் உள்ளனர். ஆனால் முழு நாட்டிற்கு அரச வைத்திய அதி காரிகள் சங்கத்தினரே பயங் கரவாதிகளாக உள்ளனர். காலோ பொன் சேகா முன்னர் சைட்டம் ஆதரவு கொள் கையைக் கடைப்பிடித்தார். ஆனால் தற்போது திசை மாறி யுள்ளார். அவரது காலத்தை நீடிப்பது தொடர்பில் நாம் பேசித் தீர்மானிப்போம்.

அரசியல் பின்னணியில் மருத்துவ சபை செயற்பட் டது. சைட்டம் கல்லூரியில் தர மில்லை. இருப்பினும் முன் னர் நெவில் பெர்னாண் டோவை வைத்து காய் நகர்த் தினர். தற்போது இருக்கும் விசேட நிபுணர்கள் அனை வரும் தனியார் வைத்திய நிறுவனமான வட கொழும்பு வைத்திய கல்லூரியில் இருந்தே வந்தனர்.

வைத்திய பீடத்தில் மாண வர்கள் எத்தனை பேர் உள் ளனர் என்று பார்க்க வேண் டும். அங்கு பிக்குகள் உள் ளார்களா? என்றும் பார்க்க வேண்டும். அண்மையில் பல்கலைக்கழக மாணவர் கள் ஒன்றாகக் கூடினர். அங்கு நடத்தப்பட்ட வாக் கெடுப்பில் அதிக பெரும்பான் மையினர் வகுப்புக்குச் செல்லவே தீர் மானித்தனர் என அவர் மேலும் தெரி வித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கம்பன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வின் காலை நிகழ்வுகள் நேற்றைய தினம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்றன. (படங்கள்: உ.சாளின்)



சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் 80ஆவது அமுதவிழா அதிபர் வண.ப.சிவலோகநாததேசிகர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. தாபகர் சித்தியவான் கணபதிப்பிள்ளையின் உருவச்சிலைக்கு குடும்பத்தினரால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது.பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தம்பதியினர் கலந்து சிறப்பித்தனர். பரிசளிப்பும் மாணவரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன .

# சீனாவில் கடும் நிலச்சரிவு

## 100இற்கும் அதிகமானோர் மாயம்

(பீஜிங்)

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட கடும் நிலச்சரிவில் சிக்கி 100 இற்கும் அதிகமான பொதுமக்கள் மண்ணில் புதைந்திருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் தென் மேற்கு மாகாண மான சிச்சுவானில் இருக்கும் மலைப் பகுதியில் உள்ள மண் மற்றும் பாறைகள் நேற்றுக் காலை திடீரென சரிந்து விழத் தொடங்கியது.

மலைச் சரிவில் உள்ள ஜின்மோ என்ற கிராமத்தில் இருக் கும் 40 வீடுகள் இந்த மண்சரிவில் புதைந்தன.

இக்கிராமத்தில் சுமார் 100 பேர் மண் சரிவில் சிக்கியுள்ளதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

மண் சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருவதாக அந் நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

100 இற்கும் அதிகமானோர் மண்ணில் புதைந்துள்ளதால் அவர்களின் நிலை குறித்து அச்சம் ஏற்பட்டுள்ளது.

சீனாவில் சமீப காலமாக நிலச்சரிவு சம்பவங்கள் அதிகளவில் நிகழ்கின்றன.

கடந்த ஜனவரி மாதம் மத்திய ஹூபை மாகாணத் தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8)


ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ-து)
ஒட்டுசுட்டான்.

# பதவி வெற்றிடம்

ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளதால் தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரிகளில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும் மாவட்ட ரீதியில் தகுதியான விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் யாவும் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாக சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான். என்னும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ 30.06.2017 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரியின் வயதெல்லை 18-40 வயது வரை. கூட்டுறவு சேவையிலுள்ளோர்க்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாதென்பதுடன், கூட்டுறவு நிறுவனத்தில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கும் போது நிறுவனத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

1. களஞ்சிய முகாமையாளர் 208/15
   சம்பள அளவு : 13,515.00 - 110 X 10 -120 X 10 = 15,815.00

கல்வித் தகைமை :

அ) கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் 02 (இரண்டு) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 17ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 04 (நான்கு) வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த சாதாரண தரம் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (சி-8878)

தலைவர்,
ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு பலநோக்கு க[illegible]
வித்தியாபுரம்,
ஒட்டுசுட்டான்.



யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் வரையறுள்ளது

# கேள்விப்பத்திரம் கோரல்

உட்கூரை அமைத்தல் (லெவல் சீற் அடித்தல்), வர்ணம் பூசுதல்

எமது சமாச அலுவலகத்திற்கு உட்கூரை அமைத்தல்,வர்ணம் பூசுதல் ஆகிய வேலைகளுக்கான கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் அலு வலக நேரத்தில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 10.07.2017 இற்கு முன் தலைவர், யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், 95 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல், நிராகரித்தல் தொடர்பில் சமாசத்தின் பணிப்பாளர் சபையின் முடிவே இறுதியானது.

தலைவர்,
யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்,
95, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-8876)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 80 | 100 | 160 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 80 | 100 | 120 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 300 | 400 | 400 | 350 | 300 |
| தக்காளி | 140 | 200 | 140 | 160 | 160 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 80 | 70 |
| கோவா | 120 | 200 | 150 | 200 | 160 | 120 | 150 |
| கரட் | 200 | 400 | 250 | 300 | 320 | 350 | 300 |
| பூசணி | 100 | 100 | 80 | 80 | 100 | 80 | 80 |
| புடோல் | 60 | 120 | 50 | 80 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 80 | 80 | 60 | 60 |
| சின்னவெங்காயம் | 270 | 400 | 300 | 320 | 400 | 250 | 280 |
| பெரியவெங்காயம் | 90 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 130 | 160 | 160 | 100 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 160 | 80 | 120 | 160 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 50 | -- | 160 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 150 | 60 | 120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 150 | 80 | 120 | 120 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 150 | 100 | 120 | 120 | 140 | 100 |
| கறிமிளகாய் | 200 | 400 | 140 | -- | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 400 | 150 | 300 | 200 | 260 | 250 |
| போஞ்சி | 200 | 400 | 200 | 200 | 200 | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 80 | -- | 140 | 100 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 20 | 30 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 80 | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 55 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | -- | -- | 300 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 200 | -- | 280 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 150 | -- | 80 | 120 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 100 | 10 | 40 | 40 | 20 | 30 |
| [illegible] | 10 | 50 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | 200 | -- | -- | 120 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நாகம் வழிபட்ட நாயகி'

# இன்று கொடியேற்றம் காண்போம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர் கபடு வாராத நட்பும் கன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழுபிணியிலாத உடலும் சலியாத மனமும் அன்பகலாத மனைவியும் தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும் தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு துன்பமில்லாத வாழ்வும் துய்ய நின் பாதத்தில் அன்புமுதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலையாழி அறிதுயிலுமாயனது தங்கையே! ஆதி கடவூரின் வாழ்வே! அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி! அருள் வாழி! அபிராமியே!



சாந்தியும் சமாதானமும் நிறைந்த புண்ணிய பூமியாகிய நயினாதீவில் அம்பிகை எழுந்தருளி உலகெங்கிலுமுள்ள ஆன் மாக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். உலகத்துக்குத் தாயாகிய அன்னை பராசக்தி பல சக்திபீடங்களில் அமர்ந்திருக்கின்றாள். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் புவனேஸ்வரி பீடமாக அமர்ந்து அருள் பாலிக்கின்றாள். இலங்கைத் திருநாட்டில் இப்புனித ஆலயத்தைப் போன்ற தொன்மையும் கீர்த்தியும் வாய்ந்த சக்திபீடம் பிறிதொன்றில்லை எனலாம். தனது அளப்பெரும் கருணையினால் உயிர் வர்க்கத்தை அரவணைத்துக் காத்து வருகின்றாள் அன்னை. ஒரு சர்ப்பம் நெடுநாள் இங்கே வசித்து தவஞ் செய்து தனது சாபம் நீங்கப் பெற்றது. அதனைத் தனது திருமேனியில் அணிந்து சாப நிவர்த்தி செய்தமையால்தான் இங்கு எழுந்தருளிய அம்பிகை நாகபூஷணி என்னும் திருநாமம் உடையவளாக விளங்குகிறாள். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சிறப்புகளைக் கொண்டமைந்த நாகபூஷணி அம்பாள் பய பக்தியுடன் வழிபடக்கூடிய வழிபாட்டுத் தெய்வமாகவும் சிறப்புற்று விளங்குகின்றாள். சாந்தியும் அருளும் அனுக்கிரகமும் நிறைந்த அற்புத நாயகியாகிய நாகபூஷணியை அனுபூதியாளர்கள் இதயத்தில் இருத்தி தினமும் பூஜித்து வருவதனால் ஆன்மபலம் பெறுகின்றனர்.

மக்களின் துயர் துடைக்கும் அருள் நிலையங்களாக ஆலயங்கள் இருக்கின்றன. காலத்துக்குக் காலம் ஆலயத்தில் திருப்பணிகள் தடையின்றிச் சிறப்புடன் நடைபெற வேண்டும். அன்பும் பக்தியும் சிரத்தையும் கொண்டு அன்பர்கள், அடியார்கள் உருகி உருகி வழிபட்டு ஆறுதலடைய வேண்டும். பிரார்த்தனையிலே தான் உடலும் உயிரும் உளமும் மனமும் அசைக்கமுடியாத சக்தியைப் பெறும்.

உலக மக்கள் இந்து மதத்தவர்கள் பலரும் அறிந்த புனிதத்தலம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே பூர்வீகமான பழம் பெருமையும் மகிமையும் கொண்டதாய் அமைவது, நாகர்களதும் இந்திரனதும் வழிபாட்டுத் தலமாய் அமைந்தது, தமிழ்க் காப்பியமான மணிமேகலையிலே மணிபல்லவத்தீவு எனப்பட்டது, சம்புத் தீவு என்றும் பணிபுரம் மணித்தீவு என்றும் அழைக்கப்படுவது, வணிகர்களுடனும் பௌத்த மதத்தின் கௌதம புத்த பெருமானின் திவ்ய சரிதத்துடனும் தொடர்பு கொண்டமைவது, சாசன சான்றினாலே கடல் வணிகத் தொடர்பை இன்றும் மெய்ப்பித்து நிற்பது, கடலிலே வெளித்தோன்றும் பாம்பு சுற்றிய கல், கருடன் கல் என்பனவற்றினால் ஐயுறும் அறிஞர்களையும் நாத்திகர்களையும் மெய்யறிவு பெற்றுத் தேறுமாறு உணர்த்தி அறிவுச்சுடர் ஒளியேற்றிக் கொண்டிருப்பது தூய்மையான நாகவழிபாட்டினை இவ்வாலயத்தில் காணலாம். புராதன காலம் தொட்டே நாகவழிபாடு இவ்வாலயத்தில் நடைபெற்று வருகின்றது. முன்னதாக நாக வழிபாட்டில் தொடங்கி காலப்போக்கில் நாகபூஷணி வழிபாடாக வளர்ந்து நினைவுச்சின்னமாக நயினை நாகபூஷணி விளங்குகின்றாள். அடியார்கள் நாகபூஷணி மீது பற்று வைத்து நாக சாந்தி செய்வதற்காக நயினாதீவுக்கு வருகின்றார்கள். நாக சாந்தி செய்வதன் மூலம் நாகதோஷம் நீங்குகின்றது என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் காணப்படுகின்றது. நாக தோஷத்தை நிவர்த்தி செய்து அம்பிகையின் அருளால் பிள்ளைப் பாக்கியம் பெற்றவர்கள் பலர். காலாதி காலமாக அடியவர்கள் முழு நம்பிக்கையோடு அம்பிகையைத் தரிசித்து நற்பேறடைந்துள்ளார்கள். அடியார்கள் அனு தினமும் உயிரைக் கையில் பிடித்த வண்ணம் அலைகடலில் நீந்தி அருட்கடலை நாடிவந்து நெக்குருகி நின்று நினைந்து அம்பிகையை வழிபடும் பக்தியே பக்தி.



### *நாக அர்ச்சனை செய்த நாகபூஷணி*

முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை நாகம் ஒன்று பூஜித்து வந்துள்ளது. ஒரு நாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற் பொருட்டுபூக்கள்கொய்துகொண்டு புளியந் தீவிலிருந்து கடல் வழியாக நயினாதீவுக்கு வரும் வழியில் கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக் கொண்டிருந்தது. கருடனும் அந்நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயுள்ள கல்லொன்றின் மீது அமர்ந்து இருந்தது. இவ்வண்ணம் இவையிரண்டும்பகைமை கொண்டிருக்கும் சமயத்தில் அக்கடல் வழியாக மரக்கலத்தில் சென்று கொண்டிருந்த வணிகன் ஒருவன் (மாநாய்க்கன்) அந்நாகத்தின் பயத்தைக் குறிப்பாலுணர்ந்து மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான். உனது செல்வம் யாவற்றையும் கொண்டுவந்து நாகம்மாள் கோயிலுக்குக் கொடு[illegible]னால் விலகுவேன் என்றது கருடன். வணிகனும் அவ்வனமே செய்வதாக உறுதியளிக்க கருடன் அங்கிருந்து விலகிச் சென்றது. நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டுக்குத் திரும்பினான். நடந்தவற்றை எல்லாம் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவே வணிகனும் மனைவியும் நித்திரை செய்யும் போது ஒரு பேரொளி தோன்றி அவர்களது கண்களைச் சிறுதி நேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்த போது நாகரெத்தினக் கற்கள் அவ்வறையில் இருப்பதைக் கண்டார்கள்.

நயினை அம்பிகையின் திருவருள் இது எனக் கருதி நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச் சென்று வடகிழக்குக் கடற் கரையில் நாகம்மாளுக்கு சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள். இத்தகு சிறப்புகளோடு விளங்கும் நயினாதீவு நாகபூஷணியம்மையின் இவ்வருட மஹோற்சவம் (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அன்னை கொடியேறி வருகி[illegible] திருக்காட்சியினை உலகம் பூராகவும் வாழும் இந்து மக்கள் பலரும் நயினாதீவில் ஒன்றுகூடுகின்ற காட்சியினைக் காணலாம். நயினாதீவு இந்திரலோகம் போல் காட்சியளிக்கின்றது.

அலைபாயும் ஆழ்கடலில் அடியார் கூட்டம் ஆர்ப்பரித்து கரையேறி அருளே சேர்க்க தலைவாயில் கோபுரத்தின் முன்னே கூடித் தம்வசத்தை இழந்து நின்று தாயே! என்ற நிலையான உன்னுருவம் நினைத்து உள்ளம் நெக்குருக நின்றுருகும் தெய்வக் காட்சி கலையாது நயினையுறை நாகம்மாளே! கண் பணிப்பக் கொடியேறி அருளும் தாயே!

இன்று நயினாதீவில் இந்திரலோகம் எனப் போற்றத்தக்க வகையில் அம்பிகையின் ஆலயத்தில் சிறப்பான பல வகைப்பட்ட பாரிய திருப்பணிகள் கும்பா பிஷேகத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆலய உட்பிரகாரத்தில் நிரந்தர சீமெந்துக் கூரை இடுதல், சீமெந்துக்கூரை, திராவிட சிற்ப வேலைப்பாடுகளுடன் நவீனப்படுத்தல், புதிதாக தூண்கள் அமைத்து திராவிட சிற்ப முறைப்படி அழகுபடுத்தல், ஆலய சுற்றுமதில்கள் அமைத்தல், அம்பிகையின் தோற்றம் கொண்ட சிலைகள் அமைத்தல், இரதோற்சவ இளைப்பாற்று மண்டபம், புதிய கருமபீடங்கள் அமைத்தல் இன்னோரன்ன பல திருப்பணிகள் இடம் பெற்றுள்ளன. ஆலய கிழக்கு வெளிவாசலில் 108 அடி உயரமான இராஜ கோபுரம் சிற்ப வேலைப்பாடுகளுடன் அழகுறக் காட்சி தருகின்றது. திருப்பணிகள் பல தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதை அடியார்கள் பலர் அம்பிகையைத் தரிசிப்பதற்கு அம்பாள் ஆலயத்திற்கு சென்று நேரில் கண்டு மகிழ்வதையும் அருட்கடாட்சத்தைப் பெற்றுக் கொள்வதையும் நாம் நேரடியாகக் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆழ்கடலில் அடியார் கூட்டம் அலைமோதிக் கரைசேர்த்து அம்பிகையின் கோபுரத்தின் முன் தாயே! என்று உள்ளம் நெக்குருகி நின்று கண்ணீர் மல்கி அம்பிகையை வழிபடும் காட்சி அருட் காட்சியாகும்.

அம்பிகையின் மஹோற்சவத்தைக் கண்டுகளிக்கவும் அருளமுதைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் அடியார்கள் நயினையம்பதிக்கு வருகை தரவுள்ளார்கள். குறிப்பாக இவ்வருட மஹோற்சவத்தைக் கண்டுகளித்து, வேண்டிய வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் நயினையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான அடியார்களும் ஏனைய வெளிநாடுகளில் வசிக்கும் அடியார்களும் அம்பிகையைத் தரிசிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பெருமளவில் நயினையம்பதியில் கூடுவார்கள்.

ஆண்டுதோறும் அம்பிகையைத் தரிசிக்க வருகின்ற பல்லாயிரக் கணக்கான அடியார்களுக்கு அமுது வழங்குகின்ற பெரும்பணியை சிறந்த முறையில் அமுதசுரபி அன்னதான சபையினர் செய்து வருகின்றனர். 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பெரும்பணி தொடர்ந்து ஐம்பத்தேழு வருடங்களாக நடைபெற்று வருகின்றது. அம்பிகை அன்னபூரணியாக நின்று அமுதசுரப்பியில் அமுது சுரக்கின்றாள். அமுத சுரபியில் அள்ள அள்ளக் குறையாமல் அமுது சுரந்து கொண்டேயிருக்கின்றது.

அன்னை ஸ்ரீ நாகபூஷணியின் தெய்வீகத் திருவருள் அடியார்கள் அனைவருக்கும் இனிதே கிடைக்க வேண்டுமென மனமுருகிப் பிரார்த்தித்து அன்னையின் பாதக் கமலங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

**நயினை நா.க.குமாரசூரியர் (J.P)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழரசுக் கட்சிக்கு செல்லத் தயாரில்லை

## அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழரசுக்கட்சிக்கு நான் தாவிவிட்டதாக சிலர் என் மீது சேறு பூசியுள்ளனர் எனத் தெரிவித்த வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், அவர்களாகவே கட்சியை விட்டு என்னை வெளியேற்றினாலும் நான் தமிழரசுக் கட்சிக்கு செல்லத்தயாரில்லை. ஆனால் ஜனநாயகத்துக்கு விரோதமாக எனது கட்சி செயற்பட்டால்மட்டுமே கட்சியை விட்டு வெளியேறுவேன் எனவும் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து நியதிச் சட்டம் தொடர்பான கலந்துரையாடல் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலை இயக்கத்தில் இருந்து எந்த சந்தர்ப்பத்திலும் தமிழரசுக்கட்சிக்கு நான் தாவவில்லை. அவ்வாறு சில உறுப்பினர்கள் என்மீது சேறு பூசியுள்ளனர். எனது கட்சியில் இருந்து தாவிச் சென்று முதலமைச்சருக்கு எதிராக அவரை பதவியில் இருந்து நீக்க செயற்பட்டதாக தெரிவித்துள்ளார்கள். அது உண்மையில்லை.

சட்டரீதியாக இரு நீதிபதிகள், ஒரு அரச அதிபர் விசாரணை மேற்கொண்டு வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் முதலமைச்சர் செயற்படவில்லை என்ற அதிருப்தியின் காரணமாகத் தான் அன்றைய தினம் நாம் ஒன்று சேர்ந்து அவ்வாறு செயற்பட்டோம்.

அதன் பின்னர் பல மாற்றங்கள் இடம்பெற்று முற்றுப் புள்ளிக்கு வந்துள்ளது. கெட்ட பெயரோடு வெளியில் செல்ல நான் தயாராக இல்லை. தற்போது அந்த அறிக்கையின் அடிப்படையில் முதலமைச்சர் இயங்குகிறார்.

எமக்கான விசாரணைக் குழு நியாயமானதாகவும் சட்டபூர்வமானதாக தெரிவுக் குழுவில் இருந்து உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் பொழுது. நான் ஒரு மாதம் அல்ல பதவியை இராஜினாமா செய்தும் கூட விசாரணைக்கு ஒத்துழைப்பேன். கடந்த மாகாணசபை அமர்வு வினைத்திறனாக நடைபெற்றுள்ளது. அவ்வாறு தான் வரும் காலத்திலும் நடைபெற வேண்டும்.

எனது அமைச்சில் இருந்து சிறிய தொகையும் நான் எடுக்கவில்லை. அவ்வாறு நான் எடுத்ததாக உறுதிப்படுத்தினால் இரு மடங்காக திருப்பிக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் அமைச்சர்களுக்கு எதிராக விசாரணைகள் வரும். அதற்காக தொடர்ச்சியான விசாரணைக் குழுக்கள் அமைத்தால் விசாரணை மாகாண சபையாக தான் இருக்கும். அமைச்சர்கள் மேல் சந்தேகம் இருப்பது நிரூபணமானால் தான் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

மாகாண சபை வினைத்திறனாக இருக்க வேண்டும் எனில் விட்டுக் கொடுப்புடனும் தூய்மையான தன்மையுடன் ஆட்சி செய்ய வேண்டும்.

அத்துடன் எனது கட்சி உறுப்பினர்கள் இணைந்து 4 அமைச்சர்களையும் மாற்ற வேண்டும் என முதலமைச்சருக்கு கடிதம் கையளித்திருப்பது வேதனையாகவுள்ளது. கட்சியை விட்டு என்னை வெளியேற்றினால் போவதற்கு தயாராகவில்லை. ஆனால் ஜனநாயகத்துக்கு விரோதமாக எனது கட்சி செயற்பட்டால் அவர்களிடம் நேரடியாக கூறிவிட்டு வெளியேறுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)


அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும்

# யாழ். கம்பன் விழா-2017

மூன்றாம் நாள் , காலை நிகழ்வுகள்

காலம்:- இன்று 25.06.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
இடம்:-கம்பன் கோட்டம், நல்லூர்.

**மங்கல விளக்கேற்றல்:**
திரு. ஆழ்வார்ப்பிள்ளை ஸ்ரீ (பிரதேச செயலர், நல்லூர்)

**கடவுள் வாழ்த்து:**
திரு. இ. சுரசாகித்தியன்

**தலைமையுரை:**
பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

**தொடக்கவுரை:**
திரு. எஸ். சத்தியசீலன்
(செயலர்,மீன்பிடி, போக்குவரத்து அமைச்சு –வட மாகாணம்)



கவிஞர் சோ. பத்மநாதன்

**தனியுரை:**
கவிஞர். சோ. பத்மநாதன்
"கம்பனில் அறிமுகம்"



கவிஞர் சி.சிவகுமார்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை



திரு.எஸ்.சத்தியசீலன்

**கவியரங்கம்**
தலைவர்: கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார்
பொருள்: "கம்பசூத்திரக் கனவுகள்"

| | |
|---|---|
| பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்! | ச. முகுந்தன் |
| சுற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்! | நாக. சிவசிதம்பரம் |
| போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது! | கிண்ணியா அமீர் அலி |
| திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்! | த.ஜெயசீலன் |
| கொள்வார் இலாமைக் கொடுப்பாருமில்லை! | த. சிவசங்கர் |
| நிலம் சுரக்கும் நிறை வளம்! | ஸ்ரீ.பிரசாந்தன் |

மாலை நிகழ்வுகள்
காலம்:- இன்று 25.06.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி
இடம்:-ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம், நல்லூர்.

**மங்கல இசை:**– திரு.த. உதயசங்கர் குழுவினர்
**மங்கல விளக்கேற்றல்** திரு.சி.ராஜ்குமார் தம்பதியர்
(அதிபர், ஹரிகணன் பிறிண்டேர்ஸ்)
**கடவுள் வாழ்த்து:**– திரு. ந. பரந்தாமன்
**தலைமையுரை:**– கௌரவ சி. சிறீதரன் (பாராளுமன்ற உறுப்பினர்)
**தொடக்கவுரை:**–திரு.ஜி. ஸ்ரனிஸ்லஸ்
(சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் – யாழ்ப்பாணம்)



கௌரவ சி.சிறீதரன் (பாராளுமன்ற உறுப்பினர்)



திரு.ஜி.ஸ்ரனிஸ்லஸ் (சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்)

**நாடக அரங்கு** இன்று சந்திக்கும் இவர்கள்....

| வள்ளுவராக... | கம்பராக... | வில்லியாராக... |
|---|---|---|
| வி.அசோக்குமாரன் | இ.ஜெயராஜ் | இரெ.சண்முகவடிவேல் |

| | |
|---|---|
| கூனி, சகுனி – | எஸ். சிவலிங்கராஜா, த.நாகேஸ்வரன் |
| தசரதன்,திருதராட்டிரன் – | இரா.செல்வவடிவேல், ந.கணேசமூர்த்தி |
| கும்பகர்ணன், கர்ணன் – | ந.ஐங்கரன், இ.சர்வேஸ்வரா |
| இராமன், தர்மன் – | சி.கஜன், லோ.துஷிகரன் |
| இராவணன், துரியோதனன் – | செ. சொபிசன், ச.லஸீசன் |
| அனுமன், கண்ணன் – | அ.வாசுதேவா, சோ.கோகுலன் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இ) அகில இலங்கை கம்பன் கழகம்





## நாற்றிசை அடியவர்கள் போற்றும் நாயகி

நயினை நகர் நானிலமதனில் நவில் நாகபூஷணி
நாற்றிசை அடியவர்கள் போற்றும் நாயகி
நாக வடிவதனில் நல்நடனம் புரியும் நர்த்தகி
நாடிவரும் அடியவர்களின் நாமத்து நாயகி
நயினை நகர் உறையும் நம் நாயகியே
வெல் வினையை வேரறுக்கும் தாயவளே
கொடியேறும் நாயகியே எம்
கொடு வினையை நீக்கி அருளுமம்மா.....

*சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்*

## "தரணி யெங்கும் சாந்தி நிலவிட கொடியேற்று"

அம்மா உமையே ஆதி நாயகி நாகபூஷணி கொயேற்று
அம்பல நாயகி அன்னை பராசக்தி கொடியேற்று
சிம்மா சனியே திரிபுர சுந்தரி சிவசக்தி கொடியேற்று
சிவரூபிணியே சிற்பரநாரணி நந்தினி கொடியேற்று
பூதங்க ளைந்தாய் பொலியும் பூரணி கொடியேற்று
புண்ணிய தரணி புஜங்க பூஷணி கொடியேற்று
தரணி யெங்கும் சாந்தி நிலவிட கொடியேற்று

*கலாபூஷணம்.க.லோகேஸ்வரன்*
*தொல்புரத்தூர்.*

## கொடியேற்றி நல் விழவொன்று எம் மக்களுக்கு தா தாயே

அலை கடல் ஓரத்திலே அமைந்த நயினையிலே
கலை வடிவாய் திகழும் திருக்கோவிலில் அமர்ந்து
அடியவர்கள் குறை அனைத்தும் போக்கிடும் தாயே-
உன் தன்
கொடியேற்றம் காண படகேறி வந்தோம் தாயே
இவ்வளவு காலமும் எம்மக்கள் பட்ட இன்னல்கள்
போதும்-தாயே
கொடியேற்றி நல் விழவொன்று எம்மக்களுக்கு தா தாயே

*நயினை விசு.இராசநாயகம்.*

## நயினை நாக பூஷணியே

நாக பூஷணி என்னும் நாமங் கொண்டவளே
நயினையின் நாகபூஷணி அம்மனே
அகிலங்கள் போற்றிடும் நாக பூஷணியே
அன்னையே வணங்குகின்றேன் உன்னை
நயினை என்னும் ஊரில் இருப்பவளே
நாங்கள் விரும்பி வணங்கும் அன்னையே
நமக்குதவும் அன்னையே!
வணங்குகின்றோம் அன்னையே!

*பி.கிருஷ்சனா, தரம் $5^D$,*
*யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தி.*

## நாக ஈஸ்வரி யம்மை தானே...

திருவதனப் புன்னகையாய் சிவந்த வாயிற்
தித்திக்க தேனமுத சுவையு மூற
பெருமையுறப் பேரலைகள் வந்து மோதும்
பெருநதியில் யுறைந்திங்காளுமுந்தன்
திருவுருவில் நாகமுறை யழகைக் காண
தினமடியார் திரளாக வந்திறஞ்சும்
அருள்பொழில் சீர்நயினைநகர் தன்னில்மேவும்
தேவிநாக ஈஸ்வரி யம்மை தானே.

*(நயினை க.ச.அரவிந்தன்.)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 188 லட்சத்து 49 ஆயிரம் நிதியில் இரண்டு விடுதிகள் அமைக்கப்படும்

## மன்னார் மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(மல்லாவி )

பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் நடப்பாண்டுக்குரிய நிதி ஒதுக்கீடான 188 இலட்சத்து 49 ஆயிரத்து 166 ரூபா 66 சத நிதி மூலம் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் விடுதி , மன்னார் நகர பிரதேச செயலாளர் விடுதி ஆகியன புதிதாக அமைக்கப்பட்ட உள்ளதா மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நடப்பாண்டுக்குரிய நிதி ஒதுக்கீட்டின் மூலம் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கான விடுதி 94 இலட்சத்து 24 ஆயிரத்து 583 ரூபா 33 சதம் செலவிலும் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலாளருக்கான விடுதி 94 இலட்சத்து 24 ஆயிரத்து 583 ரூபா 33 சதம் செலவிலுமாக மொத்தம் 188 இலட்சத்து 49 ஆயிரத்து 166 ரூபா 66சத நிதி செலவிடப்படவுள்ளது.

இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 150 நாட்களுக்குள் முடிவுறுத்தப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப் படவுள்ளதாக அவர் மேலும் இது தொடர்பில் தெரிவித்துள்ளார். (2-15)




# மாணவர்களுக்கிடையில் குழு மோதல்! இருவர் காயத்துடன் வைத்தியசாலையில்

(குருமன்காடு)

வவுனியாவில் பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் க.பொ.த உயர்தர 2018 பிரிவு மாணவர்கள் மற்றும் க.பொ.த சாதாரண தர மாணவர்கள் வைரவப் புளியங்குளம் பகுதியில் இரு குழுவினராக மோதிக் கொண்டதில் இரு மாணவர்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை குறித்த பாடசாலையில் உயர்தர 2018 மாணவர்கள் மற்றும் க.பொ. சாதாரண தரம்பயிலும் மாணவர்கள் வகுப்பறையில் மோதிக் கொண்டனர்.

இது தொடர்பில் பாடசாலை நிர்வாகம் மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் அழைத்து விசாரணைகளை நடத்தியிருந்தது.

இருப்பினும் மாணவர்கள் அதன் பின்னரும் பாடசாலைக்குள்ளும்பாடசாலைக்கு வெளியேயும் குழுவாகப் பிரிந்து மோதிக் கொண்டதால் வவுனியா பொலிஸார் மற்றும் நீதிமன்ற நீதிபதிகளின் கவனத்திற்கும் இவ்விடயம் சென்றிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30மணியளவில் வைரவப்புளிங்குளத்தில் தனியார் கல்வி நிலையங்கள் அதிகமாக காணப்படும் பகுதியில் ஒன்றிணைந்த உயர்தர மாணவர் குழுவினர் அதே பாடசாலையில் கல்வி கற்கும் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதில் இரு மாணவர்கள் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வைரவப்புளியங்குளம் பகுதியில் தனியார் கல்வி நிலையங்கள் அதிகம் காணப்படுவதனால் மாணவர்கள் குழுவினராக மோதிக் கொள்வது அடிக்கடி இடம் பெற்று வருகின்றது. இப்பகுதியில் பொலிஸாரை கடமையில் நிறுத்துவதற்கு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஆதலால் மாணவர்களின் குழு மோதலுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (2-250)

# முதிரை மரக்குற்றிகளுடன் உழவு இயந்திரம் கைப்பற்று

## சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது!



கிளிநொச்சி நாச்சிக்குடா பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு 5 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகள் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பன்றிவெட்டி குளம் பகுதி காட்டினுள் பெறுமதி மிக்க மரக் குற்றிகளை உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றியவாறு காணப்பட்ட சமயம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலிற்கமைய குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததுடன், முதிரை மரக்குற்றிகளும் உழவு இயந்திரமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டுள்ள நாச்சிக்குடா பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தொடுக்க உள்ளதாகவும் தெரிவித்தனர். (2-15)

# நேர்முகத் தேர்வுக்கு வருமாறு தொண்டராசிரியர்களுக்கு அழைப்பு

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்ற தொண்டராசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் 11 இற்கு நியமனம் செய்வதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளதாக நேர்முகத் தேர்வுக்கு தோற்றவுள்ள தொண்டராசிரியர்களுக்கு அழைப்புக் கடிதங்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி. அபிராமி - பாலமுரளி அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் யுத்த சூழ்நிலைகளின் போது சில பாடங்களை கற்பிப்பதற்கு நிரந்தர ஆசிரியர்கள் இல்லாத போது, பாடசாலைகளில் வேதனங்கள் ஏதும் இன்றி சேவை நோக்கோடு செயற்பட்ட தொண்டராசிரியர்களில் தகுதி நிலைக்கேற்ப காலத்திற்கு காலம் பல நூற்றுக்கணக்கானவர்கள் தொண்டராசிரியர்கள் நிரந்தர நியமனங்களில் உள்வாங்கப்பட்டு வந்த நிலையில், இறுதியாகவுள்ள தொண்டராசிரியர்களில் தொடர்ந்தும் சேவையாற்றி வருபவர்களை அவர்களின் கல்வி நிலை உட்பட ஏனைய தகுதி நிலைகளைப் பரீட்சித்துப் பார்த்து நேர்முகத் தேர்வுக்கு பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப் படவுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வுக்கு பங்கு கொள்ளவுள்ளோருக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

அதில் 11 வகையான ஆவணங்களை நேர்முகத் தேர்வின் போது சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் கேட்கப் பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிளையும் அதன் நிழல் பிரதிகளையும் சமர்ப்பிக்க தவறினால் ஏனைய நாட்களில் சமர்ப்பிக்க முடியாது.

இதேபோன்று, அன்றைய தினத்தில் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்குமாறும் ஏனையதொரு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (2-15)

# பளை பிரதேச செயலக கட்டடம் திறந்து வைப்பு



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் இரண்டாவது நிர்வாகக்கட்டடம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்துள்ளார்.

மக்களுக்கான சேவையினை தடையின்றி வழங்கும் முகமாக பிரதேச செயலகங்களின் வளங்களை விருத்தி செய்யும் முகமாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் பிரதேச செயலகங்களில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் பளை பிரதேச செயலகத்தில் மேற்படி அமைச்சின் நிதி உதவியுடன் 10 மில்லியன் ரூபா பெறுமதியில் இக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி ப.ஜெயராணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் இராசநாயகம், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதியனுசரணையுடன் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தின் பனுவல் பாகம் -01 ஆவணப்பட வெளியீடும் அன்றைய தினம் பளை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. (2-111-312)

# அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் கருத்தரங்கு





அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் கருத்தரங்கி நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. குறித்த கருத்தரங்கு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் தெளிவூட்டும் குறித்த கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்ட கிராம மட்ட அமைப்புக்களிற்கு முன்னெடுக்கப்பட்டது. குறித்த கருத்தரங்கில் அரசியலமைப்பு சபையின் செயலாளர் வின்சன் பக்திராஜா, வ.மா எதிர்கட்சி தலைவர் தவராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டப்பட்டது. (2-15)

# எங்கு சமூக அநீதி நடந்தாலும் எதிராக குரல் கொடுக்கத் தயங்கக் கூடாது

## பேராசிரியர் சிவசேகரம் வலியுறுத்து



தமிழ் மக்களை பொறுத்த வரை மக்கள்தான் விழிப்பாக இருக்க வேண்டுமே தவிர தலைவர்கள் அல்ல தலைவர்கள் எப்பொழுதும் தவறாகவே சிந்திப்பவர்கள். அவர்கள் தங்களின் அரசியலுக்கு அப்பால் செல்ல மாட்டார்கள் என பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் சிவசேகரம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற மக்கால அரசியல் நிலவரம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார். இதில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

மக்கள் தங்களின் அரசியல் பிரதிநிதிகளிடம் கேள்வி கேட்கும் நிலைமை உருவாக வேண்டும். பொறுப்புக் கூறும் படி கோர வேண்டும். அழுத்தக் குழுக்களாக இருக்க வேண்டும். ஆனால் எங்களுடைய மக்களை பொறுத்தவரை எங்களுக்கு ஏன் வீண் வம்பு என எல்லா விடயங்களில் ஒதுங்கியிருப்பதுதான் மக்கள் தலைவர்கள் தவறாக இருப்பதற்கு காரணமாகவும் இருக்கிறது.

சமூகத்தில் எங்கு அநீதி நடந்தாலும் அதற்கு எதிராக குரல் கொடுக்க பின்நிற்க கூடாது எனத் தெரிவித்த பேராசியர் மக்கள் தங்களுக்குள் அரசியல் பிரதேச வாதங்களால் பிளவுபட்டு நிற்பது மக்களையே பலவீனப் படுத்துகிறது எனவும் தெரிவித்தார். (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டு தடிகள் பொல்லு கொண்டு வருதல் கண்டால்
பெண்டில் பின்னால் நின்று சண்டித்தனங்கள் பேசும்.
வீராதி வீர சூரர் நாங்கள்...
– வசந்தன் கவி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போருக்குப் பின்னரும் தமிழினத்தை ஏமாற்றாதீர்கள்

சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளுக்கு அறவே இடமில்லை. எக்காரணம் கொண்டும் போர்க்குற்றம் தொடர்பில் படையினர் தண்டிக்கப்பட மாட்டார்கள்.

இதுவே இலங்கை அரசின் நிலைப்பாடாக இருக்கையில், அரசாங்கம் எமக்கு ஏதும் தந்துவிடும் என்று நம்புவது மகா மடமைத்தனம். இருந்தும் சர்வதேச நாடுகள் தரக்கூடிய அழுத்தம், ஐ.நா சபையில் எடுக்கப்படும் தீர்மானம் என்பன எங்களுக்கான தீர்வை வலியுறுத்தக் கூடியவை.

ஆனாலும் சர்வதேச நாடுகளும் ஐ.நா சபையும் இலங்கை அரசுடன் இணங்கிச் செல்லுதல் என்ற உறவு நுட்பத்தை பின்பற்றுகின்றதேயன்றி, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றோ உரிமை கிடைக்க வேண்டுமென்றோ ஒரு போதும் நினைக்கவில்லை.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இணங்கிக் கொண்ட தீர்மானங்களை அமுலாக்குவதில் கூட கால அவகாசம் வழங்கும் அளவிலேயே நிலைமையுள்ளது.

இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் எந்தவிதமான விமோசனமும் இன்றி, இழப்பை மட்டும் தாங்கிய வண்ணம் வாழப் போகின்றனர் என்பதே உண்மை.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் மிகக் கொடிய யுத்தம் நடந்து, அதில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்து எந்தவிதமான இழப்பீடுகளும் நிவாரணங்களும் இன்றி இருப்பதென்பது மிகவும் கொடுமையானது.

இச்சூழ்நிலையில் உலக நாடுகள் தலையிட்டு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நிவாரணம் கண்டிருக்க வேண்டும்.

ஆனால் அதுதான் நடக்கவில்ல என்றால், எதிர்காலத்தில் தமிழினம் இந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமையையாவது பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும். இருந்தும் அதுவும் நடக்கவில்லை.

ஒரு காலத்தில் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் பக்கபலமாக இருந்தனர்.

ஆனால் போருக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பு. அதிலும் தமிழ் இன அழிப்பு என்ற விடயம் எங்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்குப் போதுமானதாகும். இருந்தும் எதுவும் நடக்கவில்லை.

இவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்குக் காரணம் தமிழ் அரசியல் தலைமையின் இலக்கற்ற போக்குத்தான்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தம், அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்திழப்பு என்பவற்றை முன்னிலைப் படுத்தி உலக நாடுகளின் உதவியுடன் இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்று விடுவதில் தமிழ் அரசியல் தலைமை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

மாறாக தமிழ் அரசியல் தலைமையின் முழுநோக்கமும் நல்லாட்சியுடன் இணங்கிப் போவதுதான்.

இதனால் அவர்கள் நல்லாட்சியை காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனரேயன்றி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி அவர்கள் இம்மியும் நினைத்திலர்.

இப்போது அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிப் பேசுகிறோம். அந்த அரசியலமைப்புச் சீர்திருத்தமும் தமிழ் மக்களை போருக்குப் பின் ஏமாற்றும் திருகுதாளமாக இருந்தால்,

இதைவிடப் பெருங்கொடுமை எதுவுமாக இருக்க முடியாது.

# விக்னேஸ்வரனை அடுத்த முறையும் நாம் ஆதரிப்போம்-ரெலோ அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பின் பெயரில் தமிழரசுக் கட்சியை வளர்க்க வேண்டும் என்ற குறுகிய சிந்தனையே வடக்கு மாகாண சபையில் அண்மையில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கும் காரணம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கட்சியின் பாராளுமன்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண்சபை விவகாரம் ஒரு வழியாக முடிவிற்கு வந்ததன் பின்னர், கடந்த 22 ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கு மாகாணசபை குழப்பம் தொடர்பாக நீண்டதொரு விளக்கத்தைக் கொடுத்திருந்தார்.

மாவை சேனாதிராசாவும் தனது விளக்கத்தைத் தெரிவித்திருந்தார். அவர்களது உரை முடிவுற்றதன் பின்னர் நான் எனது விளக்கத்தைப் பின்வருமாறு முன்வைத்தேன்.

மாகாணசபையின் முதல் ஒன்றரை வருடங்கள் உங்களது வழிகாட்டலின்படியே முதலமைச்சர் செயற்பட்டார். அப்பொழுது உங்களுக்கு முதல்வர் நல்லவராகத் தெரிந்தார். உங்களது பிழையான இராஜதந்திர அணுகுமுறையும் கள யதார்த்தமும் முதல்வரை மக்கள் நலன் சார்ந்து செயற்படத் தூண்டியிருந்தது. இதனால் உங்களுக்கும் முதல்வருக்கும் இடையில் இடைவெளி அதிகமாகியது.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியால் அமைச்சர்கள்மீது ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்த பிரச்சினை கடந்த ஓராண்டிற்கும் மேலாக நீடித்திருந்த நிலையில் கூட்டமைப்பின் தலைவர் என்ற நிலையில் நீங்கள் இதனை சரியாக அணுகவில்லை. இந்தக் குற்றச்சாட்டை உரிய முறையில் அணுகி அமைச்சர்களை மாற்றியிருந்தால் மாகாணசபையின் பிரச்சினை இவ்வளவுதூரம் வந்திருக்காது.

புளொட் அலுவலகத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நான்கு அமைச்சர்களையும் மாற்றி சுழற்சி அடிப்படையில் ஏனைய நால்வருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. மேலும் அன்ரனி ஜெகநாதன் உட்பட பதினாறு மாகாண சபை உறுப்பினர்களும் இதே கருத்தை வலியுறுத்தியிருந்தனர்.. அன்று அவ்வாறு செய்திருந்தால் இந்தப் பிரச் சினை எழுந்திருக்காது.

கடந்த ஓராண்டு காலமாகவே அமைச்சர்கள் தொடர்பாக ஊழல் மோசடிகளும் குற்றச்சாட்டுகளும் ஊடகங்களின் வாயிலாக முன்வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையிலேயே ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக முதல்வர் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். அந்த விசாரணைக் குழு நியமிக்கும்போது நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. விசாரணை குழுவின் அறிக்கை வெளிவந்த பின்னரும் நீங்கள் தலையிட்டு அந்த அறிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அதனையும் நீங்கள் செய்யவில்லை.

இதனால் முதலமைச்சர் சபையின் மாண்பையும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் தக்க வைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அமைச்சர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் அதற்கு ஆதரவானவர்களாகவும் இருந்ததால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கையைக் கைவிடுவதற்கும் இதற்காக முதலமைச்சரை நீக்குவதற்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தீர்கள். மக்கள் செல்வாக்கும் ஈ.பி.ஆர்.எல்எவ், ரெலோ மற்றும் புளொட் ஆகிய கட்சிகளின் ஆதரவும் முதலமைச்சருக்கு இருந்ததாலும் முதலமைச்சரின் பக்கம் நியாயம் இருந்ததாலும் வேறு வழியின்றி உங்கள் நடவடிக்கையிலிருந்து நீங்கள் பின்வாங்கினீர்கள்.

நாங்கள் தலையிடாமல் இருந்திருந்தால் நிலைமை மிகவும் மோசமாகிப் போயிருக்கும். நாம் கூடிப் பேசியிருந்தால் பிரச்சினையை சுமுகமாக முடித்திருக்க முடியும். இறுதியில் பங்காளிக் கட்சிகள், மதத்தலைவர்கள் ஆகியோரின் முயற்சியாலேயே வடக்கு மாகாண சபையின் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவர முடிந்திருந்தது.

மேலும் அடுத்தமுறை மாகாணசபைத் தேர்தலில் நாங்கள் விக்னேஸ்வரனை வேட்பாளராகத்தெரிவு செய்யாவிட்டால் நீங்கள் போராட்டம் நடத்துவீர்கள். நீங்கள் மூவரும் இணைந்து அவருக்கு ஆதரவளிப்பீர்கள் என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

அப்போது ஆம்,இந்த முறை நீங்கள் அறிமுகம் செய்த விக்னேஸ்வரனை அடுத்தமுறையும்நாம் ஆதரிப்போம் என்று பதிலளித்தேன். தமிழரசுக் கட்சியின் மீதும் கூட்டமைப்பின் தலைவர் மீதும் எம்.ஏ.சுமந்திரன் மீதும் நான் வைத்த விமர்சனங்களை அனைவரும் ஏற்றுக்கொண்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## சரஸ்வதி முன்பள்ளியின் 32-வது மெய்வல்லுநர் விழா

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 32 ஆவது மெய்வல்லுநர் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பொற்பதி அறிவாலயத்தில் சரஸ்வதி முன்பள்ளி பொற்பதி அறிவாலயத் தலைவர் சண். வாமதேவன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். முரளிதரன்,சிறப்பு விருந்தினர்களாக யாழ் கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் க. விமலநாதன், நல்லூர் பிரதேச சபை செயலாளர் எஸ்.சுதர்ஜன், கௌரவ விருந்தினர்களாக வீதி அபிவிருத்தி திணைக்கள ஓய்வுநிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர் எஸ். பரிபூரணன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர் ப.விஜயசொரூபி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**இரு பெண்களை ஒரே வீட்டில் தரலாமா?**

ஒரே குடும்பத்திற்கு பெண்களை திருமணம் செய்து கொடுப்பது சிறப்பல்ல. காலச்சூழ்நிலையால் திருமணம் செய்து கொடுத்த பெண்ணின் வாழ்க்கை முடிந்திருந்தால் அடுத்த பெண்ணைக் கொடுக்கலாம்.

(தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பராமரிப்பு வேலைகளுக்காக திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் வதிரி, இரும்பு மதவடி, சக்களாவத்தை; தேவரையாளி, மனோகரா, திக்கம், திக்கம் சித்தி விநாயகர் கோவிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## கடலட்டை பிடித்த 9 பேருக்கு தலா 5000ரூபாய் அபராதம்

நாகர்கோவில் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடித்த ஒன்பது பேருக்கும் தலா 5000 ரூபாய் வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி கந்தசாமி.

கட்ந்த வியாழக்கிழமை அதிகாலை நாகர்கோவில் பகுதியில் வைத்து அப்பகுதி மீனவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட மன்னார், கற்பிட்டி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஒன்பது மீனவர்களையும் நீரியல் வளத் திணைக்களத்தினர் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தினர். இதன்போது 9 பேருக்கும் தலா 5000 ரூபா அபராதம் விதித்ததுடன் பிடிக்கப்பட்ட கடலட்டைகளை அழிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (இ-60)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

பிரம்மன் பசுவானான். கயிலை அரசன் கன்றானான். இலக்குமி எஜமானி ஆனாள்.

அந்நாட்களில் சந்திரகிரியை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். சோழர் குலத்துக் கொழுந்துகளில் ஒருவன். அவனை அழுகினாள் அன்னலட்சுமி.

அரசன் பசுவையும் கன்றையும் கண்டு பரவசம் எய்தினான். என்ன காரணத்தால் என்று அவனுக்குத் தெரியவில்லை. அவற்றின் அழகே தன்னை அடிமைப்படுத்தி இருக்கிறது என எண்ணி திருமகளிடம் விலைபேசி பசுவையும் கன்றையும் வாங்கிக் கொண்டான். திருமகள் கொல்லாபுரம் திரும்பினாள்.

பட்டத்தரசிக்கு அந்த ஆவின் பாலைத் தன் மக்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற ஆசை. எனவே பசுக்களைப் பராமரிக்கும் இடையர் தலைவனை அழைத்தாள். அந்தப் பசுவையும் கன்றையும் ஒப்படைத்தாள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சிறிகாமாட்சி அணி வெற்றி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III 2017 சுற்றுப் போட்டியில் யாழ். நகரில் இருந்து 2 அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் வரிசையில் 40 வது போட்டியில் சிறிகாமாட்சி அணி திருநெல்வேலி YMHA அணியை 40 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில்துடுப்பெடுத்தாடிய சிறி காமாட்சி அணி 48 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 263 ஓட்டங்களை பெற்றது.

தீபநாதன் -11, சுமுகன் -43, மோகன்ராஜ்-28, சுதர்ஸன் -58, அரவிந்தன்-62, கஜீவராஜ்-19, ரவி -13 ஓட்டங்களை பெற்றனர். அருண்ராஜ்-02, சுதா -4, நிஷாந்தன் -2, கீரன் -1, இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியதிருநெல்வேலி YMHA அணி 44.1 ஓவர் களில் சகல இலக்குகளை யும் இழந்து 223 ஓட்டங்களை பெற்றனர். சண் ஜீவன்-11, கீரன் -26,ராசேந்திரம்-39, நிஷாந்தன் -60, அருண்ராஜ்-33, சுதர்ஸன்-22 ஓட்டங்களை பெற்றனர்.

சுதர்ஸன் -3, தீபநாதன்-3, சுமுகன் சனன்தன் தலா -01 இலக்கினை கைப் பற்றினர். இப் போட்டி யின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8 வருடமாக நடத்தி வரும் யாழ் நகரில்சிறந்தகழகஅணித்தெரிவு நிகழ்வில் சிறிகாமாட்சி அணி 9.03புள்ளிகளையும்திருநெல்வேலி YMHA அணி3.23புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (க)

## இன்றைய போட்டிகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 11 நபர் கொண்ட உதை பந்தாட்ட போட்டியில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

◆◆◆◆◆◆◆◆◆

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் கந்தசாமி ஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்தமாக நடைபெறும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வரணி யுத் (B) விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் றேஞ்சஸ் (B)விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (சு-19)

◆◆◆◆◆◆◆◆◆

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடை பெற்ற உள்ளூர் ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் திருமகள் அணியை எதிர்த்து கலைமகள் அணியும் 2.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் சரஸ்வதி அணியை எதிர்த்து அருநோதயா அணியும் மோதவுள்ளது. (க)

# (மாகாண மட்ட கராத்தே) திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்ல மாணவர்கள் புதிய சாதனை





2017 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கராத்தேப் போட்டி கடந்த 20, 21 ஆகிய திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இருபதுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இப் போட்டியில் கலந்து கொண்டன. இப்போட்டியில் சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த யாழ் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சிறார்கள் 19 பதக்கங்கள் பெற்று புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.இவர்கள் முதன் முதலாக இவ்வருடமே பாடசாலை மட்ட கராத்தைப் போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. காட்டா - குழு பெண்கள் பிரிவு 1ஆம் இடத்தைப் (சம்பியன்) பெற்றுக் கொண்டது. அத்துடன் 18 வயதுப் பிரிவு குமித்தே - தனி - செல்வி சி.சாந்தினி 1ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார். இவர்களுக்கு கராத்தே பயிற்சியினை சென்சே S.விஜயராஜ் அவர்கள் வழங்கி வருகின்றார். வெற்றி பெற்ற சிறார்கள் 2017ஆம் ஆண்டிற் கான தேசிய மட்டப் போட்டியில்பங்குபற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(க)

## வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் யாழ். மாவட்ட வலைபந்தாட்டக் கழகங்களுக்கிடையேயான வலைபந்தாட்ட ஜூலை மாதம் நடைபெற விருக்கின்றது. இதற்கான பதிவுகளை யாழ். மாவட்ட வலை பந்தாட்டச் சங்கத் தலைவி திருமதி. A.F.J. ரூபசிங்கத்திடம் எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் மேற்க் கொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைபந்தாட்டச் சங்க செயலாளர் சி. சுரேந்தினி கேட்டுக் கொண்டுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தனிக் காட்டாவில் சென். ஜோன்ஸ் கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த வி.நிவேதன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த வி.நிவேதன் தங்கப் பதக்கத்தையும் வி.திருசாந் வெள்ளிப் பதக்கத்தையும், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சோபிகன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றி-யுள்ளனர்.

# அலை ஓசை வி.கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## சென் யூட்ஸ் சம்பியன்



உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப போட்டி

கடந்த 2017.06.18 ஆம் திகதி நடைபெற்றது.

இதில்முல்லைவண்ணாங்குளம் சென்யூட்ஸ் விளையாட்டுக்கழகமும், முல்லை ஆனந்தபுரம்ஆனந்தா விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டன. பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் சென்யூட்ஸ் கழகம் வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள் கலந்து சிறப் பித்தார். சிறப்பு விருந்தினர்களாக தென்னாபிரிக்காவில் UNDP யின் சார்பாளராக கடமை புரியும் முல்லை மண்ணின் மைந்தன் விஜயகுமார் நவநீதனும் முல்லை மாவட்ட உதைபந்தாட்டசம்மேளனத்தலைவர் தி.பாபுவும் கிராம அலுவலர்கள், மற்றும் அமைப்புகளின் சார்பாளர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து சிறப் பித்தனர். (க)

# ஞானமுருகன் வெற்றி




(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சென். மைக்கேல் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தி வரும் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 22.06.2017 அன்று நடைபெற்ற போட்டியில் ஊர்காவற்றுறைஅண்ணா விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது. பரபரப்பாக நடைபெற்றபோட்டியில் 1-0 என்ற கோல்க் கணக்கில் வெற்றி கொண்டு இரண்டாம் சுற்றுக்கு தெரிவானது ஞானமுருகன் அணி.

அணி சார்பில் சுபாஸ் ஒரு கோலினைப்போட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வளம் தொடர்பாக

# பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனம் இல்லை – ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டில் நீர்வளம் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய தனியொரு நிறுவனம் காணப்படாமை நீர் முகாமைத்துவத்தில் உள்ள பாரிய சிக்கலாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பௌதிக ரீதியில் எமக்கு கிடைக்கும் நீரின அளவு, எமது நாட்டைப் போன்று பத்து மடங்கு பாரிய நிலப்பகுதிக்கு போதுமான தாக காணப்பட்டபோதிலும், உரிய முறையில் முகாமை செய்யப்படாமையின் காரணமாகவே நீர்ப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற "சுபென் பிரஜா அபிமானி" மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கிராமத்து மக்களின் தாகத்தை தீர்க்கும் சமூக அடிப்படை அமைப்புக் களை பலப்படுத்தி நெறிப்படுத்தும் பொறிமுறையொன்றினை தயாரித்தல், மக்கள் மயப்படுத்தல் மற்றும் கௌரவிப்பதற்காக நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களமும் இணைந்து இச் செயற்றிட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி "நீர்வளம் தொடர்பாக பொறுப்புக்கூறும் தனியானவொரு நிறுவனம் காணப்படாமை போன்றே பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் என்பன நீர் முகாமைத்துவம், நீர் பாதுகாப்பு மற்றும் சிக்கனம் தொடர்பாக குறைந்த பொறுப்புடன் செயற்படுதல் நீர் முகாமைத்துவத்தின் அடிப் படை பிரச்சினையாக உருவெடுத்துள்ளது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

நீரைச் சிக்கனமாகப் பாவித்தல், நீர் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர பாக அனைவரும் பொறுப்புடன் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

சமூக நீர் அமைப்புக்களினால் தயாரிக் கப்பட்ட விசேட பத்திரிகை ஜனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்பட்டதுடன், அதில் குறிப் பிடப்பட்டுள்ள விடயங்களை அமைச்சரவையில் முன்வைத்து தேவையான நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்று அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க கொலோன் குளோபல் கொரிய நிறுவனத்தினால் இரண்டு மில்லியன் ரூபாயுக்கான காசோலையும் இதன் போது ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது.

சிறுநீரக நோய் காணப்படும் மாவட்டங் களிற்காக 70 நீர் சுத்திகரிப்பு உபகரணங் களை வழங்குதல், யுனிசெப் அன்பளிப்பில் 100க்கும் அதிகமான நீர்த்தாங்கிகளை சமூக நீர் அமைப்புக்களுக்கு வழங்குதல், சர்வதேச நீர் தினத்தையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் இதன் போது நடைபெற்றன.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், சந் ராணி பண்டார, தலதா அத்துகோரல, இரா ஜாங்க அமைச்சர் மருத்துவ கலாநிதி சுதர்சனி பெர்ணான்டோபுள்ளே ஆகியோரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் சரத் சந்ர விதான உள்ளிட்ட அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)


யாரிடம் பேசுவது?

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளை நீங்களே தீர்த்துக்கொள்ள உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை. மத சார்பற்றது.

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

(021) 222 8117 / 077 900 8776 (C-8880)

(தினமும் காலை 9.00 - 1.00)

வவுனியாவில்: (024) 324 4444

சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00

(Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)



## மணமகள் தேவை

யாழ்.இந்து 1980ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரம், கிரக பாவம் 33 1/2 செவ்வாய்க் (4) குற்றமற்ற அரச தொழில்புரியும் பட்டதாரி மணமகனுக்கு தொழில் புரியும் அழகிய மணமகள் தேவை.

தொடர்புக்கு: 0773506244



## காணிகள் விற்பனை

A9 வீதி நுணாவில் சந்தியிலும், அருகில் உள்ள மட்டுவில் வீதியில் 1/4 மைல் தூரத்தில் 10 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.


0778730129

(9571)


'ஓம் விராட் விஸ்வ பிரமனே நமக'

## மரண அறிவித்தல்

### அருணாச்சலம் ஜெகதீசன் (ஆசாரியார்)



கரணவாயைப் பிறப்பிடமாகவும் தாவளை இயற்றாளையை வசிப் பிடமாகவும் வேம்பிராயை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அருணாச்சலம் ஜெகதீசன் 23.06.2017 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாச்சலம் - கைராசி தம்பதியரின் அன்பு மகனும் கனகராஜா, காலஞ்சென்ற குலமணி தம்பதிகளின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் துஷ்யந்தி (பிரான்ஸ்), கஜன் (பிரான்ஸ்), மதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினகுமார் (பிரான்ஸ்), ரூபினி ஆகியோரின் மாமனாரும் ஆரியா, ஜஸ்மீரா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் சற்குணம், பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மலோஜினி, ஸ்ரீதரன், பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


வேம்பிராய் வடக்கு,
மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்
077 224 5145

(C-8872)

## மரண அறிவித்தல்

### சண்முகம் நவரத்தினம் (அரியகுட்டி)



கரணவாய் மேற்கு சோளங்கனைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நவரத்தினம் (அரியகுட்டி) கடந்த 23.06.2017 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவக்கொழுந்து தம்பதி களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் பிருந்தா (ஜேர்மனி), தனுஷியா, லோஜிதா (Seylan Bank), சஞ்சுதன் ஆகி யோரின் அன்புத் தந்தையும் மகதீஸ்வரன் (அவுஸ்திரேலியா), திலகேஸ்வரன், திருநீபன் ஆகியோரின் மாமனாரும் குருகுலசிங்கம், தேவராசா, தங்கமணி, அன்னலட்சுமி, வள்ளிப்பிள்ளை, இராசாத்தி, காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, சித்திரம் ஆகியோரின் சகோதரனும் சுப்பிரமணியம் சிவக்கொழுந்தின் அன்பு மருமகனும் இரத்தினேஸ்வரி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, கந்தசாமி மற்றும் சச்சிதானந்தம் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, தர்மராசா மற்றும் கந்தசாமி, துரைச்சாமி, மகேஸ்வரி, பரமசாமி (ஜேர்மனி), இந்திராவதி, சந்திராவதி, இராசரத்தினம், இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் சகுந்தலேஸ்வரி, ராணிதேவி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மாலினி (ஜேர்மனி), துரைராஜசிங்கம் (பிரான்ஸ்), திருவருட்செல்வம், பத்மலட்சுமி, இராசரத்தினம் ஆகியோரின் சகலனும் ஹரிசாந், யதுசிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (26.06.2017) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

(9560)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் ஏற்றுக்கொள்ளும்...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உத்தேச அரசியலமைப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நேற்றுமுன்தினமிரவு முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

ஜனாதிபதியின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அரசியலமைப்பு வழிநடத்தும் குழு உறுப்பினர்களான எதிரக்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா உள்ளிட்ட சில சிரேஷ்ட உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

அரசியலமைப்பு மீளமைப்பு பணி, இடைக்கால அறிக்கை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அதிகாரப் பகிர்வு அவசியமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இதன் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சுதந்திரக் கட்சி ஆதரவளிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், தேர்தல் முறைமை மாற்றம் உட்பட மேலும் சில முக்கிய விவகாரங்கள் குறித்தும் இந்த சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லும் எந்தவொரு திருத்தத்தையும் செய்யமுடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி 15

## தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம் பித்து இயங்கிவரும் மல்ரி சென்ரருக்கு வேலை ஆட்கள் உடன் தேவை.

T.P : 0772222083

P & D Multi Center,
226, Manipay Road, Jaffna.
ncsbox @ hotmail.com (9561)

## உடனடி வேலைவாய்ப்பு

Dynamic கம்பனியில் முகாமைத்துவ துறையில் தொழில்புரிய ஓர் அரியசந்தர்ப்பம் இதோ..

- அனுபவம் தேவையற்றது
- O/L அல்லது A/L
- குறுகிய காலப் பயிற்சி
- நிரந்தர தொழில்வாய்ப்பு
- Customer Service
- Administrative
- Management
- Promoting supervisor

எம்முடன் இணையும் உங்களுக்கு பயிற்சியின் போது 12000/= பின் 40,000/= க்கு மேல். தங்குமிட வசதி இலவசம், வெளிமாவட்டத்தாரும் விரும்பத்தக்கது. தொடர்பு: 0766781042,0776644442 (9572)

## காணி விற்பனைக்கு

பளை நகரத்தில் ஏ9 வீதியில் எரிபொருள் நிலையம், சேவிஸ் ஸ்ரேசன் என்பனவற்றுக்கு அண்மையில் ஏ9 வீதிக்கு வடக்கு பக்கத்தில் காணி விற்பனைக்கு உண்டு. (9535)

தொடர்பு: 0777895661

## வேலைவாய்ப்பு

விற்பனையாளராக பணியாற்றக் கூடியவர்கள்.
வேலை நேரம்
11.00 AM - 3.00 PM வரை
சம்பளம் 500/= (9573)

## விற்பனைக்கு

மூன்று (3) தகர சீற் கொட்டகைகள், கட்டடத்துடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0774185081 (9558)

## வீடு விற்பனைக்கு

யாழ்.வீதி, மானிப்பாயில் வீட்டுடன் கூடிய 5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0772799670 (C-8881)

## காணி விற்பனைக்கு

தெற்கு மானிப்பாயில் 6 பரப்புக்காணி வியாபார ஸ்தலத்துக்கோ, வீடுகட்டவோ, சுற்று மதில், கிணறு, மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் விற்கப்படும்.
தரகர் தேவையில்லை
தொடர்பு:-0768045556 (9493)

## தென்னங்காணி விற்பனைக்கு

இயக்கச்சியில் ஒன்றரை வருட பராமரிப்பில் உள்ள 5 ஏக்கர் தென்னங்காணி விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு : 0755690798 (9562)

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் வரணி வாழைத்தோட்ட சந்திக்கு அருகில் சேச்சடி யில் 15 பரப்பு காணி விற்பனைக் குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்) (9505)

தொடர்புகளுக்கு:-
0778999308

## A/L 2017 கணக்கீடு

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

நாளை 26.06.2017 காலை 8.30 மணிக்கு ஆரம்பம்

வெளிமாணவர்களும் பங்கு பற்றமுடியும்

- துறைசார் நிபுணரால் கருத்துரை வழங்கப்படும்
- புள்ளியிடல் முறை தொடர்பான விளக்கம் அளிக்கப்படும்
- எதிர்பார்க்கை விடயங்கள்

DCM யாழ்.நகர் (C-8882)

## ECONOMICS HALL

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (புகையிரத கடவை அருகில்)

மாபெரும் பொருளியல் கருத்தரங்கு

ஆசிரியர் R.தர்ஷன்

யூலை 10 - யூலை 25 வரை (50 மணித்தியாலங்கள்) (9565)

500 M.C.Q (பல்தேர்வு வினாக்கள்) 20 வருடகால பரீட்சை வினாக்கள் உயர்ந்த விளக்கத்துடன் K-AIMS உடைய மாதாந்த சஞ்சிகைகளில் ஆக்கங்களை வழங்கி வருகின்ற ஆசிரியர் கடந்த காலத்தில் மாவட்ட நிலை 1,2 அடங்கலாக உயர் பெறுபேற்றுக்குக் காரணமானவர்.

வெளி மாணவர்களும் பங்குபற்ற முடியும்

## OLYMPIA MATHS CENTRE

(இணுவில் புகையிரத வீதிக்கு அருகாமையில்)

தரம் 6–11 வரையான கணித வகுப்புக்கள் (தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி மூலமாக) பிரபல ஆசிரியரால் பிரத்தியேக, குழு வகுப்புக்களாக இலகுவான சிறந்த முறையில் கற்பிக்கப்படும் மற்றும் OLYMPIA கணிதவினாடிவினாக்களிற்கான வகுப்புக்களிற்கும் கற்பிக்கப்படும்.

0772369133 (9510)

குறிப்பு:-(யாழ்ப்பாணம்–மல்லாகம் எல்லைக்குட்பட்டவர்களிற்கு) பிரத்தியேக, குழு ரீதியான கணித வகுப்புக்கள் வீடு வந்தும் கற்பிக்கப்படும்

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-8858)

CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us : cnrworldwideexpress

## நிரந்தர வேலைவாய்ப்பு

வட மாகாணத்தில் இயங்கிவரும் எமது Everest நிறுவனத்தின் புதிய கிளைகளுக்காக O/L, A/L/ படித்த 18 - 40 வயதுக்குட்பட்ட புதிய நபர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

3 மாத பயிற்சியின் போது 20,000/= மாத வருமானமும் பயிற்சியின் பின் 40,000/= க்கு மேலதிகமான வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.



- தங்குமிட வசதி ஒழுங்கமைத்து தரப்படும்.
- EPF, ETF, Medical
- ஆங்கிலம், சிங்களம் கற்பதற்கான வசதி

→ பதவி வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
→ வெளிமாவட்டத்தார் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0779856671, 0771717278 (9570)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

பிரெஞ்சு கற்பதற்கு வட மாகாணத்தில் FRENCH EMBASSYயின் கீழ் இயங்குகிறது.
யாரும் படிக்கலாம். www.ambafrance.lk.org



DELF A1, A2 வகுப்புகளுக்கு உடன் பதிவு செய்யவும். (9557)

021 222 8093
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com (C-8852)

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா

## Co-ordinator Required for Busy Campus

**The role**

- Maintaining reception area.
- Dealing with face-to-face and telephone enquiries.
- Maintaining branch accounts.
- Student counselling.

**The person**

- Female preferred. Age should be 18- 30.
- Attractive salary (negotiable).
- Must have very good spoken/written English.
- Must have at least one years' experience in a similar position.
- Must have good computer skills. (MS Word and Excel)

**Is this you?**

Send your CV. to the Manager- jaffnabwea@gmail.com orsend your contact details to 0767659415 before July 05th 2017.

(C-8873)

## விற்பனைக்கு

இருபாலை பழைய வீதியில் உள்ள, சுற்றி வர மதில் அமைக்கப்பட்ட 2 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு, விலை பேசித் தீர்க்கப்படும். (9533)

தொடர்புகளுக்கு :
0775445479, 0767079792

## விற்பனைக்கு

- TVS கெவி டியூட்டி மோட்டார் சைக்கிள்
- Discover 125 மோட்டார்சைக்கிள் கடைக்குரிய சிசில் கண்ணாடி
- குளிரூட்டி அச்சகத்திற்குரிய சிறிய கட்டர்
- மற்றும் பைன்டிங் பிறசர் (9573)

தொடர்புகளுக்கு : 0778076158

## மணமகள் தேவை

38 வயதுடைய யாழ் இந்து கௌரவ, மகம், 34 பாவம், Bank இல் வேலை செய்யும் மணமகனுக்கு, குறைந்தது 4 வயது வித்தியாசமுள்ள அழகான மெல்லிய மணமகள் தேவை. (9515)

தொடர்புகளுக்கு : 0774731429

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-8857)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378


வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 123

வள்ளுவர் ஆண்டு 2048 25.06.2017 தொலைபேசி : 021 222 3378



# சம்பந்தரையும் காப்பாற்றிய முதலமைச்சர்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தருக்கும் ஆப்பு வைக்க சதி முயற்சிகள் நடக்கிறதா?

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தமிழரசுக் கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமிழ் மக்களின் கொந்தளிப்பால் அடங்கிப் போயிற்று.

முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி கொண்டு வந்த போது அது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்குத் தெரிந்திருந்ததா? என்ற கேள்வி எழவே செய்கிறது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை அதன் தலைவர் மாவை. சேனாதிராசா வாக இருந்த போதிலும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் அறிவுரையை- அனுமதியை மீறி தமிழரசுக் கட்சி எந்த முடிவையும் எடுத்ததில்லை.

2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டபோது பேரவையின் இணைத் தலைவராக முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொழிற்படுகிறார் என்பதைச் சாட்டாக வைத்து முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதில் சிலர் மும்முரமாகச் செயற்பட்டனர். எனினும் இதற்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் இம்மியும் இடம் கொடுக்கவில்லை.

சம்பந்தர் எடுத்த அதே நிலைப்பாட்டில் விட்டு விடுவதே புத்திசாலித்தனம் என்ற அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவும் அமைதியாக இருந்தார்.

இதனால் தமிழ்மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட போது முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரும் சதித்திட்டத்தை அந்த ஒரு சிலரால் எதுவும் செய்ய முடியாமல் போக, அவர்கள் வேறு விதத்தில் முதலமைச்சருக்குத் தொந்தரவு கொடுத்தனர். அதன் ஒரு கட்டம்தான் வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும் என்ற தமிழரசுக் கட்சி சார்ந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரின் திட்டம் ஆகும்.

அதிலும் குறிப்பாக விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் முதலமைச்சருக்கு ஆதரவாக இருப்பதன் காரணமாக அவரை அந்தப் பதவியில் இருந்து வெளியேற்றுவதை மையமாக வைத்துக் கொண்டு வரப்பட்டதே அமைச்சர்கள் மீது விசாரணை நடத்தவேண்டும் என்ற கோரிக்கையாகும்.

எனினும் அந்தக் கோரிக்கையை அமுலாக்க முற்பட்டதால் நடந்த சம்பவங்கள் என்ன? என்பதை தமிழ் மக்கள் நிதர்சனமாகக் கண்டு அனுபவித்தனர்.

அமைச்சர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டவர்கள்- எழுந்து நின்று வீறாப்புடன் பேசியவர்கள் அனைவரும் விசாரணை முடிவு வந்த பின்னர் விசாரணை தேவையில்லை என்பது போலக் காட்டிக் கொண்டனர்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் நியமித்த விசாரணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையை முதலமைச்சர் சபையில் வாசித்து கொடுத்த விளக்கமே ஏலவே தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் பின் வாங்கக் காரணமாயிற்று.

எனினும் முதலமைச்சர்



ஒரு நீதியரசராக நின்று தன் தீர்ப்பை வழங்கினார். அமைச்சர்கள் ஊழல் புரிந்தனர், அதிகாரத் துஷ்பிரயோகம் செய்தனர் என்ற உண்மை, பொய்களுக்கு அப்பால் மக்கள் மத்தியில் அவர்கள் தொடர்ந்தும் அமைச்சர்களாகப் பணி செய்வது சாத்தியமற்றது. அவர்கள் இடுகின்ற உத்தரவுகளை அவர்களின் கீழுள்ள பணியாளர்கள் நிறைவேற்றமாட்டார்கள் என்ற அடிப்படையில் அமைச்சர்களை மாற்றுவதற்கு முதலமைச்சர் முடிவு செய்தார்.



நிலைமை இதுவாக இருக்கையில் முதலமைச்சரை எப்படியாவது வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என ஒரு நெடுநாளாகக் காத்திருந்தவர்களும் முதலமைச்சர் வீடு சென்றால் அந்தப் பதவி எமக்காகும் எனக் கற்பனை செய்தவர்களும் சேர்ந்து முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றுவதற்கான திட்டத்தை செய்யத் தலைப்பட்டனர்.

இதற்கு வாய்ப்பாக அவர்கள் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவுக்கு குழையடித்து அவரைச் சம்மதம் தெரிவிக்க வைத்தனர். ஆனாலும் இந்தச் சம்பவம் இரா. சம்பந்தருக்கு தெரியவராமல் இரகசியம் காக்கப்பட்டது என்பதும் உண்மை.

முன்கூட்டியே இதனைத் தெரியப்படுத்தினால் அதற்கு சம்பந்தர் சம்மதியார் என்பதால் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மிகவும் இரகசியமாகப் பேணப்பட்டது.

அந்தப்பிரேரணையை ஆளுநரிடம் கையளிப்பதற்குச் சில மணித்தியாலங்களுக்கு முன்னரே சம்பந்தருக்குத் தெரியப்படுத்தப்பட்டது என்ற தகவல்கள் இருந்தாலும் மாவை. சேனாதிராசாவை தலைவராகக் கொண்ட தமிழரசுக் கட்சியில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் தலையிடக்கூடாது எனக் கடுந்தொனியில் சம்பந்தருக்குத் தகவல் அனுப்பப்பட்டதாகவும் கேள்வி.

ஒரு கட்டத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் பெறுமாறு சம்பந்தர் கூறியபோதிலும் சம்பந்தரை எதிர்த்துக் கதைக் குமளவில் நிலைமை மாறிக் கொண்டது.

இங்குதான் சம்பந்தர் அதிர்ந்து போனார். நிலைமை முற்றிவிட்டது. இனி தான் கதைத்தால் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு நடந்த அத்தனை சதிவேலைகளும் தனக்கும் நடக்க அதிக நேரம் ஆகாது என்பதை உணர்ந்த இரா. சம்பந்தர், தமிழரசுக் கட்சியில் நான் சாதாரண உறுப்பினர். அதன் தலைவர் மாவை. சேனாதிராசா. ஆகவே அவருடனேயே கதைத்துக் கொள்ளுங்கள் என சம்பந்தரின் பதில்கள் இருந்ததுடன் யாழ்ப்பாணத்திற்கு வருவது என்ற முடிவையும் அவர் மாற்றிக்கொண்டார்.

இருந்தும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகண்டு மக்கள் கொதித்தெழுந்த போதுதான் முதலமைச்சருக்கு எதிராக நின்ற குழுவினர் சம்பந்தரை அழைத்து அவருக்குள்ளால் கடிதங்களை எழுதி நிலைமையைச் சுமுகமாக்க முற்பட்டனர்.

ஆக, முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்காக எழுந்த மக்கள் பேரெழுச்சி இரா. சம்பந்தரையும் காப்பாற்றியது என்பதே உண்மை.

ஆம், முதலமைச்சரின் நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றிருந்தால் அடுத்த ஆப்பு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கானதாக இருந்திருக்கும் என்பது சுவ உண்மை.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார்கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**கங்காணியார்:** ஒரு மாதிரியாக வடக்கு மாகாண சபை பிரச்சினையும் தீர்ந்து போயிற்று.

**விதானையார்:** என்ன ஒருமாதிரியாக வடக்கு மாகாண சபைப் பிரச்சினை தீர்ந்து போயிற்றுதோ?

**கங்காணி:** ஏன்? விதானையார் இன்னும் பிரச்சினை தீரவில்லையோ?

**விதானையார்:** பிரச்சினை அமர்ந்து போயிருக்கல்லாது பிரச்சினை தீராது. முதலமைச்சருக்கு எதிரான கூட்டம் தொடர்ந்தும் சபையைக் குழப்பத்தான் செய்யும்.

**மூப்பர்:** சபையை யார் குழப்பினாலும் எங்கட மக்கள் விழிப்பாக இருந்தால் எல்லாம் சரியா வரும்.

**பண்டிதர்:** எங்கட மக்கள் விழிப்பாக இல்லாமலோ முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு ஆதரவாக கடையடைப்புச் செய்தவியள்.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். எங்கட மக்கள் பேசாமல் இருந்திருந்தால் இப்ப முதலமைச்சரை வீட்டிற்கு அனுப்பியிருப்பினம்.

**சாத்திரியார்:** அது சரி வாத்தியார். எங்கட முதலமைச்சருக்கு இருக்கிற செல்வாக்குப் பற்றி தமிழரசுக் கட்சிக்குத் தெரியாதோ?

**வாத்தியார்:** சாத்திரியார் நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. கெடுகாலம் வந்திட்டால் நாங்கள் செய்கிற வேலைகளும் கெட்டதாகத்தான் இருக்கும்.

**சாத்திரியார்:** அது சொன்னியளே நூறுவீதம் உண்மை. முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அதை இரவோடு இரவாக ஆளுநரிடம் கையளிக்க, ஒரு இரவுப்பொழுதில் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு பறந்து போய்ச்சுது. ஒரு விடயத்தைச் செய்ய முதல் பல தடவைகள் சிந்திக்க வேணும்.

**பண்டிதர்:** அது சரி, வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுநரிட்ட கையளித்த அவைத் தலைவர்தானே அதை திரும்பவும் பெற்றிருக்கவேணும். ஆனால் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சயந்தன்தான் ஆளுநரிட்டப் போய் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுள்ளார்.

**கங்காணி:** அவைத் தலைவரிட்டக் கேட்டதாம். அவர் தான் போய் வாங்க மாட்டன் என்று மறுத்துப் போட்டார். அதன் பின்னர் தான் உறுப்பினர் சயந்தன் வாங்கினவராம்.

**மூப்பர்:** அதிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்யுது.

**வாத்தியார்:** என்ன மூப்பர் சொல்லுறியள்.

**மூப்பர்:** வடக்கு மாகாண சபையில நீதிக்கான உறுப்பினர்கள் என்றொரு அமைப்பை ஒரு சிலர் உருவாக்கியிருக்கினமல்லோ. அதில உறுப்பினர் சட்டத்தரணி சயந்தனும் ஒருத்தர்.

வடக்குமாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுநரிட்ட கொடுத்த செயல் நீதிக்குப் புறம்பானது என்பதால சயந்தன் தானே நேரில போய் ஆளுநரிட்ட அதைத் திரும்பப் பெற்றுள் ளார்.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்து அதை ஆளுநரிட்டக் கொடுத்து ஒரு பெரும் குழப்பத்தை ஏற்படுத்திய எவரும் அடுத்த தேர்தலில மக்களைச் சந்திக்க முடியாது.

**கங்காணி:** இனிவரும் காலங்களிலயாவது வடக்கு மாகாண சபைஒழுங்காக இயங்கி மக்களுக்குச் சேவையாற்ற வேணும். தொடர்ந்தும் குழப்பம் எண்டால் தமிழ் மக்கள் நிச்சயம் அடுத்த தேர்தலில் தக்க பாடம் புகட்டுவினம்.

**மூப்பர்:** தெரியாமல் தான் கேட்கிறன் குழப்பம் இல்லாமல் எப்படி வடக்கு மாகாண சபையை இயக்குகிறது. முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுநரிட்ட ஒப்படைத்த அவைத் தலைவர்தான் இப்போதும் அவைத்தலைவர். முதலமைச்சரை வீட்டிற்கு அனுப்பவேணும் என்று முடிவெடுத்ததில அவைத் தலைவருக்கும் பங்குண்டு. அப்படியானால் அவர் தான் எடுத்த முடிவு சரி எண்டும் அதைத் தொடரவேண்டும் என்றும் நினைக்கமாட்டாரோ.

**வாத்தியார்:** வடக்கு மாகாண சபைக்கு இன்னும் ஒன்றரை வருடம் ஆயுள் இருக்குது. இந்த நிலையில புதிய அமைச்சர்கள் தெரிவு, தற்போதைய அமைச்சர்கள் மீதான விசாரணை இப்படியேதான் காலம் கடக்கும். இதற்குள்ள ஒருத்தரை ஒருத்தர் பழி வாங்குகிற நாடகம் நடக்கத் தான் செய்யும்.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா விட்ட பழி தீர்க்கிற எண்ணமோ? யாரையும் வஞ்சிக்கிற சிந்தனையோ இம்மியும் இல்லை என்பதால மற்றவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேணும்.

**வாத்தியார்:** அதுமட்டும் நடக்காது. எந்தக் கோயிலிலும் சத்தியம் செய்வன்.

**விதானையார்:** ஏன் வாத்தியார் அப்படிச் சொல்லுறியள்.

**வாத்தியார்:** வடக்கு மாகாண சபையில இருக்கிற ஒரு முஸ்லிம் உறுப்பினர் இதற்கு ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டார்.

தமிழ் மக்களுக்குச் செய்ய வேண்டிய அநியாயம் அத்தனையையும் எங்கட முதலமைச்சருக்குச் செய்துபோட்டுத்தான் போவார்.

நான் அடித்துச் சொல்லுவன் அவர் இருக்கும் வரைக்கும் வடக்கு மாகாண சபை உருப்படியாக இயங்காது.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது. ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவரான அவரை வடக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைத்ததே சபையைக் குழப்பத்தானே. வேணுமெண்டால் அவர் பேசும்போது அவற்ர உரையை அவதானித்துப் பார்த்தால் தெரியும்.

**மூப்பர்:** எஞ்சியிருக்கிற காலத்திலயாவது வடக்கு மாகாண சபை ஒழுங்கா இயங்கவேணும் எண்டால் தமிழரசுக் கட்சியின்ர தலைவர் மாவை. சேனாதிராசா இறுக்கமான சில முடிவுகளை எடுக்க வேணும்.

அதில ஒன்று வடக்கு மாகாண சபையைக் குழப்பி வரும் அந்த முஸ்லிம் உறுப்பினரை நீக்கி விட்டு அவருக்குப் பதிலாக இன்னொரு முஸ்லிம் உறுப்பினரை நியமிக்கவேணும். இல்லையெண்டால் எல்லாம் கஷ்டமாகத்தான் இருக்கும்.

**பண்டிதர்:** இந்த நேரத்தில வடக்கு மாகாண சபையில இருக்கிற இளம் உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறன்.

இளம் பிள்ளையள் உங்களுக்கு அரசியலில நல்ல எதிர்காலம் கிடைக்க வேணுமெண்டால் மக்கள் எதை ஆதரிக்கிறார்களோ, மக்கள் எதை விரும்புகிறார்களோ அந்தப் பக்கம் நீங்கள் நிற்கவேணும்.

அடுத்த முறையும் எனக்கு ஆசனம் கிடைக்க வேணும் எண்டு நினைத்து ஒரு சில அரசியல் தலைவர்களுக்குப் பின்னால- அவையள் சொல்லுறதைக் கேட்டுக் கொண்டிருந்தால் உங்களை எதிர்கால அரசியல் இருளாகிப் போகும். ஆகையால்தான சொல்லுறன் மக்களின்ர பக்கமாக நில்லுங்க. அது உங்களுக்குப் பல நன்மைகளைத் தரும்.

இப்படி பண்டிதர் கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்




## மக்கள் நிற்பது எந்தப் பக்கமோ அந்தப் பக்கம் நில்லுங்க மக்காள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வானவில் கிராமம்



வண்ணமயமாக இருக்கும் எந்த ஒரு பொருளும் எல்லோரையும் கவரும். அந்த வகையில் இந்தோனேசியா அரசு, ஒரு கிராமத்தையே வண்ணமயமாக மாற்றியுள்ளது. இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவாவில் உள்ள ஒரு மலைப்பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமம், காம்பங் பிலாங்கி (Kampung Pelangi). அந்தக் கிராமத்தில் உள்ள வீட்டின் சுவர்கள், கதவுகள், வீதிகள், கூரைகள் என எல்லா இடங்களையும் ஒரு மாணவர் குழுவை வைத்து வண்ணமயமாக்கி இருக்கிறார்கள்.


22,000 அமெரிக்க டொலர்களை இதற்காக செலவு செய்துள்ளனர். சுவர்களில் 3D ஓவியங்கள் கண்களைப் பறிக்கின்றன. வண்ணங்களால் நிரம்பியிருக்கும் இந்தக் கிராமத்தின் புகைப்படங்கள் சோஷியல் மீடியாக்களில் வைரலாகி வருகின்றன.

'சுற்றுலாப் பயணிகளைக் கவரவே இந்த ஐடியா. இதன் மூலம் அரசுக்கு வருவாய் கிடைக்கும்' என்கிறார்கள் இந்த வானவில் கிராமத்தை உருவாக்கிய அதிகாரிகள். 'ரெயின்போ வில்லேஜ்' என்று அழைக்கப்படும் இந்தக் கிராமத்துக்கு, தற்போது சுற்றுலாப் பயணிகள் ஆவலுடன் படையெடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

# போத்தல் ரொக்கெட்



தேவை- தண்ணீர்ப்போத்தல் -1, பிலிம் டப்பி -1, இரண்டு நிறங்களில் சலோரேப், காகிதம்.



பிலிம் டப்பியின் முனையில் காகிதக் கூம்பையும் பக்க வாட்டில் காகிதத்தையும் வைத்து ஒட்டி படத்தில் காட்டிய வாறு ரொக்கெட் செய்யவும்.





திறந்த வெளியில் போத்தலை வைத்து அதன் முனையில் ரொக்கெட்டை வைக்கவும்.

ரொக்கெட் ரெடி!


போத்தலின் இருபுறமும் கைகளால் பலம் கொண்ட மட்டும் வேகமாக அழுத்தினால் ரொக்கெட் சீறிப்பாயும்.

ஒரு ஆடம்பரத்தை மட்டும் என்னால் விட முடியாது ; அதுதான் புத்தகங்கள் வாங்கும் பழக்கம்.

ஜவஹர்லால் நேரு



ஹாய் குட்டீஸ்!
இந்த இரண்டு தோழிகளும் சந்தித்துக் கொள்ள வழி காட்டுங்கள் பார்க்கலாம்!



# செல்லத்துக்கு ஐஸ்கிறீம்



நாம் செல்ல நாயோடு வெளியே போகும்போது, நாமெல்லாம் ஜாலியா ஐஸ்கிறீம் சாப்பிட, நம்மையே ஏக்கத்துடன் பார்த்துட்டிருக்கும். கொடுக்க ஆசைப்பட்டாலும், நாம் சாப்பிடும் ஐஸ்கிறீம் நாய்களுக்கு ஏற்றதல்ல என்பதால், கொடுக்க மாட்டோம். இந்தக் குறையைத் தீர்க்க இப்போது நாய்களுக்கான ஐஸ்கிறீமும் வந்துடுச்சு. மெக்சிக்கோவைச் சேர்ந்த ஹேலாடாக்ஸ் என்ற நிறுவனம், இயற்கையான பழச்சுவைகளில் வெவ்வேறு வகைகளில் நாய்களுக்கான ஐஸ்கிறீம்களைத் தயாரித்துள்ளது. எளிதில் ஜீரணமாகும் வகையில் சுவையுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஐஸ்கிறீம்களை நாய்கள் விரும்பிச் சாப்பிடுகின்றன.

# கண்ணாடித் தவளை





தவளை இனங்களில் பலவகை உண்டு. அவற்றில் ஒன்று, கண்ணாடித் தவளைகள். இவற்றின் வயிற்றுப் பகுதி தோல், கண்ணாடியைப் போன்று உள்ளுறுப்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் இருக்கும். இவற்றிலும் பல வகைகள் உள்ளன. சமீபத்தில், அமேசான் - காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கண்ணாடித் தவளை ஒன்றின் நெஞ்சுப் பகுதியும் கண்ணாடியைப் போன்று உள்ளது. இதனால், தோலின் ஊடாக தவளையின் இதயப் பகுதியைக் காண முடிகிறது. இரண்டு சென்ரி மீற்றர் அளவுக்கு இந்தத் தவளைகள் உள்ளன. இயற்கை, இன்னும் எத்தனை அதிசயங்களை தனக்குள் வைத்திருக்கிறதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



### அண்மையில் தாங்கள் வியப்படைந்த விடயம்?

### மாகாண சபையில் முதல்வருடன் ஒத்துப் போகாத இவர்கள் எப்படி ...

### மக்கள் புரட்சி பற்றி?

வினு அபி கம்சி

**மக்கள் புரட்சி பற்றி?**

நாம்தான் கொண்டுவந்தோம் அதனால் நாம் போடும் தாளத்திற்கு கொழும்புக்கு ஏற்றாற் போல் முதலமைச்சரும் ஆடவேண்டுமென நினைத்த கொழும்புத் தமிழ்த் தலைமைக்கு முதல்வரின் மக்களுக்கான போக்குப்பிடிக்க வில்லை. தூக்கி எறியப் பார்த்தார்கள். துவை பட்டே போனார்கள்.

இனியொருமுறை முதல்வருடன் முறைக்கக் கூட நினைக்க மாட்டார்கள். இந்த மக்கள் புரட்சி பலரின் அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வரப்போகின்றது என்பதை தெட்டத் தெளி வாக எடுத்துக் காட்டியிருக்கிறது. இனி தூக்கி எறிவது... எல்லாம் சரி வராது செல்லம்.

பிரகாஸ் மிருசுவில்

**தற்போதைய அரசியல் நிலவரம்பற்றி?**

எல்லாம் அடங்கி விட்டது என்று மட்டும் நினைத்து விடாதீர்கள். இப்போது அடங்கி இருப்பவர்கள் அறுகம்புல் போல. வெளியே வெட்டப்பட்டிருக்கிறதே தவிர உள்ளே ஆழத் தில் அதன் கிழங்கு அப்படியே இருக்கிறது. சின்ன மழைத்துளியினை கண்டுவிட்டால் பொட்டென்று எழுந்து எதிராய் நின்று சதிராடும் அவ்வளவுதான்.

மீரா சண்டிலிப்பாய்

**குழப்பவாதிகளை நீங்கள் இனம் கண்டீரோ?**

கண்டேன் கண்டேன் நன்றாகக் கண்டேன் என் அன்பார்ந்த அருமைத் தமிழ்ச் சகோதரர்களே! அடுத்த தேர்தல் வரும்வரை வல்லாரையை வாங்கி அதிகம் சாப்பிடுங்கள். வல்லாரை ஞாபக சக்தியை அதிகரிக்கும்.

அடுத்த தேர்தல் வரும்வரை இந்த குழப்ப வாதிகளை நினைவில் வைத்திருக்கவேண்டு மல்லவா. அதுதான்.

சதீஸ் கோண்டாவில்

**மாகாண சபையில் முதல்வருடன் ஒத்துப் போகாத இவர்கள் எப்படி தமிழர் உரி மையை வென்றெடுப்பார்கள்?**

என்னது தமிழர் உரிமையை வென்றெடுப் பதா சும்மா பகிடி விடாதீங்க சதீஸ். அவர் களுக்கு அதைப்பற்றியெல்லாம் சிந்தனை யில்லை. எங்கோ இருந்து கட்டளை வருகிறது. அதன்படி நடக்கிறார்கள் அவ்வளவுதான்.

அபி கிளிநொச்சி

**ஜோக் பிளீஸ்?**

திருமண வீட்டில் சாப்பாடு பிரமாதமாக இருக் கிறது. சமையல்காரன் எங்கே கை கொடுக்க வேண்டும் என்பவருக்கு வந்த பதில் அவர் வீட் டிற்கு சாப்பிட போய்விட்டார்.

சுதன் குப்பிளான்

**தமிழரசுக் கட்சி அடுத்த தேர்தல் தென்பகுதி யில் கேட்குமோ?**

போகும் போக்கைப் பார்த்தால் அது புலப் படும் போலத்தான் தெரிகிறது.

யுபா கரவெட்டி

**முதலமைச்சரை நீக்க நினைப்பது போர்க் குற்ற விசாரணையை இல்லாது செய்யத் தானே?**

முற்றிலும் உண்மை. கொழும்பு போடும் தாளத் திற்கு உலகிற்கு ஆடிக்காட்ட எம் தலைமை தயார். ஆனால் முதலமைச்சர் அதற்குத் தயாராக இல்லை. நெற்றிக்கண் திறப்பிலும் குற்றம் குற்றமே என முதல்வரின் பேச்சு உலக நாடுகளை சென்றடைய என்ன செய்ய ஏது செய்ய என தெரியாது விழித்த எம் தலைமை முதல்வரை தூக்கி எறிய முற்பட்டு மூக்குடைந்து போனது தான் மிச்சம்.




கஜன் முள்ளி

**காலமெல்லாம் காதல் வாழ்க! இது வாழ் கிறதா?**

கள்ளக் காதல்கள் வாழ்ந்து கொண்டிருக் கிறது. நல்ல காதல்கள் நாளுக்கு நாள் செத் துக் கொண்டிருக்கிறது.

மதியுகி சுழிபுரம்

**உண்மையான காதல் என்றால் என்ன?**

ஒருவன் இன்னொருத்தியுடன் தொடர்பில் இருக்கிறான் என்று தெரிந்த பின்பும் அவனு டன் மணித்தியாலக் கணக்காய் போனில் கடலை போடுகிறதை உண்மைக் காதல் என்று சொல்லலாமா?

டெனிஸ் வளலாய்

**பேரறிஞர் அண்ணாவின் வாழ்வு பற்றி?**

1909இல் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த அண்ணா குடும்ப சூழ்நிலை காரணமாக படிப்பை பாதியில் விட்டு விட்டு கிளார்க் வேலை செய்தார். அந்த வேலை செய்து கொண்டே பட்டப்படிப்பை முடித்தார்.

பெரியாரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட அண்ணா பெரியாருடன் இணைந்து காலனி ஆதிக்கத்திற்கு எதிராக போராடினார்.

பின்னாளில் பெரியாருடன் இருந்த கருத்து முரண்பாடுகளுடன் இந்திய சுதந்திர தின த்தை கறுப்பு நாளாக கொண்டாடச் சொல்லி பெரியார் தொண்டர்களுக்கு அறிவிக்க இந் திய சுதந்திரத்தில் ஒவ்வொரு இந்தியனுக்கும் பங்குண்டென நேரடியாகவே பெரியாரை எதிர்த்து வெளியேறிய அண்ணா தி.மு.கவை ஆரம்பித்து இரண்டுமுறை தமிழக முதல் வராக மக்கள் மனங்களில் நீங்காத இடம் பிடித்த தலைவராக வலம்வந்தார்.

1969ஆம் ஆண்டு மாசிமாதம் அறிஞர் அண்ணா இயற்கை எய்தினார். இவரின் மரண ஊர்வலம் கின்னஸ் சாதனையாக பதி யப்பட்டது. ஆம் இவரின் மரண ஊர்வலத் திற்கு 15 மில்லியன் மக்கள் கலந்து கொண்ட னர். இதுவே அந்த சாதனையாகும்.

1972ஆம் ஆண்டு எம்.ஜி.ஆரினால் அ.தி.மு.க என அண்ணாவை பெருமைப்படுத்தி கட்சி தொடங்கப்பட்டது.

கவி மிருசுவில்

**அண்மையில் தாங்கள் வியப்படைந்த விடயம்?**

ஜூனியர் விகடனில் பிரசுரமான ஒரு வார்த்தை அது... பெயரைக் கேட்டா சும்மா அதிருதெ ல்ல? என்கின்ற வார்த்தை பெரியாருக்கும் பிரபாகரனுக்கும் மட்டுமே பொருந்து கின்றது.

சந்திரகுமார் சுன்னாகம்

**வட மாகாண சபை மட்டுமா? இல்லை எல்லா மாகாண சபையும் இப்படியா?**

முதலில் முதலமைச்சர் என்பதன் பொருளை விளங்கிக்கொள்ள வேண்டும். வடமாகாண சபையில் மட்டும்தான் நடுநிலை வகிக்கும் அவைத்தலைவருக்கே ஒரு அணி இருக்கிறது.

ஐயகோ இறைவா எத்தனை இழப்புக்கள், எத்தனை தியாகங்கள், எத்தனை பாடுகள் அத்தனையும் தாண்டி எமக்கான அரசு என்ற தெம்பில் இருக்க இங்கே கன்னை பிரிப்பு நடக்கிறது. எல்லாம் காலக் கொடுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## நினைவு சுமந்து

விதியது முடிந்தது
மதியது கெட்டது
உனை மறுபடி பார்ப்பேனா
இரவது புலர்ந்ததும்
பகலது விடிந்ததும் –உன்
விழியது காணத்தான்
தொலைத்ததும் இல்லை
தொலைந்ததும் இல்லை
தோழி எம் காதலடி
மறுபடி பிறந்தேன் –ஓர் நாள்
வான் மதியது காண
உன் மடியில்
தலை வைத்து –அந்த
ஒரு நொடி போதுமே
புது யுகம் புதுமுகம்
புரட்டிய பெண்மையே
நான் பழையது ஆவேனா
எம் காதலும் என்னையும்
யாரிலும் பெறமாட்டாய்
இது போதுமே பெண்மைகளே
என் ஆயுளும் வாழுமே
உன் நினைவினைச் சுமந்தபடி

**யாழ்.வாகீஷ்**

## நரங்கள் நெட்டில் வாழ்பவர்கள்

தசை தசையாய் தரையிலே
கிடந்தது –தம்பி
தலையில்லாமல் கடலிலே
மிதந்தது – தந்தை
நாங்கள் முட்கம்பிகளுக்குள்
முகவரி தேடிய மனிதர்கள்
எங்கள் சகோதரிகளின்
பிணக் குவியலில்
உடல் புசித்தது சில மிருகங்கள்
இன்னமும் தொடர்ந்திடும்
போரின் ஆட்டங்கள்
வேலையின்றி பலர்
ஊதியம் உயர்ந்த சிலர்
உலகம் கண்களின்றிப்
பிறந்த குழந்தை –எங்கள்
துன்பங்களைப் பார்க்காதவரை

**இரா.நவதர்சினி**
**வயாவிளான்**

## முன்னிலை மறந்து

மாடி வீட்டின்
மேல்தளத்தில் நின்று
இன்னும்
மேல் நோக்கும்
உன் பார்வையை
சற்றே
கீழ் நோக்கி செலுத்து
அங்கே
நீ வாழ்ந்திருந்த
மண் குடிசையின் எச்சங்கள்
கண் சிமிட்டி
சிரிக்கும்

**சிவ–சிவநேசன்**
**அரியாலை**

## உயிர்ப்பு

வஞ்சனை வெறியால்
வாவிகள் வற்றிவிட்டன!
கொக்குகள் பறப்பதாய் இல்லை
மீன் கொத்திகளோடு –கூடவே
தப்பிப் போன பருவமழைக்காய்
தவங் கிடக்கின்றன...
தவளைகளும் ஆமைகளும்
தப்பிப்பிழைத்து விட்டன!
பச்சோந்திகளாய் உருமாறி
இறுதிவரை குளத்தோடு
ஒன்றித்த மீன்களின் ஆத்மாவை
கடலை நோக்கி
தள்ளிப் போகிறது....
இலட்சியக்காற்று....

**மடத்துக்கடவை**
**த.மோகன்ராஜ்**

## கோவிந்தா கோவிந்தா!

வந்து போகும் எம்மவர்கள்
பந்து போல போலவே
வார்த்தை அம்புகளை விட்டதுவும்
பந்து போல போலவே!

எந்த அணி எந்த நிறம்
என்னவென்ற கதையெல்லாம்
சொந்த புத்தி இல்லையென்று
வந்து வந்து போகுதே!

வந்த கதியில் மந்த கதி
மாறும் என்று எண்ணவே
மந்தம் மந்தம் அசமந்தமாக
கந்தை கந்தை போலவே!

விந்தை இது என்று எண்ணி
வியந்து நின்ற போதிலே
சந்தை போல போல
சத்தம் சத்தம் கூடவே!

முந்தி இவர் இப்படியா
என்று கேள்வி கேட்கவே
என்றும் இவர் இப்படியே
வந்த பதில் கணபதியே!

பிந்த வந்த பிள்ளைபோல
பேந்த பேந்த முழிக்கிறார்
இனி சாந்தமில்லை தங்களுக்கு
நாமம் நாமம் நாமமே!

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 358



## நல்ல தீர்ப்பு

தன்னலம் இல்லா
தலைவர் நீங்கள்
தமிழ் இனம் யாவும்
உங்க பின்னாலே
நீங்கள் நினைத்த
செயல் யாவும் நடக்கும்
கண்ணு முன்னாலே
நீதி பிழைத்து
நெறி தவறியவரை
நாம் ஒருபோதும் அனுமதியோம்
உண்மையின் பாதையில்
உறுதியோடு நடைபோட்ட
உங்கள் இலட்சியம் வெல்லும்
நல்ல தீர்ப்பை
நாளை உலகம் வழங்கும்

**சி.திவ்வியா**
**யா.ப.மெ.ம.வி.**

## கதிரவனை கையால் மறைக்க முடியுமா?

காகம் திட்டி மாடுதான் சாகுமா?
கதிரவனை கையினால்
மறைக்கத்தான் முடியுமா?
சதிகாரக் கயவர்களின்
கதை முடியும் காலம்
சற்றுத் தொலைவில்தான்– இதோ!
அலைகடலெனத் திரண்ட
இந்தப் படை சாட்சி
ஐயா விக்னேஸ்வரன்தான்
என்றும் எம் முதல்வர்!

**கு.நிருஜன்**
**யாழ்ப்பாணம்**

## நீதி எப்படிச் சாகும்

உலகம் வியக்கும் எங்கள்
முதல்வனை– எங்கள்
துன்பம் அகற்றவே பிறந்த
எங்கள் தலைவனை
வீணாய்தானே வீழ்த்த நினைத்தார்
எப்போதும் தமிழர்
எரிமலை நெருப்பாய் அவர் பின்னால்
திரள்வர் என்பதை அறியா துஷ்டர் பலருக்கு
உரமாய் எழுந்து உண்மைக்குரலால்
உரிமையைச் சொல்லும்
ஒருமித்த மக்கள் எம்படையின்
எழுச்சி கொண்ட
போராட்ட மாற்று வடிவமே இது

**வி.றபின்சன்**
**புன்னை நீராவி**

## நிலையான அரசுக்காய் அணி திரள்வோம்

ஆயிரம் ஆயிரம் உயிர்களை
அவனியிலே தியாகம் செய்து
நல்வாழ்வு வாழ்வதற்காய்
வடமாகாணத்தில் தேர்தல் நடத்தி
நல்லாட்சி அரசொன்றை
தெரிவு செய்து
நாம் படும்பாடு நாய் படாப்பாடு
என்றாலும் நிலையான அரசொன்று
எமக்கு வேண்டும்

**பா.கலாதேவி**
**சண்டிலிப்பாய்**

## வெற்றி

நம்பிக்கையில்லாப் பிரேரணையை
யார் கொண்டு வந்தாலும்
நம்பிக்கை இழக்காத மக்கள்
தம் விக்கினம் தீர்க்கும்
முதலமைச்சரே தம்
நீதித் தலைவன் என
பூரண ஹர்த்தால் கவனயீர்ப்பு
போராட்டத்தில்
நீதி உணர்வலைகளாக
மக்கள் வெள்ளம்
தம் இனத்து மக்களை
வீழ்த்த வந்தவர்களின்
உள்ளங்கள் வெட்கித் தலை குனிவு
ஒன்றுபடுவதே தலை நிமிர்வு

**சி.சுகிர்தமலர்**
**உரும்பிராய்**

## எம் தலைவா இது உனக்கு

எம் ஆறாத துயர் அகற்றும்
அரும் கரத்தை
வீணாகப் பழி சுமத்தி
ஒதுக்கிவிட எத்தணித்தோர்
முகம் முன்னால் பெரும் படையாய்
துடித்தெழுந்த பல்லாயிரம்
எம்மறவர் தமிழ்ப்படையின்
இப்பேரெழுச்சி அழகை எல்லாம்
உலகமதின் பார்வைக்கும்
நாம் உணர்த்த வேண்டும்
எமக்காக அரசாளும்
எம் முதல்வர் மறுபடியும்
தன் பணியை மிக நிதானமுடன்
தொடர வேண்டும்

**ம.அருள்யோண்சன்**
**கிளிநகர்**

## தலைவர் வழி காத்திடவே தலைப்பட்டவரே விக்கி ஐயா

தந்தை செல்வா மறைந்தாரே
நாம் அநாதை ஆனோமே
தலைவர் பிரபா வந்தாரே
நாம் தலை நிமிர்ந்தோமே
தலைவர் வழி காத்திடவே
வந்தவரே விக்கி ஐயா!!
ஊழைகளையும்
உம்மாண்டிகளையும்
நம் தலையில் வைத்துவிட்டு
சுகவாழ்வு வாழ்ந்திடவே
பித்தலாட்டம் போடும் பேய்களுக்கு
தன்மான தமிழ் இளைஞர்கள்
சாட்டை அடி கொடுத்து
தம் குணத்தைக் காத்திடுவர்

**கொக்குவிலூர்**
**A.V.N.T.**

# மௌனத்தின் தேடல் –359



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 28.06.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை





புதிய அரசியலமைப்பு மூலம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு பூர்த்தியாக வாய்ப்பில்லை என்பதை நல்லாட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர் மனோ கணேசன் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வு , சமஷ்டிக் கோரிக்கை, வடக்கு - கிழக்கு இணைப்பு என்பன இனிமேல் சாத்தியப்படாது என்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை , யுத்தத்திற்குப் பின்னர் தமிழ் மக்களின் நிலை பலவீனமாக இருக்கின்றது. எனவே தருவதனை வாங்கிக் கொண்டு ஜனநாயக ரீதியில் அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியுள்ளார்.




அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு அமைச்சர் மனோ இவ்வாறு கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு - கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளில் ஒன்று. இரண்டு மாகாணங்களும் பிரிந்திருந்தால் மத்திய அரசிடம் உரிமைகளை கேட்டு வென்றெடுப்பதில் பாரிய இடையூறுகள், கால தாமதம் ஏற்படும் என்பது தமிழர்களின் வாதம்.

மாகாண உரிமைகளைப் பெற்றுக்கொள்ள அம் மாகாண மக்களின் ஒத்துழைப்பு முக்கியமானது.

தமிழ் - முஸ்லிம் என்று சிறுபான்மை மக்கள் பிரிந்து இரண்டு மாகாணங்களிலும் இருப்பதால் வடக்கு - கிழக்குக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை மத்திய அரசு தட்டிக்கழித்து வருகிறது.

தமிழ் - முஸ்லிம் மக்கள் என்ற வேறுபாட்டைக் களைந்து தமிழ் பேசும் மக்களாக இணைந்து செயற்பட்டால் மத்திய அரசிடம் எமக்கான உரிமைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

வடக்கு தமிழ் மக்களின் மாகாணமாகவும் கிழக்கு முஸ்லிம் மக்களின் மாகாணமாகவும் பார்க்கப்படும் சூழ்நிலை சிங்களவர்களுக்குச் சாதகமாகவுள்ளது.

வடக்கில் தமிழர் ஒருவர் முதலமைச்சராகவும் கிழக்கில் மத்திய அரசின் ஆதரவுடன் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகவும் இருக்கும் சூழ்நிலையில் இரு மாகாணங்களின் உரிமைகளை வென்றெடுக்க ஒருமித்த குரலில் உரத்துக் கூறமுடியாதுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரித்தது நீதிமன்றத் தீர்ப்பாயினும் அந்நிலைக்குக் காரணம் அரசியல்வாதிகளே.

அரசியல்வாதிகள் நினைத்தால் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்க முடியும்.

இந்த இரண்டு மாகாணங்களும் இணைக்கப்படுமாகயிருந்தால் வடக்கிலே சிறுபான்மையாக இருக்கும் முஸ்லிம் மக்களுக்கும் நல்லது, கிழக்கிலே சிறுபான்மை மக்களாக மாற்றப்பட்டுவரும் தமிழ் மக்களுக்கும் நல்லது. இதை தமிழ் - முஸ்லிம்அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களின் நலன்சார்ந்து சிந்தித்து செயற்பட வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைய வேண்டும் என்றுதான் மக்கள் கருத்தறியும் ஆணைக் குழுவிற்கு வடக்கு-கிழக்கு மக்களில் பெரும்பான்மையானவர்கள் கருத்துரைத்திருந்தனர்.

ஆனால் அதைப் புறந்தள்ளிவிட்டு புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படுவதை அமைச்சர் மனோ கணேசன் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை மத சார்பற்ற நாடாக இருக்க வேண்டும். வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

புதிய அரசியலமைப்பு சமஷ்டி அரசியலமைப்பாக வரவேண்டும் என்பது சரி. ஆனால், இந்த விடயங்கள் நடக்காது.

அதுவே உண்மையும் கூட. இந்த யதார்த்தத்தின் பங்காளியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இருந்து கொண்டிருக்கின்றது என்று மனோ கணேசன் கூறியுள்ளார்.



சமஷ்டிக் கோரிக்கையையும் வடக்கு-கிழக்கு இணைப்பையும் தமிழ் மக்கள் எக்காலத்திலும் கைவிட மாட்டார்கள்.

அதேவேளை, தமிழ் மக்களின் கோரிக்கையை நல்லாட்சி அரசும் நிறைவேற்றாது என்பதை மனோ கணேசன் உறுதிப்படுத்தியுள்ளார். இது தான் யதார்த்தம் என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய அரசியலமைப்பு குறித்த உண்மையைக் கூறுவதில் மனோ கணேசன் தயக்கம் காட்டவில்லை. அவர் வடக்கு-கிழக்கு இணைப்பு இனிமேல் சாத்தியப்படாது என்பதையும் சமஷ்டிக் கோரிக்கைக்கு அரசு இணங்காது என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால், புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும்; தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைத்துவிடும்; வடக்கு-கிழக்கு இணைக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கி வாக்கு வேட்டையில் ஈடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் என்ன செய்ய முடியும்.

முடிந்தவரை எதிர்க்கட்சித் தலைவராக இரா. சம்பந்தன் இருப்பதையும் அரசிற்கான ஆதரவை வழங்கி தாங்கள் அடைய வேண்டியவற்றை அடைந்து கொள்ளவுமே முடியும்.

இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் இன்னும் முழுமையாக மீள்குடியேற்றப்படவில்லை.

காணாமற் போனவர்களின் உறவினர்களின் கண்ணீர்ப் போராட்டம் முடிவின்றித் தொடர்கிறது. தமிழ் மக்களின் காணிகளிலுள்ள படையினர் வெளியேற்றப்படவில்லை உள்ளிட்ட தமிழ் மக்களின் நலன்சார்ந்த எந்த விதச் செயற்பாடுகளும் நல்லாட்சி அரசாங்கத்தால் நிறைவேற்றப்படவில்லை.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, அரசிற்கு வழங்கிய ஆதரவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிவரும் என்று கூட கூற முற்படவில்லை என்பதுதான் வேதனையான விடயம்.

புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்யக் கூடியதாக அமைய வேண்டும். இல்லையேல், நல்லாட்சி அரசின் மீதும் அதற்கு ஆதரவளித்து தாங்கிக் கொண்டிருக்கும் தமிழ்த் தலைமைகள் மீதும் மக்கள் வெறுப்புக்கொள்வர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் மீது தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதோடு பங்காளிக் கட்சிகள் இடையேயும் பிளவை உருவாக்கியுள்ளது.


இந்நிலையில் தமிழ் மக்களின் ஆதரவை மீண்டும் தக்கவைத்துக்கொள்ள புதிய அரசியலமைப்பைப் பயன்படுத்திக்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை என்பதை தமிழ்த் தலைமைகள் புரிந்து செயற்பட வேண்டும்.


எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிபோகும் இரணைதீவும் – ஆதாம் பாலமும்

இதுவரையில் நிலத்தில் மட்டுமே தமது ஆக்கிரமிப்பு கைவரிசையைக்காட்டிவந்த வடக்கிலுள்ள படைத்தரப்பினர் இப்போது நிலத்திலிருந்து தாவி கடலிலும் உள்ள தீவுகளிலும் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.





போதாக்குறைக்கு ஆட்சிக்கு வந்தவுடன் மக்கள் குடியிருப்புக்களிலிருந்து இராணுவம் விலக்கப்பட்டு அப்பகுதி மக்கள் அவ்விடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவர் என- யாழ் -தேர்தல்மேடைகளில் இப்போதுள்ள தலைவர்கள் (சந்திரிகா உட்பட) வாக்குறுதி வழங்கிச் சென்றமை நினைவிருக்கலாம்.

அவை அனைத்தும் பச்சைப் பொய்களே என்ற நிலையில்வெளியேற்றப்பட்ட மக்கள் இப்போது தாங்களாகவே நடுவீதிக்கு வந்து நாட்கணக்கில் பசி பட்டினியுடன் அறவழிப்போராட்டத்தில் குதித்து தமது நிலங்களைமீட்கும்நிலைக்கு வந்துள்ளனர். பலத்த போராட்டத்தின் மத்தியில்மன்னாரிலுள்ள முள்ளிக்குளம்கிராமம் இன்று அப்பகுதிமக்களால் மீட்கப்பட்டுள்ளது.

இதன்வழியிலேகேப்பாப்பிலவு மற்றும் இரணைதீவு மக்களும் தொடர்ந்தும் தமது அறவழியிலான போராட்டத்தினை தொடர்கின்றனர். வடக்கிற்கு வரும்அமைச்சர்கள் பிரதமர் மற்றும் ஜனாதிபதி உள்ளிட்ட பல "நல்லாட்சித்" தரப்பினரும், இதுகுறித்து வாய்திறப்பதில்லை.

கிளிநொச்சிமாட்டத்தின்மேற்கு கரையோரப்பகுதியில் அமைந்துள்ள முக்கியமான தீவான இரணைதீவும் மன்னார்மாவட்டத்தின் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிவரையில் அமைந்துள்ள ஆதாம்பாலமும் இன்று இராணுவத்தின்பிடியிலிருந்து விடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அறியமுடிகிறது மேற் குறித்த இரு இடங்களும் மீன் பிடித்தொழிலுக்கும்- சுற்றுலாத் தெழிலுக்கும் மிகவும் வாய்ப்பான இடங்களாகும். தேசியபாதுகாப்பு என்றும் போதைவஸ்துக் கடத் தல் தடுப்பு என்றும் இவ்விரு இடங் களையும் படைத்தரப்பு ஆக்கிரமித்திருக்கிறது கடற்படையானது.

தேசிய பாதுகாப்பு எனக்கூறி ஆதாம்பாலத்தில் சுற்றுலா நடத்துகிறது. இரணைதீவிலோ அட்டைகுளிப்புச்செய்து வியாபாரம்செய்கிறது. எந்த நிலையிலும் இப்பகுதிகளை படைத்தரப்புக்குத் தாரைவார்ப்பதை அனுமதிக்கமுடியாது

### இரணைதீவு


கிளிநொச்சி பூநகரி கரையோரம் சார்ந்து இடஅமைவு பெற்றுள்ள இரு தீவுகளே இரணைதீவாகும். இதில்வட தீவு எட்டு ச.கி.மீ. பரப்பளவையும் தென்தீவு ஐந்து ச.கி.மீ.பரப்பளவையும் கொண்டுள்ளது. ஏறக்குறைய 225குடும்பங்கள்1992இல் இங்கு வாழ்ந்து வந்துள்ளன. பெரும்பாலும் கத்தோலிக்க மக்களே இங்கு அதிகமாக வாழ்ந்துள்ளனர்.

குடியிருப்புக்குரித்தான பாடசாலை - தேவாலயம் -கன்னியர் மடம் மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனக்கட்டடங்கள் மக்களின் சமூகப் பொருளாதாரத் தேவைகளை நிறைவுசெய்து வந்ததாக கூறப்படுகிறது.

மீன்பிடியே இப்பகுதி மக்களின் மிக முக்கிய பொருளாதார நடவடிக்கையாகும். இத்தீவைச்சூழ ஆழமற்ற கடற்பரப்பானது சிற்றளவு மீன்பிடித்தொழிலுக்கு வாய்ப்பான பின்னணியைக்கொண்டது. அட்டைகுளிப்பு - சங்கு குளிப்புக்கு மிக வாய்ப்பான பகுதியாகவும் இப் பகுதி உள்ளது.

இதனால் பூநகரிப் பிரதேசத்தின் கடல்வளப்பொருளா தாரத்தில் மிகமுக்கிய இடத்தினை இத்தீவு வகித்துவந்துள்ளது. 1992 இப்பகுதிமக்கள் கடற்படையினரால் வெளியேற்றப்பட்டதுடன் இவர்களது வாழ்வும் வளமும் சீரழிந்துபோனதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.






அருகிலுள்ள இரணைமாதா நகர்- முழங்காவில்- நாச்சிக்குடா- வலைப்பாடு போன்ற இடங்களில் இப்பகுதி மக்கள் தஞ்சம்புகுந்துள்ளனர். 2009 இல்யுத்தம் தீவிரமடைந்தபோது இப்பிரதேசங்களை விட்டு முற்றாக மக்கள் வெளியேறியிருந்தனர். யுத்தம் முடிவடைந்து பல வருடங்களாயிற்று. இன்னும் இவர்களுக்கு மீட்பு இல்லை. இரணைதீவு தேசிய பாதுகாப்புக்கு அவசியமாம். அதனால் அதனை விடமுடியாது எனபடைத்தரப்பு தெரிவிக்கிறது. பாக்கு கடலை கண்காணிக்க தலை மன்னார் மற்றும் கச்சதீவு - நெடுந்தீவு - பேசாலை போன்ற இடங்களிலெல்லாம் கடற்படைத் தளமுள்ளது. இரணைதீவில் முகாமிருப்பதற்கான எந்த அவசியமும் இல்லை.

காலக்கிரமத்தில் இத்தீவை முழுமையாக ஆக்கிரமித்து கொக்கிளாய் - நாயாறு போல தெற்கு மீனவர்களைக்கொண்டு மீன்பிடியில் ஈடுபடுத்துவதே அவர்களது நோக்கமாக இருக்கலாம். இத்தீவு பறிபோகுமாயின் கிளிநொச்சிப்பிரதேசத்தின மீன்பிடித்தொழில் பெரும் பின்னடைவையே சந்திக்கும்.

### ஆதாம் பாலம்

இராமர் அணை என அழைக்கப்படும் ஆதாம்பாலமானது வரலாற்றுப் பாரம்பரியமிக்க ஒரு பிரசித்திபெற்ற பிரதேசமாகும். பதினைந்துக்கும் அதிகமான அசையும் பெரிய மணற்றிட்டிகளையும் நூற்றுக்கும் அதிகமான சிறிய மணற்றிட்டிகளையும் சங்கிலித் தொடர்களாகக்கொண்டு அமைந்துள்ள இப்பாலமானது இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து மன்னார் தீவிலுள்ள தலைமன்னார் வரை சுமார் 50 கி.மீ வரை நீண்டு ஒரு தொடராக அமைந்துள்ளது.

பாரம்பரிய நீர்ப்பரப்பான பாக்குத்தொடுகடலையும் மன்னார் விரிகுடாவையும் இத்திட்டுக்கள் பிரித்து நிற்கின்றன. இச்சூழல் சராசரியாக 1 தொடக்கம் 10 மீற்றர் வரையிலான ஆழத்தையும் கொண்டது.

இத்திட்டானது 600 ஆண்டுகளின்முன்னரேஉருவாகியதாக நம்பப்படுகிறது. இது இயற்கையானதா அல்லது மனிதரால் அமைக்கப்பட்டதா என பல வாதப்பிரதாபங்கள் உள்ளன.

இந்துக்கள் இது இராமரால் இங்கையில் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை மீட்க தனது இராணுவமான வானரங்களைக்கொண்டு **(Ape Men)** உருவாக்கிய பாலம் என நம்புகின்றனர் "நாசா" **(NASA)** விண்வெளி ஆய்வுமையமும்சமீபத்திய (2002) ஆய்வு ஒன்றின்முலம் இத்திட்டானது மனிதரால் உருவாக்கப்பட்டவையாக இருக்கலாம் என ஆதாரம் வெளியிட்டுள்ளது.

எதுவாயினும் புகழ்பெற்ற இத்திட்டானது தலைமன்னார் மக்களின் மீன்பிடித்துறையில் மிக முக்கியமான பகுதியாக நீண்ட காலமாக இருந்துவருகிறது.

இத்திட்டுக்களில்தங்கியிருந்து கரைவலை மற்றும் படுப்புவலைத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆயினும் இன்று இத்திட்டானது அங்குள்ள கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு சுற்றுலாத் தொழிலை தாம்விரும்பியவாறு நடத்திவருகிறது. கடற்படையினர் அண்மையில் மீனவர்கள் இத்திட்டினை பயன்படுத்த முடியாது என அறிவித்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

அப்பகுதி மீனவர்கள் இதற்கு பலத்த எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர். தமது வாழவும் வளமும் இதுவே என மீனவர்கள் கூறுகின்றனர்.

வடபகுதி கடற்பகுதியில் பாலைதீவு - கற்கிடதீவு - கச்சதீவு போன்றன மனித சஞ்சாரமற்றதீவுகளாகவுள்ளன. இவைகள் வடபகுதி மீனவர்களின் மீன்பிடித்தலுக்கான முக்கிய தளங்களாவும் இராமர்பாலமானது எதிர்காலத்தில் மிகச்சிறந்த சுற்றுலாத் தளமாக விருத்தியடையக்கூடிய ஒரு பகுதியாகவும் காணப்படுகின்றன.

ஏற்கனவே வளமான கச்சதீவு எமது பகுதி மீனவர்களால் நெருங்க முடியாத ஒரு இடமாக மாறியிருக்கிறது. இப்போது இரணைதீவும் ஆதாம்பாலமும் குறி வைக்கப்பட்டுள்ளது.


அடுத்து பாலை தீவும் கச்சதீவும் எக்காரணம்கொண்டும்யாருக்கும் விட்டுக் கொடுக்க அனுமதிக்கமுடியாது. வடமாகாணசபை இத்தீவுகள் விடயத்தில் எந்தவிதமான அக்கறையும் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

மனித சஞ்சாரமற்றதீவுகளும் ஆதாம்பாலமும் பறிபோகுமாயின் வடக்கின் மீன்பி டித்துறைக்கும் சுற்றுலாத்துறைக்கும் பேரிழப்பாகவே அது அமையும் என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு கூறி வைக்க விரும்பு கின்றோம்.

பேராசிரியர் A.S.சூசை
யாழ். பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அனிஸ்கோ 2036' விஞ்ஞானப் புனைகதை



சனா வலம்புரி நாளிதழை தனது மடிக்கணனியில் படித்துக் கொண்டிருந்தான். கணனித்திரையில் 2036 நவம்பர் 19 புதன்கிழமை எனக்காட்டியது. கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் சரியாக பி.ப.5.50 ஐத் தாண்டியது. அவனது மொபைல் கிட்டில் இருந்த தொலை பேசி கிணுகிணுத்தவாறே பறந்து வந்து அவனது கையில் நின்றது. முகப்பில் அவனது நண்பி மிதுவின் உருவம். ஹலோ சொன்னான்.

" ஹலோ சனா நாளை விண்வெளி சோதனை வலயம் (Space Test Zone) செல்ல வேண்டும். என்ன மறந்து விட்டீர்களா? இன்றும் தலைமை விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல் உள்ளது என மிது முடிக்க. ஆம் மிது, ஆயத்தமாகி விட்டேன். நாம் கலந்துரையாடலின் பின்னர் ரொக்கி விண்ணூர்தி மையத்திற்குச் சென்று விடுவோம் என்று சனா கூறினான்.

சனா நான் உங்கள் ஆய்வு கூடத்திற்கு முன்பாக வந்துவிட்டேன். சீக்கிரம் வாருங்கள் என அழைப்பை மிது துண்டித்தாள். சனா வெளியே வர கதவுகள் தன்னியக்கமாக திறந்து வழிவிட்டன. வெளியே கண்ணாடியால் உருவாக்கப்பட்ட வட்ட வடிவ அவனது காரில் மிது அமர்ந்திருந்தாள். சனா சங்கேத இலக்கத்தை (Code Number) தொலைபேசியில் பதிவு செய்ததும் காரின் கதவுகள் திறந்து கொண்டன. " ஹாய் சனா புறப்படுவோமா?" மிது நாம் புறப்படுவோம்" என்று கூறியவாறே சனா காரின் Start பொத்தானை அழுத்தியதும் காரின் உட்புற ஒலிபெருக்கி நல் வாழ்த்துக்கள் உங்கள் ஆசன வார்களை (Sheet Belt) இணைத்துக் கொள்ளுங்கள் நன்றி என ஒலித்தது. கார் வளியில் மிதந்தவாறு போக்குவரத்து முறைக்கேற்ப இருவரையும் தாங்கிச் சென்றது. வழிகளில் இருபகுதியிலும் பெரிய கட்டடங்கள் வானத்தை மிஞ்சின. GPS தொழில்நுட்ப கமராக்கள் கண்காணிப்பில் ஈடுபட்டன. எல்லா இடங்களிலும் இயந்திர மனிதர்கள் தங்கள் வேலைகளைச் செவ்வனே செய்து கொண்டிருந்தனர்.

"தயவு செய்து கவனிக்கவும் தங்களது பயண இலக்கை அடைந்து விட்டோம் நன்றி" என ஒலிபெருக்கி ஒலித்தது. அவர்கள் ஆராய்ச்சி கட்டட மையப் பகுதியை அடைந்ததும் இரு இயந்திரக் காவலர்கள் காரின் GPS கருவியுடன் தொடர்பு கொண்டு தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு கூறினர். இருவரும் தங்கள் இலத்திரனியல் அடையாள அட்டையை காட்டியதும் விரல் அடையாளத்தை உறுதிப்படுத்திய பின் உள்ளே சென்றனர். நேரம் பிற்பகல் 8.14. இருவரும். விஞ்ஞானிகளுடனான கலந்துரையாடலில் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். இணைய தொடர்பில் தலைமை விஞ்ஞானி ஒளிக்கற்றை வடிவில் முப்பரிமாண தோற்றத்தில் அவர்களின் கண்முன் தோன்றினார்.

"உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. சனா, மிது உங்கள் இருவருக்கும் எனது வாழ்த்துக்கள். நமது உலகிற்காக உங்களிடம் மிக முக்கிய பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. சிறப்பாகச் செய்ய மீண்டும் வாழ்த்துக்கள். நீங்கள் காலை 6.55 மணிக்கு பூமியில் இருந்து புறப் படுவீர்கள். ரொக்கி விண்ணூர்தி மணிக்கு 360 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியது. நீங்கள் பூமியிலிருந்து 1800 கிலோமீற்றர் தூரத்திலுள்ள விண்வெளிச் சோதனை மையத்தை முற்பகல் 11.55 அடைவீர்கள். பின்னர் நீங்கள் அனி ஸ்கோ 2036 ஐ மின்னூர்தியில் இருந்து பிரித்து சோதனை வலயத்தில் இணைத்து விடுங்கள். உங்களுக்கான ஆலோசனைகள் மின்னஞ்சல் ஊடாக அறிவுறுத்தப்படும் மற்றும் நாளைய பிறந்த நாளை கொண்டாடும் சனாவிற்கு முன் கூட்டிய பிறந்தநாள் வாழ்த்துக்கள். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நன்றி எனக் கூறியவாறு குரலொலியுடன் அவரது உருவமும் மறைந்து கலந்துரையாடல் நிறைவடைய அனைவரும் கலைந்து சென்றனர்.

அடுத்தநாள் காலை வியாழக் கிழமை சனாவும் மிதுவும் ஆய்வு மையத்திலிருந்து அனிஸ்கோ 2036 சுமந்து கொண்டுள்ள விண்ணூர்தி ரொக்கியை அடைந்தனர். விஞ்ஞானிகளுக்கு கையை அசைத்து விடைபெற ஆயத்தமானார்கள். ரொக்கியின் விண்ணூர்தி ஒலிபெருக்கி " உங்களது பயண வரைபடத்தை கணனிக்குச் சமர்ப்பிக்கவும்" என ஒலித்தது. சனா வரை படத்தை Insert பகுதியில் செலுத்த " நல்வாழ்த்துக்கள் ரொக்கி புறப்பட ஆயத்த மாகிவிட்டது" என மீண்டும் ஒலிக்க கணனியின் திரையில் "2036 நவம்பர் 20 வியாழக் கிழமை காலை 6.45. ரொக்கி மணிக்கு 360 கிலோமீற்றர் வேகத்துடன் புறப்படுகிறது என்ற வாசகம் தோன்றி மறைந்தது. ரொக்கி மெல்ல பூமியில் இருந்து பயணிக்கத் தொடங்கியது. நேரம் காலை 8 மணி. தயவு செய்து கவனிக்கவும். ரொக்கி இப்போது புவியிலிருந்து 750 கிலோ மீற்றர் தூரத்தில் பயணித்துக் கொண்டுள்ளது. இந்த உயரத்தில் புவியீர்ப்பு விசை மிகக்குறைவு (Force of Gravity) ரொக்கியின் ஈர்ப்பு விசை சீராக்கியில் சிறிய கோளாறு ஏற்பட்டுள்ளதால் சில நிமிடங்களில் சீராகி விடும். எனவே நீங்கள் பாதுகாப்பாக ஆசனங்களில் அமர்ந்து வார்களை (Belt) இணைத்துக் கொள்ளுங்கள். நன்றி" என எச்சரித்தது ரொக்கியின் ஒலிபெருக்கி. கோளாறு சீரானதும் மிது "சனா நாம் ஏதாவது சாப்பிடுவோமா?

ஆம், மிது எனக்கு சில மாம்பழ வில்லைகளை மட்டும் தாருங்கள்" எனக் கூறியவாறு சனா அனிஸ்கோ 2036 தயார் படுத்தும் பணியில் மும்முரமாக ஈடுபட்டான். மீண்டும் ரொக்கி " நேரம் முற்பகல் 11.45 மணி ரொக்கி விண்வெளி சோதனை வலயத்தின் எல்லையில் நுழைந்து விட்டது. இன்னும் 60 கிலோ மீற்றர் தூரம் 10 நிமிடங்களில் இலக்கை அடைந்து விடுவோம் நன்றி" என ஒலித்தது.

"சனா அங்கே பாருங்களேன். விசித்திரமான விண்கலங்கள் நம்மை நோக்கி தாக்கப் போவதுபோல் வருகின்றன. சீக்கிரம் பாருங்கள்" என முகத்தில் பதற்றத்துடன் மிது கூறினாள்.

" என்ன மிது பாதுகாப்புத் திரையில் எவ்வித எச்சரிப்பும் வழங்கப்படவில்லையே... சனா சிலவேளை வேற்றுக்கிரக வாசிகளாக இருக்குமோ?

சிலவேளை இருக்கலாம். பூமியிலும் இன்றும் ஆராய்ச்சியில் வேற்றுக்கிரக வாசிகளைப் பற்றிய முழுமையான தகவல்களை அறியவில்லை. மிது எங்கே பின் தொடர்ந்த விண்கலங்களைக் காணவில்லையே?" என வெளியே நோக்கியவாறு சனா கேட்டான் ரொக்கியின் திரைகளில்...

"வணக்கம் அச்சமடையத் தேவையில்லை. நான் சோதனை வலயத்தின் பாதுகாவலர். நீங்கள் விண்வெளிச் சோதனை வலயத்தில் எங்கள் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பகுதியில் இருக்கின்றீர்கள். மையத்தைச் சூழ 60 கிலோமீற்றர் பகுதிகளில் எமது விண்வெளி காவலர்களின் (Space Police) மூலம் கண்காணிக்கப்படுகிறது. நீங்கள் எல்லைப் பகுதிக்கு வந்ததும் உமது விமானம் எம்முடன் தொடர்பை ஏற்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதத்தால் உங்கள் விபரங்களை அறிய முடியாததால் அவர்கள் விண்வெளியில் இருந்து வரும் அச்சுறுத்தல்களை தவிர்ப்பதற்காக உங்கள் விமானத்தை சந்தேகத்தின் காரணமாக பின் தொடர்ந்தனர். தவறுக்கு வருந்துகிறோம். தங்களை விண்வெளிச் சோதனை மையம் அன்போடு வரவேற்கிறது. நன்றி" எனக் கூறி உருவம் மறைந்தது.

"சனா நான் மிகவும் நன்றாக பயந்து விட்டேன்" என மிது ஆரம்பிக்க புவியில் இருந்து ஒரு அவசர மின்னஞ்சல்...

"சனா உங்கள் பிறந்தநாள் பரிசாக நமக்கு இலவசமாக செவ்வாயில் குடியேறுவதற்கான குடியுரிமையும் செவ்வாயில் உள்ள ரெட் மூன் சிட்டியில் (Red Moon City) அழகிய வீடும் பரிசாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மிக மகிழ்ச்சி உங்கள் பிறந்தநாள்பரிசாக முன்கூட்டியே தலைமை விஞ்ஞானி இதனை அறிவித்து விட்டார். நாங்கள்தான் சஸ்பெண்டாக உங்களிடம்... என மிது தொடர சனா அவளது. நீல நிறக்கண்களை உற்று நோக்கினான். அவளது கண்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. சனா மிதுவை கட்டித் தழுவிக் கொண்டான். ரொக்கியின் ஒலிபெருக்கி "ரொக்கி 300 நிமிடங்களில் தனது 1800 கிலோமீற்றர் பயண இலக்கை வெற்றிகரமாக வந்தடைந்து விட்டது. தற்போது அனிஸ்கோ 2036 இன்னும் 5 நிமிடங்களில் தனது பயணத்தை ஆரம்பிக்கும் என ஒலித்தது. சனாவின் முகத்திலோ சற்று திடீர் மாறுதல். ஏதோ சொல்ல நினைக்கிறான். ஆனால் முடியவில்லை. மிதுவிடம் இருந்து விலகியவனாய் வெளியே நான் சென்று தயார் வேலைகளைச் செய்ய வேண்டும். நீங்கள் அனிஸ்கோ 2036 அரச வடிவமைப்பு ஆவணத்தைப் படியுங்கள் என அவள் முன் கோப்பு பைல்களை நீட்டினான். அவள் கோப்பை திறந்து மனக்கண்களால் வாசிக்க சனா தனது வேலைக்காக ரொக்கியில் இருந்து வெளியேறியவனாய் கட்டுப்பாட்டு அறைக்குள் நுழைந்தான்.

கோப்புரையில்... "உலக அரசின் இரகசிய தீர்மானத்தின்படி... 2036 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறிவியல் வளர்ச்சியால் உலக சனத் தொகை அதீத வளர்ச்சியடைந்துள்ளதால் அதனை ஒரு பங்கால் கட்டுப்படுத்தும் வகையாக ஒவ்வொருவருக்கும் உடலில் பொருத்தப்பட்டுள்ள அடையாள நுண்அட்டை (Micro Card) பாதிப்படையச் செய்வதன் ஊடாக மெல்லக் கொல்லும் ஆயுதமாக அனிஸ்கோ 2036 வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் இதில் முதற் கட்டமாக உலக சனத்தொகையினைக் குறைக்கும் செயற்றிட்டத்தில் அதிக வயதுடையவர்களை மெல்ல மெல்ல அழிக்கும் செயற்றிட்டம் அமுலில் வரும் வகையாக செயற்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது" அவளது கைகளோ நடுங்கின. கண்கள் கலங்கின. சனாவின் கைகளோ வெளியில் விரைவாக வேலை செய்தன. அனிஸ்கோ 2036 கட்டளைப் பகுதி செயற்பட ஆரம்பித்தது. இன்னும் சில நிமிடங்களில் அனிஸ்கோ 2036 புறப்படும் என எல்லாத்திரைகளிலும் தோன்றி மறைந்தன.

"சனா என்ன இது! ஆவணத்தில் உள்ளது உண்மைதானா? நாம் மிகப் பெரும் பாவத்தைச் செய்யவா இங்கு வந்தோம்... பதில் கூறுங்கள். ஏன் மௌனமாக இருக்கிறீர்கள் எனப் பதற்ற மான குரலில் மிகுந்த எதிர்ப்பார்ப்புடன் மிது சனாவிடம் கேட்டாள். சனா யோசித் தவாறு...


" ஆமாம் மிது உண்மைதான். என்ன செய்வது உலக நாடுகளின் கட்டளை பூமியை பாதுகாக்கச் செய்ய வேண்டியது நமது கடமை"

அப்படியென்றால் பூமியில் பல உயிர்களை... என்று தொடர்ந்தவளை "இல்லை மிது எனது பிறந்தநாள் பரிசாக உனக்கும் உலக மக்களுக்கும் மிகப் பெரிய பரிசை நான் வழங்கப் போகிறேன்... என சனா தொடர்ந்தான். ஒலி பெருக்கி அனிஸ்கோ 2036 இன்னும் சில விநாடிகளில் தனது பயணத்தை... என ஒலிக்க சனாவின் கைகளோ விரைந்து சில பொத்தான்களை அழுத்தின. முகத்தில் ஏதோ சாதித்துவிட்டதாக ஒரு மகிழ்ச்சி. விண்ணூர்தி கட்டுப்பாட்டு அறையில் இருந்து பாதுகாப்பு அலாரம் ஆவேசமாக அலறியது. மிதுவால் நடப்பதனை காணமட்டுமே முடிந்தது. சனா தனது கைகளை அசைக்க திடீர் பாரிய சத்தம். எங்கும் புகைமண்டலத்துடன் ஒரு நிசப்தம். அவளது கண்களோ மங்கலான ஒளியில் ஏமாற்றத்துடன் சனாவை தேடிக் கொண்டிருந்தன.

ர.போல்கிஷோர்
யா/கொக்குவில் இ.க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கடல்வாழ் உயிரினங்கள்!




கடல்வாழ் உயிரினங்கள் பதிவேடு' என்ற அமைப்பு, கடல்வாழ் உயிர்கள் அனைத்தையும் பதிவு செய்யும் நோக்கத்துடன் இயங்கி வருகிறது. இது, ஒவ்வோர் ஆண்டும் கண்டுபிடித்த கடல்வாழ் உயிரினங்களைத் தங்கள் பட்டியலில் சேர்க்கும். அந்த வகையில் கடந்த ஆண்டில் மட்டும் 1,451 புதிய கடல்வாழ் உயிரினங்களைக் கண்டுபிடித்து சேர்த்துள்ளது.

புதுவிதமான சுறா, விநோதமான தவளை மீன், பெரிய உருவமுள்ள புதுமையான டொல்பின்கள் முதல் நுண்ணோக்கி வழியே மட்டுமே பார்க்கக்கூடிய இறால்கள் வரை இவற்றில் அடங்கும். தற்போது 2,28,000 கடலுயிர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இன்னும் பல்லாயிரம் உயிரினங்கள் கடலுக்குள் இருக்கும் என்கிறார் கள்.

அ.ஜாவித் அஹ்மத்,
மீனாட்சி இராமசாமி மேல்
நிலைப் பள்ளி, தத்தனூர்.

## எறும்புச் சிங்கம்



எறும்புச்சிங்கம் (Antlion) என்பது பார்ப்பதற்கு வெட்டுக்கிளி போலவே இருக்கும் ஒரு பறக்கும் பூச்சி. லார்வா பருவத்தில் மூட்டைப்பூச்சி போல காணப்படும். வளர்ந்ததும் 2 முதல் 15 செனிரி மீற்றர் நீளத்துக்கு இறக்கை முளைக்கும்.

இது, தனது இரையைப்பிடிக்க வித்தியாசமான முறையைக் கையாளும். புனல்போன்ற அமைப்பில் மணலில் குழியைத் தோண்டி, அதன் அடியில் காத்திருக்கும். அந்த வழியே வந்து குழிக்குள் விழும் எறும்பு மற்றும் சிறுபூச்சிகள் மீது மணலை ஸ்ப்ரே மாதிரி அடித்து நிலைகுலையச் செய்து, பாய்ந்து பிடித்துச் சாப்பிடும். சிங்கம்போன்று வேட்டையாடுவதால் இந்தப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.


## பெரிய கப்பல்



உலகின் மாபெரும் கப்பலான 'ஒயாசிஸ் ஆஃப் தி சீஸ்'. ஓர் ஊரையே கப்பலில் உள்ளடக்கியது. இதன் எடை, இரண்டு இலட்சத்து 20 ஆயிரம் தொன். இந்தக் கப்பலில் உள்ள சென்டரல் பார்க், உலகிலேயே முதன் முதலாக கப்பலில் கட்டப்பட்டுள்ள நிஜப் பூங்கா.

மொத்தம் 12,275 செடிகளும் 56 மரங்களும் உள்ளன. 5,400 பேர் ஒரே சமயத்தில் இந்தக் கப்பலில் பயணம் செய்யலாம். 2,700 அறைகளும் 16 மாடிகளும் 11 விடுதிகளும் ஏழு நீச்சல் குளங்களும் இதில் உள்ளன.

## வியப்பூட்டும் பாலம்!



வளைந்து வளைந்து செல்லும் மலைப் பாதைகளைப் பார்த்திருப்போம். ஆனால், உலகில் சில பாலங்கள் வித்தியாசமும் த்ரில்லும் நிறைந்ததாக உள்ளன. அவற்றுள் மிக உயரமான பாலம், மில்லாவ் வயாடக்ட் (Millau Viaduct).

பிரான்ஸ் நாட்டில் ஓடும் டார்ன் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இது, பள்ளத்தாக்குகள் நிறைந்த பகுதி. இந்தப் பாலத்தின் உயரம் 1,025 அடிகள். நீளம், 8,071 அடிகள். 2004இல் திறக்கப்பட்ட இந்தப் பாலம், வியப்பூட்டும் கட்டமைப்புக்காக விருது பெற்றுள்ளது.

## வைரத்தின் கதை



உண்மையில் வைரம் என்பது காபன் அணுக்களால் ஆன ஒரு கரிதான்.

பூமிக்குள் இருக்கும் தூய்மையான காபன், பெரும் அழுத்தத்தையும் வெப்பத்தையும் சந்திக்கும்போது, வைரமாக மாறுகிறது. காபன் அணுக்களில், பிணைப்புகள் குறுகிய இடைவெளியில் இருப்பதால், வைரத்துக்கு கடினத்தன்மை ஏற்படுகிறது.

பல முகங்களாக வெட்டப்பட்ட வைரத்தில் ஒளி மோதும்போது, பலவாறாகப் பிரதிபலித்து வந்த திசையிலேயே வெளியேறுகிறது.

அதைத்தான் வைரத்தின் ஜொலிப்பு என்கிறோம்.

# பணத்தை பெட்டியில் வைத்துப் பூட்டுவது சரியா?

உங்கள் பணத்தை பீரோவில் பூட்டி வைத்திருந்தால் அதன் மதிப்புக் குறைந்து கொண்டேதான் போகும். உதாரணமாக, உங்களிடம் ரூ.10,000 இருக்கிறது. அதனை 10% வட்டி கிடைக்கிற மாதிரி முதலீடு செய்தால், அடுத்த ஆண்டில் அது ரூ.11,000 ஆகப் பெருகும்.

ஆனால், அந்தப் பணத்தை முதலீடு செய்யாமல் அப்படியே வைத்திருந்தால், அது பார்ப்பதற்கு வேண்டுமானால் ரூ.10,000 ஆக இருக்கும். ஆனால், அடுத்த ஆண்டின் விலைவாசி உயர்வு அல்லது பணவீக்க விகிதம் 7%



அதிகரித்திருந்தால், உங்கள் பணம், அதன் மதிப்பில் 7% குறைந்திருக்கும். அதாவது, அதன் மதிப்பு 9,300 ஆகவே இருக்கும்.

பணத்தைப் பெட்டியில் பூட்டி வைக்காமல், முதலீடு செய்திருந்தால், பணவீக்க விகிதத்தைச் சரிகட்ட முடிந்திருப்பதுடன், உங்கள் பணத்தின் மதிப்பு 3% அதிகரித்திருக்கும்.

உங்கள் உழைப்புக்குச் சம்பளம், போனஸ் கிடைக்கும். உங்கள் பணம் உங்களுக்காக உழைக்கும்போது, அதாவது, பணத்தைச் சரியாக முதலீடு செய்யும்போது வட்டி, வருமானம், டிவிடெண்ட் போன்றவை கிடைக்கும். உழைப்பதன் மூலமான பணத்தைக் கொண்டு, நம் செலவுகளைப்பார்த்துக்கொள்ளலாம்.


நம் முதலீட்டின் மூலம் நாம் ஆசைப்பட்ட வாழ்க்கையை நனவாக்கிக்கொள்ளலாம் என்கிறார் நிதி ஆலோசகர் சா.ராஜசேகரன்.

இதற்கு ஒரு உதாரணத்தையும் சொல்கிறார். அவர் மாதமொன்றுக்கு ரூ.10,000 வீதம் 15 வருடம் தொடர்ந்து முதலீடு செய்துவந்தால், அதற்கு ஆண்டுக்குச் சராசரியாக 12% வருமானம் கிடைத்தால், அந்த முதலீடு ரூ.50.5 இலட்சமாக அதிகரித்திருக்கும்.

இந்தத்தொகையை வெளியே எடுக்காமல் தொடர்ந்து வைத்திருந்து, அதற்கு ஆண்டுக்குச் சராசரியாக 12% வருமானம் கிடைத்தால், அடுத்த ஆறு ஆண்டுகளில் இதன் மதிப்பு ரூ. 1 கோடியாக உயர்ந்திருக்கும்" என்கிறார் அவர்.

நம் பணத்தை நமக்காக உழைக்க வைப்பது நம் கையில் தான் இருக்கிறது!


## பறக்கும் சைக்கிள்





லண்டனில் உள்ள 'எக்ஸ்ப்ளோர் ஏர்' என்ற நிறுவனம், பாராவிலோ (Paravelo flying bicycle) எனும் பறக்கும் சைக்கிளைத் தயாரித்துள்ளது. இதை, சாதாரண சைக்கிளைப் போலவே வீதியில் ஓட்டிச் செல்லலாம். வீதியில் பயணம் செய்ய முடியாத இடங்களில், சைக்கிளின் பின்புறத்தில் உள்ள பெரிய விசிறியை மோட்டார் மூலம் இயக்கியதும், பரசூட் விரிந்து பறக்கத் தொடங்கும். தரையில், மணிக்கு 24 கி.மீ ஓடும் இந்த சைக்கிள், உயரத்தில் மணிக்கு 40 கி.மீ தூரம் பறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளையைப் படிக்கும் மெஷின்கள்!







இன்றே இப்போதே மெஷின்கள் கிடைக்காது. கிடைத்தால்.. அப்புறம் என சிணுங்கும் காதலியின் சலிப்பை அவள் பேசாமலே தெரிந்துகொள்ளலாம். மழுப்பி மழுப்பி பேசும் மனைவியின் நெஞ்சுக்குள் என்ன தான் இருக்கிறது எனகண்டு பிடிக்கலாம்

இந்த வருடமாவது, இன்க்ரிமெண்ட் என்ற வஸ்து, நம் பாஸின் மூளையில் தட்டுப்படுகிறதா என தேடலாம். இப்படி பல சாத்தியங்கள் நமக்குண்டு. மனதறியும் மெஷின்கள் கையில் கிடைத்தால்... உங்களின் தேவையை நீங்கள் டைப் செய்யும்முன்னே, பேசும் முன்னே கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் முன்பே தொடங்கி நடந்து வருகின்றன.

### அனைத்துக்கும் தொடக்கம்!

டெஸ்லா கார் நிறுவனத்தின் இயக்குநர் எலன் மஸ்க் முதற்கொண்டு பிசிஐ **(Brain-Computer interfaces)** திட்டத்தினை நிஜமாக்க செயற்பட்டு வருகின்றனர். ஆனால் இதற்கான கனவின் விதை, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே விதைக்கப்பட்டுவிட்டது. 1924 ஆம் ஆண்டு ஜெர்மன் உளவியலாளரான ஹான்ஸ் பெர்கர் சிறுவன் ஒருவனுக்கு செய்த நரம்பு அறுவை சிகிச்சையில் **Electro Encephalo Gram (EEG)** எனும்மூளையின்செயற்பாட்டை முதன்முதலில் பதிவு செய்தார்.

அதில்பதிவான அலை களை ஆல்பா, பீட்டா என குறிப்பிட்டார் பெர்கர். மூளையின் அலைகளை திரையில் பார்த்து, அதன் சமச்சீரின்மையை கணித்து சிகிச்சை செய்வது எளிதானதற்கு ஹான்ஸ் பெர்கரே முக்கிய காரணம். மெதுவான அலைகள் கட்டிகள், வாதம், மூளைச் சிதைவு, அல்சீமர்ஸ் ஆகியவற்றையும், துடிப்பான வேகமான அலைகள் வலிப்பைக் குறிப்பிடுவதாகவும் மருத்துவர்கள் அடையாளம் கண்டனர்.

### மூளையும் கம்ப்யூட்டரும் இணைந்தன!

1970 ஆம் ஆண்டு பெல்ஜியத்தின் எலக்ட்ரிகல் எஞ்சினியரான ஜாக்யூஸ் வைடல் இந்த எலக்ட்ரிக் அலைகள் சிகிச்சை தாண்டிய உபயோகம் கொண்டவை என கண்டுபிடித்தார். இன்றைய மூளையையும் கம்யூட்டரையும் இணைக்கும் இடைமுகத்தின் கர்த்தா சந்தேகமேயின்றி இவர் தான்.

மூளைக்கு செல்லும் எலக்டரிக் சிக்னல்களை கட்டளையாக கணனிக்கு, ஏன், விண்கலத்திற்கு கூட அனுப்ப முடியும் என்பதையும் கூறியவர் சார்தான். 2014 ஆம் ஆண்டு பிரேசிலில் நடந்த கால்பந்து போட்டியில், எலக்ட்ரிக் சிக்னல்கள் மூலம் மாற்றுத்திறனாளியை எழ வைத்து பந்தை உதைக்க வைக்கும் வாக் எகெய்ன் ப்ராஜெக்ட்டை நூறு ஆராய்ச்சியாளர்கள் இணைந்து செயற்படுத்தினர்.

### பறக்க நினைத்தால் பறக்கும்!

நாசா மற்றும் எசெக்ஸ் பல்கலைக்கழகம் இரண்டும் இணைந்து பிசிஐ மூலம் இயங்கும் விர்ச்சுவல் விண்கலம் ஒன்றை செயற்படுத்தி பார்த்துள்ளனர். இதில் சோதனைகள் முடிய அதிக காலம் தேவைப்படுகிறது. ஆளில்லா விமானங்களில் பயன்படுவது பிசிஐ இடைமுகம்தான். கடந்த ஏப்ரல் மாதம் ப்ரெய்ன் விமான ரேஸ் ஒன்றை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர் ப்ளோரிடா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள்.

விமானிகள் தங்கள் எண்ணங்களால் ட்ரோன் விமானத்தை இயக்க வேண்டும், அவ்வளவுதான். "ப்ரெய்ன் ட்ரோன் ரேஸ் 2 நடத்த திட்ட மிட்டு வருகிறோம். இது தொடர்பான சில திட்டங்கள் உள் ளன. பிசிஐ என்பது கருவியா கவும் நம் கருத்துக்கள் அதில் பாஸ்வேர்டாகவும் மாறினால் எப்படியிருக்கும்? லெனோவா நிறுவனத்தின் ஆதரவில் கருத்துகள் மூலம் ட்ரம்ஸ் இசைக்கும் புரோஜெக்டை செய்து வருகிறோம்.

விரைவில் மக்கள்தொகைக்கேற்ப மூளையின் இயக்கங்களைச் சோதிக்கும் பிசிஐ அமைப்பை உருவாக்கிவருகி றோம்" என்கிறார் புளோரிடா பல்கலையின் கணனி தகவல் பொறியியற்றுறையின் பேராசிரியரான ஜுவான் கில்பர்ட். 2008 ஆம் ஆண்டு எண்ணங்களால் செயற்படும் **EEG** முறையில்செயற்படும்வீடியோ கேம்களுக்கான ஹெட்செட்டை நியூரோஸ்கை, எமோட்டிவ், ஐபிரைன் ஆகிய நிறுவனங்களும் தயாரித்துள் ளன.

### எதிர்காலம் எப்படியிருக்கும்?

"இருபது முப்பது ஆண்டுகளில் மனிதர்கள் பேசுவது என்பதே குறைந்து டெலிபதி முறையில்தான் பேசுவார்கள். பேசவேண்டிய தேவையே இருக்காது. நினைத்தாலே ஒருவருடன் எளிதில் உரையாட முடியும்" என்கிறார் டெஸ்லா நிறுவனர் எலன் மஸ்க். முன்பு நிறைய பேசிக்கொண்டிருந்த நாம் ஸ்மார்ட் போனில் ஏராளமாக எழுத்து மூலமாகவும், ஸ்மைலி, எமோட்டிகான் உள்ளிட்டவைகளின் மூலமும் பேசுவது புது ட்ரெண்ட். மூளை வழியாக எண்ணங்களை பகிர்வது என்பது வேகமாகவும் மேலும் புதுமையான வகையிலுமான உரையாடலின் தொடக்கமாக அமையக்கூடும்.




# மோட்டார் சைக்கிளுக்கு இன்ஜின் ஒயில் ஏன்? எதற்கு?

வாகனங்களுக்கு ஒயில் மிக மிக முக்கியத்துவம் பெறுகின்றது. எமது வாகனத்திற்கு சரியான முறையில் சரியான கால இடை வெளியில் ஒயில் மாற்றாமல் விட்டோமானால் அதன் பாதிப்பு மிகப் பெரிதாகவே அமையும். இன்று நாம் மோட்டார் சைக்கிளுக்கு பயன்படுத்தப்படும் இன்ஜின் ஒயில் மற்றும் அதன் விதிகளைப் பார்க்கலாம்.

ஜெ.எ.சொ **(JASO - Japanese Automotive Standards Organization)** என்பது இன்ஜின் ஒயிலுக்கான ஜப்பானிய அமைப்பு. **High Revving** பெர்ஃபாமென்ஸ் இன்ஜின்களுக்குப் பெயர் பெற்ற ஜப்பான், ஜெ.எ.சொ. விதிகளை இருசக்கர வாகனங்களுக்கு ஏதுவானதாகவே அமைத்திருக்கிறது. மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் இன்ஜின் ஒயில்கள், அமெரிக்காவின் **API SL** அல்லது **API SM** விதியுடன் சேர்த்து, **JASO MA / JASO MA2** அல்லது **JASO MB** விதிகளைப் பின்பற்றியே தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் **JASO MA / JASO MA2** என்பது, அதிக உராய்வுகளைக்கொண்ட வெட் கிளட்ச் மோட்டார் சைக்கிளுக்கும், **JASO MB** என்பது, குறைவான உராய்வுகளைக்கொண்ட ஸ்கூட்டருக்கும் பொருந்தும். எனவே, மோட்டார் சைக்கிளின் ஒயிலை ஸ்கூட்டரிலும், ஸ்கூட்டரின் ஒயிலை மோட்டார் சைக்கிளிலும் மாற்றுவது, நாம் இன்ஜினுக்கு செய்யும் மிகப் பெரிய தீங்கு. இன்ஜின் ஒயில்களின் செயற்பாட்டை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அடிட்டிவ்களை பார்க்கலாம்.

## மோட்டார் மன்னன் பக்கம்



**Detergent / Dispersant** - இன்ஜினின் உட்புறத்தைச் சுத்தமாக வைத்திருப்பதே இதன் பணி.

**Viscosity Index Improvers** - எந்த பருவநிலையில் இயங்கினாலும், இன்ஜின் ஒயிலின் மசகுத்தன்மையைக் குறையவிடாமல் இவை பார்த்துக்கொள்ளும்.

**Anti-Wear Agents** – கார் / மோட்டார் சைக்கிளை அதிக நாட்கள் பயன்படுத்தாமல் வைத்திருக்கும்போது, இன்ஜின் வடிவமைப்புக்கு ஏற்ற ஒயில் ஃபிலிம் முழுமையாக இருப்பதற்கான சாத்தியங்கள் குறைவு. எனவே, உலோகங்கள் உரசும் வாய்ப்பும் தானாக அமைந்துவிடுகின்றன. இதனைத் தவிர்க்கும் பொருட்டு, **Zinc Dialkyl Dithio Phosphate** அல்லது **Phosphorous - Sulphur** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட **Anti-Wear Agents,** இன்ஜின் ஒயிலில் கலக்கப்படுகின்றன.



**Friction modifiers** - உலோகங்கள் உரசுவதால் ஏற்படும் அதிக உராய்வைக் கட்டுப் படுத்தி, மைலேஜை அதிகரிப்பது தான் இதன் வேலை. இதற்காக **Graphite, Molybdenum** போன்றவை, இன்ஜின் ஒயிலில் சேர்க்கப்படுகின்றன.

**Corrosion Inhibitors / Alkaline Additives** - காற்றும், எரிபொருளும் கலந்த கலவை எரியூட்டப்படும்போது, நீர் மற்றும் அசிட் ஆகியவை உற்பத்தி ஆகின்றன. இவை இன்ஜினில் நீடித்தால், அதன் உட்புறத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அரித்து, இறுதியில் அதனைத் துருப்பிடிக்கச் செய்துவிடும். இப்படி நடக்கவிடாமல் செய்வதே இதன் பணி. இந்த அடிட்டிவ்களின் சேவை, இன்ஜின் ஒயிலுக்குத் தேவை!**Antioxidants** – இன்ஜினுக்குள்ளே இருக்கும் ஒயிலின் நச்சுத்தன்மை, இறுக்கத்தின் அளவு, மாசுப்பொருட்களின் உருவாக்கம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம்.

'யப்பா... இன்ஜின் ஒயிலில் இத்தனை பொருட்கள் இருக்குதா' என வியந்து விட்டீர்களா? அடுத்த வாரம் இன்னுமொரு மோட்டார் செய்தியுடன் சந்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: பணம் படைத்தவன்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: விஷ்வநாதன் ராமமூர்த்தி
இசை: வாலி




எனக்கொரு மகன் பிறப்பான்
அவன் என்னைப் போலவே இருப்பான்
தனக்கொரு பாதையை வகுக்காமல்
என் தலைவன் வழியிலே நடப்பான் ஹேய்..
எனக்கொரு மகன் பிறப்பான்
அவன் என்னைப் போலவே இருப்பான்
தனக்கொரு பாதையை வகுக்காமல்
என் தலைவன் வழியிலே நடப்பான்

காக்கை இனம் வாழும் வாழ்க்கை பார்த்து
மனித குலம் வாழ உழைப்பான்
அண்ணன் தம்பியாய் அன்பு கொள்ளவே
சின்னஞ் சிறுவரை அழைப்பான்
காக்கை இனம் வாழும் வாழ்க்கை பார்த்து
மனித குலம் வாழ உழைப்பான்
அண்ணன் தம்பியாய் அன்பு கொள்ளவே
சின்னஞ் சிறுவரை அழைப்பான்
இரண்டு வரி கொண்டு மூன்று நெறி கண்ட
குறளின் பொருள் தேடிச் செல்வான்
நாளை வருகின்ற வாழ்வு நமக்கென்று
ஏழை முகம் பார்த்து சொல்வான்
ஏழை முகம் பார்த்து சொல்வான்

(எனக்கொரு மகன் பிறப்பான் )

கல்லைக் கனியாக்க கனவை நனவாக்க
கையில் ஏர் கொண்டு வருவான்
சாந்தி வழி என்று காந்தி வழி சென்று
கருணைத் தேன் கொண்டு தருவான்
உயிரைத் தமிழுக்கும் உடலை மண்ணுக்கும்
உதவும் நாள் கண்டு துடிப்பான்
சுற்றிப் பகை வந்து சூழும் திரு நாளில்
வெற்றித் தோள் கொண்டு முடிப்பான்
வெற்றித் தோள் கொண்டு முடிப்பான்

(எனக்கொரு மகன் பிறப்பான் )

# கனவுகளும் பலன்களும்



அதை அகற்றி விட்டுப் பார்த்தபோது உள்ளே டிவைன் காமெடி கையெழுத்துப் பிரதி கிடைத்தது.

மகாபாரதத்தில் குருஷேத்திர போருக்கு தர்மர், கிருஷ்ணரின் ஆதரவு வேண்டிச் சென்றார். அப்போது கிருஷ்ணபரமாத்மா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அதனால் தர்மர் கிருஷ்ணரின் கால் பகுதியின் அருகே சத்தமில்லாமல் நிதானமாக அமர்ந்தார். பிறகு கிருஷ்ண பரமாத்மா கண் விழித்தபோது தர்மரை பார்த்து எப்போது வந்தாய்? ஏன் என்னை எழுப்பவில்லை? என்றார் ஸ்ரீகிருஷ்ணர். அதற்கு தர்மர் ஆத்மாவை ஏன் அவசரப்படுத்த வேண்டும். நிதானமாகத்தான் வரட்டுமே என்றார் ஸ்ரீ இராம கிருஷ்ணர். இன்னொரு சம்பவம் இருக்கிறது. ஒருநாள் ஸ்ரீ இராம கிருஷ்ணர் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். அப்போது ஒரு பக்தர் ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சருக்கு நாங்கள் ஒரு பூஜை செய்கிறோம். அந்த பூஜையில் நீங்கள் வந்து கலந்து கொண்டால் நன்றாக இருக்கும் என்றார். சுவாமிஜி நிச்சயம் வருகிறேன் என்றார். சொன்ன திகதியில் சுவாமியின் உடல்நிலை மேலும் சரியில்லாமல் இருந்தாலும் நீங்கள் என் வீட்டு பூஜைக்கு வருவீர்கள் என உறுதியாக நம்பினேன். அதன்படி வந்து கலந்து கொண்டீர்கள். மிகவும் நன்றி. அதைக்கேட்ட பரமஹம்சரின் உடன் இருந்தவர்கள் சுவாமி நேற்று உங்கள் உடல் நிலை சரியில்லாததால் உங்கள் அறையில் தான் ஓய்வில் இருந்தீர்கள். ஆனால் இவரோ அவரின் வீட்டுக்கு நீங்கள் வந்ததாக சொல்கிறாரே? என்று கேட்டனர். அதற்கு ஸ்ரீ இராமகிருஷ்ணர் சொன்னார், என் உடல் நலம் தான் சரியில்லை. ஆனால் என் ஆத்மா ஆரோக்கியமாகத்தானே இருக்கிறது. சில நேரங்களில் ஒரு வேலை செய்யும் போது கவனம் மட்டும் வேறு எதிலோ இருப்பதைப் போல எந்த ஆத்ம சக்தி உடலை இயங்கச் செய்யும் ஆற்றல் கொண்டது. ஆனால் அதுவே விதி வசத்தால் திரும்ப உடலுக்குள் நுழைய முடியாத போது உடல் அழிய காரணமாகிறது. அதனால் தான் பெரியவர்கள் சொல்லுவார்கள்.

(முற்றும்)

# சூழ்நிலைக்கைதிகள்

## (உருவகம்)

அன்பானவர்களே... இனிய ஞாயிறு வணக்கம்.

நான்தான் ஜிம்மிக்குட்டி பேசிறன். ம்... ஆனி மாதம் இருபத்தைந்தாம் திகதியும் ஆயிட்டுது. ஆடியும் பிறக்கப் போகுது. ஆடி அமாவாசை விரதம் பற்றியும் அண்டைக்கு முருங்கை நடவேணும் எண்டும் பெரியவர் கந்தையாண்ணைக்குச் சொல்லிக் கொண்டு இருந்தவர். புறொய்லர் கோழிக் குஞ்சு மாதிரி முருங்கை மரமும் ஒரே சோத்திதானாம். வைரத் தன்மையே இல்லையாம். அது நெடு நெடெண்டு மேலை போய் எக்கச்சக்கமாக காய் குலுங்கிக் கொண்டிருந்தால் அதை ஆயிறதுக்கு உச்சிக்கு ஏறவெல்லவே வேணும். அது தாங்குமே... மனிசற்றை பாரம் தாங்காமல் அது படீரெண்டு முறிஞ்சு விழ ஏறினவையும் தொபுக்கடீர் எண்டு நிலத்திலை விழுந்து முதுகெலும்பு முறிஞ்சு கிடப்பினம். இப்ப விளங்குதே விசயம். வைர நெஞ்சு வேணும் எண்டு சொன்னா எதையும் தாங்கிற மனமெண்டு விளக்கமாம். எல்லாத்துக்கும் பயந்து நடுங்கி எத்தினை நாளைக்குத்தான் வாழுறது. ம்... கவலை கவலையா வருது. தைரியமா இருக்கத்தான் நினைக்கிறம். ஊகூம் முடியேல்லையே...கல்லை எடுக்கக் குனிஞ்சாலே பறந்து ஓடிப்போயிடுவம்... ம்...ஆனாலும் எங்களுக்குப் பல் இருக்கு, நகம் இருக்கு, பாய்ஞ்சு எழும்பக் கூடிய உடம்பு இருக்கு... துரத்தி வெருட்டுவம்.... ஆனால் குழந்தையளுக்கு இப்பிடியே... அதுகள் பாவம்...செத்துப் பிழைக்குதுகள்... ஆத்தாமல்போன ஒருநாளைக்கு அதுகளும் திமிறி எழும்பும்...ம்...சாது மிரண்டால் காடு கொள்ளாதாம்...

கொழும்பில இருந்து வந்தாரே பாலா எண்டிறவர், அவர் பெரியவரைப் பார்க்க வாறார். ம்...பார்த்ததை விடக் கொஞ்சம் பழுதாப் போனார். அண்டைக்குப் பறங்கிப் பழம் மாதிரி வடிவா இருந்தவர் ... ம்....பாவம் என்ன பிரச்சினையோ! தெரிஞ்சவர் எண்டபடியால் நானும் பெரிசாக் குலைக்காமல் மெல்லமா உறுமிப் போட்டுப் பெரியவற்றை காலடியிலை போய் வாலைச் சுட்டிக் கொண்டு இருக்கிறன்...

"என்ன தம்பி பாலா...பிள்ளையள் எப்படி இருக்கினம். கனநாளா இந்தப் பக்கம் நீங்களும் வரேல்லை... உடம்பு ஏதும் சுகமில்லையோ...'' ம்....அக்கறையாக் கேக்கிறார். பாலாண்ணை பெருமூச்சு விடுறார்.

''எனக்கொண்டும் இல்லை சேர்...பிள்ளையளைப் பற்றித்தான்'' வசனம் முடிக்காம பெரியவரைப் பார்க்கிறார்...ஏனய்யா அண்டைக்குப் போய் அதிபரோடை கதைச்சுப் பிள்ளையையும் வகுப்பிலை விட்டிட்டு சந்தோசமாத் தானே வந்தனீர்...இப்ப திரும்பவும்...என் னய்யா தயக்கப்படாம சொல்லும்.

பிள்ளைக்கு முட்டு வாறது எண்டு முந்திச் சொன்னவர் திரும்பவும் ஏதேன் பிரச்சினையோ... பாவம் கலங்கிப் போய் இருக்கிறார்.

பிள்ளையோட கதைக்கிற விதம்...மரியாதையா, அன்பா இல்லைசேர்...ஏய்...ஏய்...இதென்ன கொழும்பெண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறியோ...எண்டு கடுமையா சிலவேளை நக்கலாப் பேசினம்கோ...

ம்...கௌரவமா மரியாதையாய் பேசிப் பழகின குடும்பம் போல, எனக்கே ஒரு மாதிரித்தான் கிடக்கு...

தம்பி பாலா... நீர் அதுக்கு... ரீச்சரோடை ஏதாவது கதைச்சுப் போட்டீரோ...பெரியவர் கவலையோட கேட்கிறார்...

பாலாண்ணையும் ஏதோ சொல்லுகிறார். ஓம் சேர்... நீங்கள், நாங்கள் எண்டு கதையுங்கோ... கடுமையா ஏசா தையுங்கோ... பிள்ளை பயப்படுறா... எண்டு அமைதியாத்தான் சொன்னனான் சேர். ஆனா... பெரியவர் கவனமா ஊக்குவிக்கிறார்.

ம்..ஆனா...பாலாண்ணை முகம் கறுத்துப்போச்சு.

ஓ...பக்கத்திலை ஆருக்கோ அடிக்க உங்கடை பிள்ளைக்கு முட்டு வருது...சத்தமாப் பேசினதுக்கு என்னையே சொறிசொல்லட்டாம்... கைகழுவாம சாப்பிடக்கூடாது எண்டு எல்லாருக்கும் கிளாஸ் எடுக்குது... நீங்கள் என்னடா எண்டால் எனக்கு மரியாதை படிப்பிக்கிறியள். இனி உங்கடை பிள்ளையை நாங்கள் ஓண்டுமே சொல்லேலேல்லை போதுமே... அதிபரிட்டைப் போய்ச் சொன்னாலும் சரி, எனக்கு பயமி ல்லை. போங்கோ போய்ச் சொல் லுங்கோ. எனக்கு உந்தப் பஞ்சாயத்துக்கெல்லாம் நேரமில்லை... எண்டு சொல்லிப் போட்டுக் கோபத்தோடை திரும்பிப் போட்டா...ஏன் சேர்...நான் கதைச்சது பிழையோ சேர்...பாவம் ...மடக்மடக்கெண்டு தண்ணி குடிக்கிறார். மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்குது. இப்பிடிக் கதைச்சுப் பழக்கமில்லை போல...

பெரியவர் மெல்ல அவற்றை கையைத் தொட்டு ஆறுதல் படுத்துறார்.

"தம்பி பாலா... பிள்ளையளை அடிக்கவும் கூடாது. மனம் நோகப் பேசவும் கூடாது. அப்ப என்ன தான் செய்யிறது எண்டு ஆசிரியர்மார் பொறுமை இழந்து இப்பிடியெல்லாம் வார்த்தையாடுறது கூட ஒரு விதத்திலை இயலாமைதான். எல்லாரும் அவையளைத்தானே கேள்வி கேக்கினம்...

அதிபர்மாரும் இப்பிடியான ஆசிரியர்களோடு தேவையற்ற முரண்பாடு ஏன் எண்டு பெரிசாக் கண்டுக்கிறேல்லை.

நல்லாப் படிப்பிக்கிறவங்களோடையும் முரண்பட முடியாத நிலை. அவர் திடுமென்று இடமாற்றம் வாங்கிக்கொண்டு வெளியேறி விட்டால் அந்த இடத்தை நிரப்பிறது அதைவிடக் கடினம்.

இந்த நெருக்கடியை சமாளிப்பதென்பது மிகவும் கஷ்டமான ஒரு நிலைப்பாடு. மொத்தத்தில் விருப்பமும் அர்ப்பணிப்பும் இல்லாமல் ஆசிரிய சேவையில் இணைக்கப்பட்டவர்கள் நிறுவனத்தின் சமநிலையைக் குழப்பி ஆசிரிய மாணவ, பெற்றோர் ஆசிரிய, அதிபர் பெற்றார் ஆகிய உறவுகளைத் திறம்படப் பேண முடியாத இக்கட்டில் அதிபர்களை நிறுத்திவிடுதலும் உண்டு.


என்னய்யா செய்யிறது. சுயமாக, சுதந்திரமாக இயங்க முடியாத சூழ்நிலைக் கைதிகளாக அவர்கள் படும் மனத் துயரம் வெளியில் சொல்ல முடியாத வலியோடு பலர் வாழ்கிறார்கள்... உங்கடை பிள்ளையும் மெல்ல மெல்ல சூழலைப் புரிந்து இசை வாக்கம் அடையும் வரை நீங்கள் கரிசனையாப் பாத்துக் கொள்ளுங்கோ... குழந்தை மனம் உடையக் கூடாதையா... நாளைக்கு இதைப்பற்றி நான் கதைக்கிறன்...

ம்... ஆருக்கெண்டு பரிதாபப்படுறது. ம்... போய்ப்படுப்பம்.

பாரதி கணேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீச்சாங்கை




## திரைவிமர்சனம்

தன்னுடைய மூளையின் உத்தரவுகளைத் தன் கையே கேட்காமல் போனால்..அதுதான் பீச்சாங்கை.

பிக்பாக்கெட் திருடன் ஹீரோ ஸ்மூத்துவுக்கு அவரின் பீச்சாங் கைதான் பெரிய பலம். திருட்டு ட்யூட்டிக்கு நடுவில் அஞ்சலி ராவைக் காதலிக்கிறார்.

எதிர்பாராமல் ஒரு விபத்தில் சிக்கும் ஸ்மூத்துவுக்குத் தலையில் அடிபட்டு, மூளை சொல்லும் ஆணையை இடது கை கேட்காத 'ஏலியன் ஹேண்ட் சிண்ட்ரோம்' பாதிப்பு வருகிறது.

அதைக் குணப்படுத்தும் பணத் தேவைக்காகப் பெரிய ப்ராஜெக்டை ஒப்புக்கொள்கிறார். அதை முடித்தாரா, பீச்சாங்கையைச் சமாளித்தாரா என்பது மீதிக்கதை.

நாயகன் ஆர்.எஸ்.கார்த்திக்கின் கதாபாத்திரத்தை விளக்கிய ஆரம்பக் காட்சிகள் சிறப்பு. கெட்டவன் என்றாலும் கொஞ்சம் நல்லவன் என்ற பழக்கப்பட்ட டெம்ப்ளேட்தான், இருந்தாலும் அதை மான்டேஜ் காட்சிகளில் காட்டிய விதம் அழகு!

பிக்பாக்கெட்காரனாக கெத்தாகவும், இடதுகையோடு மல்லுக்கட்டும்போது வெத்தாகவும் ஆர்.எஸ்.கார்த்திக்கின் பவர்ப்ளே பக்கா! வில்லன் பொன்முடியும் அவரது சகாக்களும் சிரிக்க வைக்க முயல்கிறார்கள்.

எம்.எஸ்.பாஸ்கர், வில்லத்தனத்திலும் வெரைட்டி காட்டுகிறார்.

ஏலியன் ஹேண்ட் சிண்ட்ரோம்' என்ற புது விடயத்தை எடுத்துக்கொண்டு அதைபிக்பொக்கெட், குழந்தை கடத்தல், அரசியல், காதல் என முடிச்சுப் போட்டு அழகாகப் பொருத்தியிருக்கிறார் அறிமுக இயக்குநர் அஷோக்.

ஆனால்சுவாரஸ்யமானகுட்டிக் குட்டி விடயங்களில் காட்டிய கவனத்தை, திரைக்கதை வழி கோர்த்ததில் கோட்டை விட்டிருக்கிறார்.

டாக்டரே விளக்கிய பிறகு வரும் மான்டேஜ் பாடல் காட்சி எதற்கு? எஸ்.டி.டி பூத் காட்சிகள் 'படம் எந்தக் காலத்தில் நடக்கிறது' என்ற குழப்பத்தை உண்டு பண்ணுகின்றனவே? பழைய நெடி அடிக்கும் இரண்டாம் தர காமெடிகளையும் வசனங்களையும்கூட தவிர்த்திருக்கலாமே பாஸ்!

சண்டைக்காட்சிகளில் ஒளிப்பதிவாளர் கௌதம் ராஜேந்திரனும், ஸ்டன்ட் மாஸ்டர் விமல்ராம் போவும் ஓவர் டைம் பார்த்தி ருக்கிறார கள்.

பாலமுரளி பாலுவின் பின்னணி இசை காட்சிக்குத் தேவையான அளவு தொந்தரவின்றி ஒலிக் கிறது.

க்யூட்டான ஐடியாவைப் பிடித்தவர்கள், அதைப் புதுமையான கதை வழியே சொல்லி இருந்தால், பீச்சாங் கைக்கு அழுத்தமான முத்தமே கொடுத் திருக் கலாம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ் டிராபி தொடரின் 11 சுப்பர் ஹீரோஸ் இவர்கள்தான்



மினி உலகக் கோப்பை என அழைக்கப்படும் சம்பியன்ஸ் டிராபி தொடர் முடிவுற்றிருக்கிறது. இந்தத் தொடரில் விளையாடிய வீரர்களில் மிகச் சிறப்பாக விளையாடிய 11 பேரைக்கொண்டு கனவு அணி உருவாக்கியிருக்கிறோம். தொடர் முழுவதும்சீரான ஆட்டத்தை வெளிப் படுத்தியவர்கள், அணிக்கு மட்ச் வின்னராக திகழ்ந்தவர்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு அணி தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

சம்பியன்ஸ் டிராபி கனவு அணியில் நான்கு இந்திய வீரர்கள், மூன்று பாகிஸ்தான் வீரர்கள், இரண்டு இங்கிலாந்து வீரர்கள், தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து அணிகளில் இருந்து தலா ஒரு வீரர் எனத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**1. ஷிகர் தவான்**

இந்திய அணிக்கு வலுவான தொடக்க வீரராகச் செயற்பட்டிருக்கிறார் ஷிகர் தவான். ஐந்து போட்டிகளில் இரண்டு அரைச்சதம், ஒரு சதம் உட்பட 338 ரன்கள் குவித்திருக்கிறார். ஒருநாள் ஃபார்மெட்டில் ஐசிசி தொடர்களில் ஃபார்முக்கு வந்துவிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார் . 2013 சம்பியன்ஸ் டிராபி, 2015 உலக கோப்பை, 2017 சம்பியன்ஸ் டிராபி என மூன்று தொடர்களிலும் இந்திய அணிக்காக அதிக ரன்களைக் குவித்தவர் ஷிகர் தவான். லீக் சுற்றில் பாகிஸ்தான், இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளைப் புரட்டி எடுத்தார். இந்தத் தொடரில் அதிக ரன்கள் குவித்த பட்ஸ்மேன் இவர்தான். கனவு அணியில்எளிதில்தொடக்கவீரர் இடத்தைப் பிடித்திருக்கிறார் தவான்.

**2. ஃபகர் ஜமான்**

லீக் சுற்றில் இந்தியாவுக்கு எதிரான முதல் போட்டியில் தொடக்க வீரராக களமிறங்கிய சேஷாத் சொதப்பித் தள்ளினார். அடுத்த போட்டியில் சேஷாத்தை அணியிலிருந்து நீக்கிவிட்டு ஃபகர் ஜமானை அறிமுகப்படுத்தினார் பாகிஸ்தான் கப்டன் சர்பராஸ் அகமது. ஃபகர் வரவுக்குப் பிறகு, அணியின் பலம் பல மடங்கு கூடியது. தொடக்க வீரராக அசார் அலியும் ஃபகரும் அசத்தினார்கள். இதுவரை நான்கு போட்டிகளில் இரண்டு அரைச்சதம், ஒரு சதம் உட்பட 252 ரன்களைக் குவித்திருக்கிறார் ஜமான். முதன் முதலாக சர்வதேச ஒருநாள் போட்டியில் அறிமுகமானது,முதல் அரை சதம் அடித்தது, முதல் சதம் அடித்தது, முதல் ஐசிசி தொடரின் இறுதிப்போட்டியில் விளையாடியது, தான் பங்கேற்ற முதல் ஐசிசி தொடரின் இறுதிப்போட்டியிலேயே சதம் அடித்தது, இறுதிப்போட்டியில் ஆட்டநாயகன் விருது வாங்கியது எனப் பல்வேறு விடயங்களையும் வெறும் நான்கு போட்டிகளில் முடித்துவிட்டார் ஃபகர். அவருக்கு பல உயரங்கள் காத்திருக்கின்றன. அசார் அலி, தமீம் இக்பால், அலெக்ஸ் ஹேல்ஸ், ரோஹித் ஷர்மா எனப் பல வீரர்கள் போட்டிக்கு இருந்தாலும் அறிமுகமான முதல் தொடரிலேயே அசத்தல் ஆட்டம் ஆடியதாலும்,மட்ச் வின்னராக திகழ்ந்ததாலும் மற்றவர்களை ஓரங்கட்டி கனவு அணியில் தவானுடன் இன்னிங்சை தொட்ங்குகிறார் ஃபகர் ஜமான்.

**3. விராட் கோலி**

இந்தத் தொடரில் மூன்று அரை சதங்கள் விளாசியவர்கள் இரண்டு பேரில் ஒருவர் விராட் கோலி. ஐந்து போட்டிகளில் மூன்று முறை கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார் கோலி. இத்தொடரில் கோலியின் சராசரி 129. புள்ளவிபரங்களே விராட் கோலியின் வலிமையை பறைசாற்றிவிடும். இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக சிறப்பாக விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் வெறும் ஐந்து ரன்களில் அவுட் ஆனார்.

இலங்கையுடனான ஆட்டத்திலும் டக் அவுட். எனினும் கோலி தேர்வு செய்யப்பட்டதற்கான காரணம் அவரது பொறுப்பான பட்டிங். லீக் சுற்றில் பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் இறுதிக்கட்டத்தில் அடித்து நொறுக்கினார். தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்தில் குறைந்த ரன்களை துரத்தினாலும், தனது விக்கெட் விழுந்துவிட்டால் ஆட்டம் மாறிவிடலாம் என்பதை உணர்ந்து கடைசிவரை களத்தில் நின்று அணியை வெற்றிபெறச் செய்தார். வங்கதேசத்துடன் நேர்த்தியாக விளையாடி ஆட்டமிழக்காமல் 96 ரன்கள் குவித்தார். இந்த காரணங்களே அவரைத் தேர்ந்தெடுக்க போதுமானதாக இருந்தன.

**4. கேன் வில்லியம்சன்**

நியூசிலாந்தின் கப்டன் கேன் வில்லியம்சன் கப்டன்சியை சரிவரச் செய்யவில்லையென்றாலும் பட்டிங்கில் பின்னியெடுத்தார். அவர் களத்தில் நின்ற வரை எல்லா போட்டிகளிலும் நியூசிலாந்து நல்ல நிலைமையில் இருந்தது. அவரது விக்கெட் விழுந்ததும் தாறுமாறாக எதிரணிக்கு வெற்றி வாய்ப்பு எகிறியது. ஆவுஸ்திரேலியா, இங்கிலாந்து, வங்கதேசம் என விளையாடிய மூன்று அணிகளுக்கு எதிராகவும்50 ரன்களுக்கு மேல் விளாசினார். இங்கிலாந்துக்கு எதிராக 87 ரன்களும், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அவர் விளாசிய சதமும் கிளாஸ் இன்னிங்ஸ்.

**5. பென் ஸ்டோக்ஸ்**

இந்தத் தொடரில் நூறு ரன்களுக்கு மேல் குவித்தவர்களில் விராட் கோலிக்கு அடுத்தபடியாக அதிக சராசரி வைத்திருப்பவர் பென்ஸ்டோக்ஸ். பட்டிங் பிடித்த மூன்று இன்னிங்ஸ்களில் ஒரு சதம் உட்பட 184 ரன்கள் குவித்திருக்கிறார். சராசரி 92. லீக் சுற்றில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் 35/3 என அணி தடுமாறியபோது இயான் மோர்கனுடன் இணைந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார் ஸ்டோக்ஸ். அவரது மட்ச் வின்னிங் சதத்தால் அவுஸ்திரேலிய அணி அரை இறுதிக்குத் தகுதிபெற இயலாமல் மெல்பர்னுக்கு மூட்டை கட்டியது. பவுலிங்கில் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார். இவரை பட்ஸ்மேன் என்ற அடிப்படையிலே அணியில் சேர்த்திருக்கிறோம். எனினும் இவர் 10 ஓவர்களும் வீசக்கூடிய நல்ல பவுலர் என்பதால், அணிக்கு பெரும் பலம் கூடுகிறது.

**6. சர்பராஸ் அகமது**

ஐந்து போட்டிகளில் இரண்டு இன்னிங்ஸ்களில்தான் இவருக்கு பட் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. அதில் ஒரு அரைச்சதம் உட்பட 76 ரன்கள் எடுத்திருக்கிறார். லீக் சுற்றில் இந்தியாவுக்கு எதிராகத் துவண்டுபோய் கிடந்த பாகிஸ்தான் வீரர்களைத் தேற்றி தன்னம்பிக்கையை விதைத்ததில் சர்பராஸுக்கு மிகப்பெரிய பங்குண்டு. குறைந்தது ஒரு வெற்றியுடனாவது ஊருக்குத் திரும்புமா என எதிர்பார்த்த ரசிகர்களுக்கு கோப்பையுடன் திரும்பி பாகிஸ்தான் மக்களுக்கு உற்சாகமளித்திருக்கிறார் சர்ஃபராஸ் அகமது. விக்கெட் கீப்பிங்கிலும் ஓரளவு சிறப்பாகவே பணியைச் செய்தார். தனக்கு கொடுக்கப்பட்ட எல்லா வேலைகளையும் சரியாகச் செய்ததில் கனவு அணிக்கு விக்கெட் கீப்பர் பட்ஸ்மேனாகத் தேர்வானது மட்டுமின்றி கப்டனாகவும் தேர்வு செய்யப்படுகிறார். ஐசிசியும் தனது கனவு அணியில் இவரை கப்ட னாக அறிவித்துள்ளது.

**7. ஹர்டிக் பாண்டியா**

ஒருநாள் போட்டிகளை இருபது-20 பாணியில் டீல் செய்கிறார் ஹர்டிக் பாண்டியா. எந்த பவுலராக இருந்தாலும் சிக்ஸர் விளாச தயக்கம் காட்டுவதில்லை. இந்தத் தொடரில் ஒருநாள்போட்டிகளுக்கு இந்தியா கண்டெடுத்த நம்பிக்கை வீரர் ஹர்டிக் பாண்டியாதான். சம்பியன்ஸ் டிராபி தொடரில் ஒட்டுமொத்தமாகவே அதிக ஸ்ட்ரைக் ரெட் வைத்திருப்பது (194.44) இவர்தான். இறுதிப் போட்டியில் இந்திய அணி சேஸிங் செய்தபோது இவர் களத்தில் நின்றது இந்திய ரசிகர்களுக்கு ஒரு சிறிய நம்பிக்கை கீற்று இருந்தது. பவுலிங்கிலும் மிளிரத் தொடங்கியிருக்கிறார் பாண்டியா. 135 கி.மீ வேகத்தில் வீசுகிறார். பாண்டியாவின் பந்துகள்பட்ஸ்மேனின்நெஞ்சை குறிவைக்கின்றன. பவுலிங்கில் துல்லியம்கூட்டினால்பென்ஸ்டோக்ஸ் போல இவரும் மிகப்பெரிய சொத்தாக இந்திய அணிக்கு இருப்பார்.

**8. இம்ரான் தாகீர்**

இந்தத் தொடர் முழுவதுமே சுழற்பந்து வீச்சாளர்கள் தடுமாறினர். பிட்ச் சுழற்பந்துக்கு சாதகம் இல்லை என்பதால் விரலால் பந்தைச் சுழற்றும் பவுலர்கள் தடுமாறினர். மணிக்கட்டை சுழற்றி பந்தைச் சுழலச் செய்த இம்ரான் தாகீர் எதிரணி பட்ஸ்மேன்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கினார். இவரது பந்துகளைக் கவனமாகவே கையாண் டார்கள் பட்ஸ்மன்கள். ஓவருக்குச்சராசரியாக4.32ரன்களை மட்டுமே விட்டுக்கொடுத்தார். இலங்கை எளிதாகத் தென் னாபிரிக்காவைத்தோற்கடித்துவிடும் என்பது போலத் தெரிந்த சமயத்தில்டிவில்லியர்ஸ் தாகீரை அழைத்தார். தன் கப்டனின் நம்பிக்கையைக் காப்பாற்றினார் இம்ரான். அவரது ஸ்பெல்லில் சுழற்பந்தை நன்றாக கையாளக்கூடிய இலங்கை பட்ஸ்மன்கள் வரிசையாக அரங்கு திரும்பினார்கள். தென் னாபிரிக்காவுக்கு அன்றைய தினம் மட்ச் வின்னர் இம்ரான் தாகீர்தான். அடில் ரஷீத் இவரைவிட கூடுதலாக இரண்டு விக்கெட் எடுத்திருந்தாலும், பட்ஸ்மன்களைத் தொடர்ந்து திணறடித்த பவுலர் என்ற அடிப்படையில் இம்ரான் கனவு அணிக்கு தேர்வாகிறார்.

**9. புவனேஷ்வர் குமார்**

ஐந்து போட்டிகளில் ஏழு விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார். இந்திய அணியில் தொடர்ந்து சிறப்பாக வீசிய ஒரே பவுலர் இவர்தான். இந்திய பவுலர்களில் ஓவருக்கு சராசரியாகக் குறைவான ரன்களை (4.64) கொடுத்த பவுலரும் இவரே. இங்கிலாந்து ஆடுகளங்கள் பொதுவாக நன்றாக ஸ்விங் ஆகும். ஆனால், இந்த சம்பியன்ஸ் டிராபியில் எல்லாமே பட்டிங் பிட்சாகவே இருந்தன. இயல்பாக பந்துகள் ஸ்விங் ஆகவேயில்லை. எனினும் தனது திறமையால் சரியான இடத்தில் பந்துகளை வீசி பட்ஸ்மன்களுக்கு சிரமம் கொடுத்தார் புவனேஷ்வர். இறுதிப் போட்டியில் அவர் வீசிய முதல் ஸ்பெல் அட்டகாசம்.

**10. ஹசன் அலி**

சம்பியன்ஸ் டிராபியின் நம்பர் - 1 பவுலர் மற்றும் தொடர் நாயகன் ஹசன் அலி. பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களுக்கே உரிய ஆக்ரோஷமான பந்துவீச்சை வெளிப்படுத்தி ஸ்டம்புகளைத் தகர்த்தெறிந்தார் ஹசன். லீக் சுற்றில் முதல் போட்டியில் யுவராஜின் கேட்சைக் கோட்டை விட்டார். அதன் பிறகு, இவர் பந்து வீச வந்தபோது யுவராஜ் வெளுத்து வாங்கினார். முதல் போட்டி மோசமாக அமைந்தாலும் அடுத்தடுத்த போட்டிகளில் தவறுகளில் இருந்து உடனடியாகப் பாடம் கற்றுக் கொண்டு அபாரமாக வீசினார்.

ஐந்து போட்டிகளில் 13 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு, இந்தத் தொடரில் மிகவும் சிக்கனமாகப் பந்துவீசிய பந்துவீச்சாளர் என்ற பெருமையையும் (4.29) பெற்றுள்ளார். சராசரியாக இவர் வீசிய 14.69 பந்துகளில் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருக்கிறார். புள்ளிவிபரங்களிலும் சரி, பெர்ஃபாமென்ஸிலும் சரி இந்தத் தொடரின் ஆகச்சிறந்த பவுலர் ஹசன் அலி.

**11. லயம் பிளங்கட்**

இரண்டு முறை ஒரே போட்டியில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்திச் சாதனை படைத்திருக்கிறார் லயம் பிளங்கட். வங்கதேசத்துக்கு எதிரான லீக் சுற்று போட்டியில் வங்கதேசம் 350 ரன்களை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. தமீம் இக்பால் சதமடித்த கையோடு அடுத்தடுத்து சிக்ஸர்கள் விளாச தயாராக இருந்தார். அவருக்கு பக்க பலமாக முஷ்பிகுர் ரஹீமும் இருந்தார். இந்நிலையில் ஒரே ஓவரில் இவர்கள் இருவரின் விக்கெட்டையும் காலி செய்தது மட்டுமின்றி அடுத்து வந்த சபீர் ரஹ்மானையும் அவுட் ஆக்கினார். இவரது அபாரமான பந்துவீச்சில் நான்கு வங்கதேச பட்ஸ்மேன்கள் அரங்கு திரும்பினார்கள்.

இங்கிலாந்துக்கு எதி ரான போட்டியில் இன்னும் 20 - 30 ரன்கள் கூடுதலாக எடுத்திருந்தால் வங்கதேசம் வெற்றி பெற்றிருக்கக் கூடும் எனக் கருதப்பட்டது. வங்கதேசத்தை 305 ரன்களுக்குள் அடக்கியதில் பிளங்கட்டுக்கு பெரும் பங்கு உண்டு. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# தேயிலைத் தோட்டக்காரி



தினமும் நான் காணுகின்ற காட்சிகளை ஓவியமாக வரைந்து அவற்றை சேகரித்து வைத்துக்கொள்வது என் வழக்கம்.

அன்றும் அதே போல் தான் நான் கண்ட ஒரு காட்சியை தத்ரூபமாக வரைய முயற்சித்துக் கொண்டிருந்தேன்.

அந்த வெள்ளைத்தாள் எந் ...ர் கைவண்ணத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நிறமாறிக் கொண்டிருந்தது.

ஆனாலும் அந்தக் காட்சியில் வண்ணங்கள் ஒட்டிக் கொள்ளவில்லை. அவை தூரமாக இருந்து வேடிக்கை தான் பார்த்துக் கொண்டிருந்தன.

என்னால் முடிந்தவரை பார்த்ததை அப்படியே அதில்கொண்டு வர முயன்று கொண்டிருந்தேன்.

ஆனால் அதில் பாதியைக் கூட என்னால் கொண்டுவர முடியவில்லை.

நான் கண்ட காட்சியில் இருந்த உணர்வுகளை நான் எவ்வளவு முயன்றும் ஓவியமாக என்னால் செதுக்கிக் கொள்ள முடியவில்லை.

பல மணிநேரப் போராட்டத்தின் பின் என் மனம் ஓரளவு அமைதி கொள்ளும் வகையில் அந்த ஓவியம் முழுமையடைந்திருந்தது.

எல்லாம் அதில் சரியாக இருக்கிறதா என மீண்டும் ஒருதடவை நான் கண்ட காட்சியினை என் கண்முன்னே நிறுத்தி மீண்டும் அந்த காட்சிக்குள் செல்லத் தொடங்கினேன்.

அவள் அந்த வரிசையிலேயே இறுதி ஆளாக நின்று கொண்டிருந்தாள். அவளின் தோற்றமே அவள் ஒரு தேயிலைத்தோட்டக்காரி என்பதை பறைசாற்றிக் கொண்டிருந்தது.

அவளின்பின்னால்கொழுந்து பறிக்கும் கூடையொன்றும் தொங்கிக் கொண்டிருப்பதை என்னால் காண முடிந்தது.

அவளது முகம் காட்டிய உணர்வுகளை என் மனம் எவ்வளவோ படம்பிடிக்க முயன்றும், அதை புரிந்து கொள்வதென்பது சற்றுக் கடினமானதாகவே இருந்தது.

இதையே யோசித்து என் மனம் குழம்பிக் கொண்டிருந்த வேளையில் முதல் இடத்தை நோக்கி நகர்ந்தி ருந்தாள் அவள்.

கைகளுக்குள் இரண்டு நூறு ரூபா தாள்கள் அள்ளி வீசப்பட்டன. அதை அவள் மிகவும் பத்திரமாக பொத்தி வைத்துக் கொண்டே எனைக் கடந்து சென்றாள்.

அப்போது தான் என்னால் அவள் கைகளை மிக அருகில் பார்க்க முடிந்தது. அதில் கைரேகைகள் இருப்பதற்கான எந்த அடையாளமும் என் கண்களிற்கு புலப்படவில்லை. உதிரம் காய்ந்து கருமை படர்ந்திருந்தது அந்தக் கரங்களில்.

அதைப்பற்றிய எந்தக் கவலையுமில்லாமல் அன்றைய நாளுக்குத் தேவையான பொருட்களை வாங்க மீண்டுமொரு வரிசையில் இணைந்து கொண்டாள் அவள்.

அனைத்தையும் மீண்டுமொருமுறை மீட்டிப் பார்த்த நான் அருகில் ஆவி பறக்க வைக்கப்பட்டிருந்த தேநீரை எடுத்து சுவைக்க ஆரம்பித்தேன்.

ஆனால் அன்று அந்த தேநீர் எனக்கு அவ்வளவு இனிப்பானதாய் இருக்கவில்லை.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1113

Search for people, places and things Nagendram Home

### பிரதிப்குமார்




### ராகுலன் பாலா



### றஜிவன்




### பிரசன்ன சாந்தன்





### செல்வகுமார்

Kohli in this World Cup



### சுரேன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 90

## வாழ்வில் வெற்றி பெற்றிட... 4



வாழ்க்கை உண்மையில் எளிமையானது. நாமே அதனை சிக்கல்கள் நிறைந்ததாக மாற்றிக்கொள்கிறோம். சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு எமது வாதிடும் குணாதிசயமும் கோபப்படும் தன்மையுமே பிரதானமான காரணமாக அமைகின்றது.

ஒரு விடயத்தை உணரக்கூடிய திறமைசாலிகள் என்று நாம் கருதுபவர்களுடன் மட்டும் வாதிடுவோம். எமது கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லுவோம். அவ்வாறானவர்கள் அல்ல என நாம் கருதுபவர்களுடன் வாதிட்டு நாமும் காயப்பட்டு மற்றவர்களையும் காயப்படுத்தும் முயற்சி எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அமைதியாக இருப்பது ஆமோதிப்பது என்று அர்த்தப்படாது. பேசிப்பயன்தராது என்று நினைக்கின்றபொழுது அல்லது உண்மை துலங்க காலம் கனிய வேண்டும் என்ற நிலை இருக்கும்பொழுது அமைதி சிலசமயம் மிகப்பொருத்தமான ஆயுத மாக இருக்கலாம்.

எமது இலக்கை நோக்கிய பாதையில் நின்று குரைக்கும் ஒவ்வொரு நாய்களுக்கும் கல்லெறிய முற்படுவோமாயின் எமது பயணம் முற்றுப்பெறமாட்டாது என்று அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேபோலத்தான் வாழ்வில் ஏற்படும் இடையூறுகள் ஒவ்வொன்றுடனும் மோத முற்படுவோமாயின் எமது இலக்கை அடையமுடியாது.

இன்று ஒருவன் பலம் பொருந்தியவன் போலத்தோற்றப்படலாம். ஆனால் காலச்சக்கரத்தின் கரங்கள் மிகமிகப் பலமானது. காலம் மாற, காலம்கனிய கனகாலம் ஆகாது.

விடயங்களை அமைதியாகவும் உணர்வு பூர்வமாகவும் அணுக பழகிக்கொள்ளும் பயிற்சி பயனுடையதாக அமையும். அந்தப்பயிற்சி அமைதியான முன்னோக்கிய பயணத்திற்கு உறுதுணையாக அமையும்.

எமது பயணத்தின்பொழுது எம்மீது கல்லெறிகள் விழலாம். அவற்றை எடுத்து திருப்பி எறிந்து அந்தக் கற்களை வீணடிப்பது புத்திசாதுரியம் ஆகாது. அந்தக் கற்களைக் கொண்டே எமது பாதையை செப்பனிட முயலுவோம். எமது பாதைக்கு உரம் சேர்ப்போம்.

எந்தப்பாதையில் பயணிப்பது என்ற தடுமாற்றம் தேவை அற்றது. மன உறுதியும் மனச்சாட்சியுடன் கூடிய உழைப்பும் இருக்குமாயின் நாம் பயணித் துக்கொண்டிருக்கும் பாதையேசரியானபாதையாக அமையும்

எமது பயணத்தின் பொழுது காலம் பலவற்றை எமக்கு கற்றுத்தரும் நாம் எப்பொழுதும் கற்பதை நிறுத்தி விடமுடியாது. அதுவே எமது முன்னேற்றத்தின் உயிர் மூச்சு. இது புத்தகக் கல்வி என்று அர்த்தப்படாது. ஏமாற்றங்கள், இழப்புகள், வறுமை,ஏன் பசிகூட எமக்கு பலவற்றை கற்றுத்தரும். எம்மை பக்குவப்படுத்தும்.

எமது இலக்கை அடைய அதிககாலம் எடுப்பது தோல்வி என்று ஆகிவிடாது. எமது உண்மையான நோக்கங்களை நோக்கி அமைதியாக எடுத்துவைக்கும் ஒவ்வொரு காற்தடங்களும் வெற்றிக்கான பதிவுகளே. வாழ்க்கை குறுகியது. இந்தக் குறுகிய வெளியில் பகைவளர்த்து நேரத்தை வீணடிப்பது வெற்றிக்கு இடையூறாக அமையும்.

தொடரும்

Dr.சி.சிவன்சுதன்
பொதுவைத்திய நிபுணர்

## குழந்தைக்கு மேலதிக உணவூட்டல் (Complementary Feeding)

➢ மேலதிக உணவூட்டல் என்பது தாய்ப்பாலுடன் சேர்ந்து ஆகாரங்களையும் படிப்படியாக சேர்த்துக் கொள்வது.

➢ எப்போது கொடுக்கப்பட வேண்டும்?06 மாதங்கள்(180 நாட்கள்) முடிந்தவுடன் மேலதிக உணவூட்டல்தொடங்க வேண்டும்.

எமது பகுதியில் சமய நம்பிக்கைகளுக்காக ("சோறு தீத்தல்") மேலதிக உணவூட்டலை ஆரம்பிப்பதைப் பிற்போடும் தவறான வழக்கம் உள்ளது. அதே போல் இச்சமயச் சடங்கைச் செய்ய காலதாமதமாவதால் அதுவரை வீட்டில் சமைத்த உணவை வழங்காமல் கடைகளில் விற்கும் விசேட உணவுகளை வழங்கும் தவறும் பெருமளவு நடைமுறையில் உள்ளது. இப்பழக்கம் தவிர்க்கப்பட வேண்டும். குழந்தையின் நலனுக்காக சமயச் சடங்கை முன்னதாக, உரிய காலத்தில், அதாவது 6 மாத முடிவில் செய்து சரியான மேலதிக உணவூட்டலை ஆரம்பிக்க அனைவரும் முன்வர வேண்டும்.

### ஏன் கொடுக்கப்பட வேண்டும்?

01. 6மாதத்தின்பின்வளருகின்றகுழந்தையின் சக்தி மற்றும் போசணைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவில் தாய்ப்பாலிலுள்ள சத்துக்கள் போதாது. மேலும்தாய்ப்பாலில்இல்லாதவையும்கர்ப்ப காலத்தில் தாயிலிருந்து குழந்தைக்கு கிடைத்த போது மேலதிகமாக சேமிக்கப்பட்டிருந்தவையுமான போசணைகள் இவ்வயதில் முடிவுக்கு வரத் தொடங்கிவிடும். இதனால் மேலதிக உணவூட்டல் தொடங்க வேண்டும்.

02. வெவ்வேறு விதமான மனித உணவுப்பழக்கங்களுக்கு குழந்தையை பழக்கப்படுத்துவதற்கும் எமது குடும்ப உணவுக்கு தயார்ப்படுத்துவதற்காகவும் மேலதிகஉணவூட்டலைதொடங்கவேண்டும்.

### மேலதிக உணவின் போசாக்குத் தரத்தை எவ்வாறு அதிகரிக்கலாம்?

➢ ஒவ்வொரு வேளை உணவிலும் பல வகையான உணவுகள் வழங்குவதை உறுதி செய்யுங்கள்.

➢ உணவூட்ட ஆரம்பித்த சில நாள்களிலேயே விலங்கு உணவு, பருப்பு, கீரை, ஈரல்,முட்டை,பயறு,கௌப்பி,கடலை,சோயா, பசளி, வல்லாரை போன்றவற்றை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்க்கத் தொடங்குங்கள்.



➢ முளைவிட்ட அவரையின் விதைகளை சேருங்கள்.

➢ விற்றமின் Aயை அதிகமாக கொண்ட உணவுகளான ஈரல்,முட்டை மஞ்சட்கரு, கரட், பப்பாசி, மாம்பழம், கடும் பச்சையான இலைகள்போன்றவற்றை அதிகம்சேருங்கள்.

➢ தினமும் உள்ளூரில் கிடைக்கின்ற பழங்களை ஒரு வேளையாவது சேருங்கள்.

➢ உணவு சமைக்கும் போது தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணெய், மாஜரின் அல்லது நல்லெண்ணெய் 1-2 தேக்கரண்டி சேருங்கள்.

➢ தானியங்களை அடிப்படையாகக் கொண்டு வீட்டில் தயாரிக்கும் சிற்றுண்டிகளை கொடுங்கள்.பல்வேறு தானியங்களைக் கலக்கும் போதும் அவற்றுடன் முளைவிட்ட பயறு வகைகளை சேர்க்கும் போதும் போசணைத் தரம் அதிகரிக்கும்.

### எப்படி மேலதிக உணவுகளை கொடுக்கலாம்?

➢ குழந்தைக்கு உணவூட்டுவதற்கான நேரங்களை இயலுமானவரை நியமமாகத் கடைப்பிடியுங்கள்.

➢ குழந்தைக்குஉணவூட்டும்வேளைக்கு முன்னதானஒருமணிநேரத்துக்கு உணவோ பானங்களோ தாய்ப்பாலோ கொடுக்க வேண்டாம்.

➢ ஆரம்பத்திலிருந்து பிள்ளைக்கு உணவை ஒரு இடத்தில் (வீட்டில் அனைவரும் உணவருந்தும் இடம் பொருத்தமானது) இருத்தி வைத்து ஊட்டிப்பழக்கவும். (கொண்டு திரிந்து பராக்குக் காட்டி ஊட்டுவது நல்லதல்ல. நீண்ட காலத்துக்கு இம்முறை வெற்றியளிக்க போவதுமில்லை.)

➢ மிகவும் ஆரம்பத்தில் களித்தன்மையாக உணவைக் கொடுங்கள். (நீர்த் தன்மையாக இல்லை)

➢ உணவு வேளைக்குப் பிள்ளைக்குப் பசியில்லை என்றால் குழந்தைக்கு பசிவரும்வரை காத்திருந்துஉணவூட்டுங்கள்.

➢ குழந்தை நித்திரைத் தூக்கத்தை அடைய முன்னர் உணவூட்டுங்கள்.

➢ பிள்ளை ஒரு நேர உணவை உண்ண மறுத்தால் அதற்குப் பதிலாக மாற்று உணவோ,பானங்களோ அல்லது தாய்ப்பாலோ கொடுக்க வேண்டாம்.அந்த உணவு வேளையை கைவிடுங்கள். அடுத்த உணவு வேளை வரை அல்லது சிற்றுண்டி வேளை வரை அல்லது பான வேளை வரை காத்திருங்கள்.

➢ கடையில் வாங்கும் குழந்தைகளுக்கான செயற்கை உணவுகள், பிஸ்கட்டுக்கள் போன்றவை குழந்தையின் உடல் ஆரோக்கியத்துக்கும் அதனது உணவுப் பழக்கங்கள் ஆரோக்கியமாக உருவாவதற்கும் தீங்கை விளைவிக்கும்.

➢ எப்போதும் வீட்டில் சமைத்த உணவையே ஊட்டுங்கள்.

### பிள்ளைகளுக்கான மேலதிக உணவூட்டல்?

1. நன்கு மசிக்கப்பட்ட உணவு-கப் (100 மி.லீ)

6 ஆம் மாத முடிவில் இருந்து (181 வது நாளிலிருந்து) 3 வேளை பிரதான உணவுகள்.

2. சிறு துணிக்கைகள் உள்ள உணவு ¾ கப் (150 மி.லீ)

8 ஆம் மாதத்தில் 3 வேளை பிரதான உணவுடன் 1-2 வேளை சிற்றுண்டிகள், பழங்கள் யோகட் போன்றன.

3. விரல்களால் பிடித்து உண்ணும் உணவு கப் (150 மி.லீ)

11 ஆம் மாதம் முடியும் வரை 3 வேளை பிரதான உணவுடன் 1-2 சிற்றுண்டிகள் பழங்கள், யோகட் போன்றன.

4. குடும்ப உணவு 1 கப் (200 மி.லீ)

12 ஆம் மாதம் தொடக்கத்திலிருந்து 3 வேளை பிரதான உணவுடன் 1-2 சிற்றுண்டிகள், பழங்கள், யோகட் போன்றன.

குழந்தைகளுக்கு ஒரு வயது வரும் வரை சீனி, உப்பு என்பவற்றைத்தவிருங்கள்.

சுகாதாரத் திணைக்களம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org